# நாடோடி

## ஹே, அனுராதா!

609

பிரசுரம்
நாடோடி
தியாகராயநகர் ★ சென்னை

முதற் பதிப்பு ஜூன் 1946

சகல உரிமையும் ஆசிரியருக்கே

விலை ரூபாய் மூன்று

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், மதராஸ்
M.S. 120 A: காபேடி MS 120B

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஹே, அனுராதா ! | ... 9 |
| பெற்றோர்கள் ஜாக்கிரதை | ... 16 |
| அட கழுதை, நீயா ! | ... 25 |
| ஒரு சொட்டுக் கண்ணீர் | ... 30 |
| அனுவை அழைத்துப் போங்கள் | ... 39 |
| பெண்கள் நீடூழி வாழ்க ! | ... 47 |
| வீட்டை மாற்றிப் பார் | ... 55 |
| அடுத்த வீட்டு ஜன்னல் | ... 63 |
| தடியெடுத்தவன் தண்டல்காரன் | ... 71 |
| வைத்தியர்கள் ஜாக்கிரதை ! | ... 79 |
| ஸ்ரீமதி ஸரஸ்வதி அவர்களுக்கு ! | ... 88 |
| சமையல் அறையில் விடாதே | ... 95 |
| முன்னொரு காலத்தில் | ... 103 |
| பின்னொரு காலத்தில் ! | ... 109 |
| சமுத்திர லோகத்தில் | ... 116 |
| யமலோகத்தில் | ... 124 |
| வைகுண்டத்தில் | ... 129 |
| அபாயம் நெருங்கிவிட்டது ! | ... 135 |
| பையன் இருந்தால் சொல்லுங்கள் ! | ... 143 |
| டில்லி முண்டு | ... 148 |
| ஐயா கணக்கு வாத்தியாரே ! | ... 154 |
| என்ஜின் விட்ட கண்ணீர் | ... 161 |
| அந்த நாலு பேர் | ... 165 |
| பரீக்ஷைக்கு முதல் நாள் | ... 170 |
| இடம் கொடுத்தல் | ... 175 |

# நாடோடி எழுதிய நூல்கள்

நாடகமே உலகம்

பிழைக்கும் வழி

இதுவும் ஒரு பிரகிருதி

ஒரு நாள் கூத்து

அட பரமசிவா!

படித்த பெண் வேண்டாம்!

எங்கள் குடும்பம் பெரிது

ஹே அனுராதா!

என்னைக் கேளுங்கோன்னா

முடியாத யுத்தம்

# ஹே, அனுராதா!

**ஹே!** அனுராதா!........ஏ, உன்னைத் தான்!........ என்ன, அப்பொழுது பிடித்துக் கத்து கிறேன், காது கேட்க வில்லையா, என்ன?........ஏ, அனு! உன்னைத்தான்! .......அட, கழுதை! அனு என்று கூப்பிட்டால்தான் திரும்பிப் பார்ப்பாயோ! இந்தா, கையில் இருக்கும் பத்திரிகையைச் சற்று அப்பால் வைத்து விட்டு, என்னைப் பார்!........ என்ன, அந்தப் பத்திரிகையைக் கிழித்து விட்டுத் தான் மறு காரியமோ?........சரி, கிழி! நீ கிழித்து முடிகிறவரையில் காத்திருக்கிறேன்........என்ன, கிழித்து முடித்தாகி விட்டதா? சரி என்னைப் பார்!

நேற்று நானும், உன் அம்மாவும் மாறி மாறிச் சுருதியை உயர்த்திக்கொண்டே பேசிக்கொண்டு போனோமே, ஞாபகம் இருக்கிறதா?........என்ன தலையை ஆட்டுகிறாய்! ஞாபகம் இல்லை? முதலில் நான் சரசுவுக்கு மாத்திரம் காது கேட்கும்படி பேசினேன். அவள் உடனே பக்கத்து வீட்டுக்கு மாத்திரம் கேட்கும்படி பேசினாள். அதற்கு நான் அதற்கடுத்த வீட்டுக்கு மட்டும் காது கேட்கும்படி பதில் சொன்னேன். அதற்கு அவள் அதற்கும் அடுத்த வீட்டுக்கு மாத்திரம் கேட்கும்படி விடை இறுத்தாள். இப்படியாக மாறி, மாறிப் பேசிக் கொண்டே போனோமே?

........அட கழுதை! ஞாபகம் இருக்கிறதா? அதுதான் உன் பொக்கை வாயைக் காண்பித்துச் சிரிக்கிருயா ?........இனிமேல் பொக்கை வாய் என்று சொன்னல் நீ சண்டைக்கு வந்தாலும் வந்து விடுவாய். உனக்குப் பல் முளைக்க ஆரம்பித்து விட்டது.

சரி, நாங்கள் இருவரும் எதற்காக அப்படித் தொண்டையைக் கிழித்துக் கொண்டோம் என்று தெரிந்து கொள்ள உனக்கு ஆவலாக இருக்கிறதல்லவா? இதோ சொல்லுகிறேன். எல்லாம் உன்னல்தான்.

என்ன அப்படி விழித்துப் பார்க்கிருய்? 'புருஷன், மனைவி சண்டைக்கு நான் எப்படிக் காரணம்?' என்று கேட்கிருயா? எல்லாம் உன் கல்யாண விஷயமாகப் பேசப் போய்தான்.

"என் கல்யாணத்தைப் பற்றி அதற்குள் என்ன அவசரம்? அதைப்பற்றி அதற்குள் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது?" என்று கேட்கிருயா?

நீ எந்த நாட்டில் பிறந்திருக்கிருய் என்று தெரிந்தால் இந்தக் கேள்வியைக் கேட்க மாட்டாய். அதோ, அந்தப் புஸ்தகத்திலிருந்து கிழித்துக் கொண் டிருக்கிருயே, அது தான் நம் தேசத்தின் படம். நம் நாட்டுக்கு இந்தியா என்று பெயர்.

இந்தியா என்ருல் சீமை என்று அர்த்தமல்ல. சீமை வேறு, இந்தியா வேறு! சீமை வழக்கங்கள் வேறு, நம் நாட்டு வழக்கங்கள் வேறு. சீமையில்

பெண் பிறந்தால் அதன் கல்யாணத்தைப் பற்றிப் பேசமாட்டார்கள். ஆனால் நம் நாட்டில் பெண் என்று ஒருத்தி பிறந்து விட்டால், அவளை எப்படா ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்து வீட்டை விட்டு வெளியில் அனுப்புவது என்பதைப் பற்றித் தான் யோசனை.

உன் கல்யாண விஷயமாகச் சண்டை நிகழ்வது நேற்றுத்தான் என்று நினைத்துக் கொள்ளாதே. இந்தப் பத்து மாத காலமாக, அதாவது நீ பிறந்ததிலிருந்து உன் கல்யாண விஷயமாக ஒரு நூறு பேரோடாவது நான் சண்டை போட்டிருப்பேன்.

எதற்காக அப்படி ஒரு மாதிரி என்னைப் பார்த்துச் சிரிக்கிறாய்? கல்யாண விஷயமாக எதற்காகச் சண்டை போடவேண்டும், பேசினால் போதாதா என்று கேட்கிறாயா?

நம் நாட்டின் விசேஷமே என்னவென்றால் கல்யாணம் என்றாலே அதற்கு அடுத்தபடியாக ஞாபகத்துக்கு வரும் வார்த்தை சண்டைதான். நீ இன்னும் சின்னக் குழந்தையாக இருப்பதால் உனக்கு விஷயம் தெரியவில்லை. நீ பெரியவளானதும் கல்யாண விஷயமாக நடக்கும் சண்டைகளைப் பார்த்து உனக்கே சிரிப்பு, சிரிப்பாக வந்து கொண்டிருக்கும்.

முதலில் பிள்ளையும், பெண்ணும் ஒருவரையொருவர் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று சண்டை! பிள்ளையும் பெண்ணும் தான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவர்

களானாலும் அவர்கள் சம்மதத்தை யாரும் கேட்க மாட்டார்கள். பெற்றோர்கள் தங்களுக்குப் பிடித்த மாய் இருக்கிறதா, அதனால் தங்களுக்கு அனுகூலம் உண்டா என்பதை மாத்திரம் கவனிப்பார்கள். இதனால் கல்யாண விஷயமாகப் பெற்றோர்களுக்கும், கல்யாணத்துக்கு நிற்கும், பிள்ளை பெண்களுக்கும் சண்டை ஏற்படுவதும் உண்டு.

சில சமயம் பிள்ளையோடோ, பெண்ணோடோ சண்டை வருவதற்கு முன்னர் பெற்றோர்களே தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்வதும் உண்டு. நான் சரசுவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும்போது அப்படித்தான் உன் தாத்தாவுக்கும், பாட்டிக்கும் இடையே பிரமாத சண்டை வந்து விட்டது.

உன் தாத்தாவுக்கு என்னைப் பிடித்திருந்தது. சரசுவை எனக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். ஆனால் உன் பாட்டிக்கு என்னைப் பிடிக்கவில்லை. தாத்தா கட்சிதான் ஜயித்தது. அதனால் தாத்தா வீட்டில் தாத்தாதான் அதிகாரி, தாத்தாவைக் கைக்குள் போட்டுக்கொண்டால் போதும் என்று நினைக்காதே.

தாத்தா கட்சி ஜயித்ததற்கு முக்கியமான காரணம் சரசுவும் என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்ததுதான்.

மற்றப்படி நம் வீட்டில் சரசு எப்படி சர்வாதிகாரியாக விளங்குகிறாளோ, அதைப் போலத்தான்

தாத்தா வீட்டில் பாட்டியும் சர்வாதிகாரியாக விளங்குகிருள். ஆகவே பாட்டியின் தயவையே சம்பாதிக்கப் பார் !

என்னமோ சொல்லிக் கொண்டிருந்தவன் எங்கேயோ போய் விட்டேனே. என்ன சொல்லிக் கொண்டிருந்தேன் !........ஆம், கல்யாணம் ஆவதற்கு முன் பெற்ருேர்களுக்குள் சண்டை ; பிறகு கல்யாணம் நடக்கும்போது சம்பந்திகளுக்குள் சண்டை! பாக்கிச் சண்டைகள் நடக்காமல் இருந்தாலும் இருக்கலாம், நடக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. ஆனல் சம்பந்திச் சண்டை கட்டாயம் நடந்துதான் ஆகவேண்டும் என்ற ஒரு வித ஒப்பந்தமே இருக்கிருப்போல் தோன்றுகிறது.

இதற்குப் பிறகு புருஷனும், மனைவியும் போட்டுக்கொள்ளும் சண்டைகளைப் பற்றி நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. இந்தப் பத்து மாத காலமாகத்தான் நீ எல்லாவற்றையும் கவனித்து வருகிருயே !

ஆகவே, உன் கல்யாண விஷயமாகவும் இது வரை எத்தனையோ சண்டைகள் ஏற்பட்டு விட்டன.

முதல் சண்டை மதுரையில் ஆரம்பித்தது. உன் அத்தைக்கும் எனக்கும் சண்டை. உன்னைத் தன் பிள்ளை மணிக்குத்தான் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டும் என்று அத்தை வார்த்தையை ஆரம்பித்தாள்........என்ன கேட்கிருய் ? நீ மூன்று மாதக் குழந்தையாக இருக்கும்போது உன்னை மதுரைக்கு அழைத்துக் கொண்டு போனேனே, ஞாபகம் இல்லை ? அப்பொழுது ஒரு ஐந்து வயது

பையன், மூக்கை ஒழுக விட்டுக்கொண்டு, அத்தை முந்தானையைப் பிடித்துக்கொண்டு அழுது கொண்டிருந்தானே, அவன்தான் மணி!

அந்தப் பயலைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் அவன் பள்ளிக்கூடத்திற்கே போகிறதில்லை. தற்காலப் பள்ளிக்கூடப் படிப்பினால் நன்மையை விடத் தீமைதான் அதிகம் என்று நாங்கள் எல்லாரும் பள்ளிக் கூடத்துக்குப் போய்த் தெரிந்து கொண்டிருக்கும் விஷயத்தை அந்தப் பையன் பள்ளிக்கூடம் போகாமலே தெரிந்து கொண்டிருக்கிறான்.

"பள்ளிக்கூடத்துக்கே போகமாட்டேன் என்கிறான், மக்கு! இவனுக்கு எங்க அனுவைக் கொடுக்க முடியாது!" என்று சொன்னேன். நான் அப்படி விளையாட்டாகச் சொன்னது உன் அத்தைக்குக் கோபம் வந்துவிட்டது. வந்துவிட்டாள் என்னுடன் சண்டைக்கு. உங்கள் இரண்டு பேரில் யார் அதிக அழகு, யாருக்குப் புத்திசாலித்தனம் ஜாஸ்தி என்று எங்களுக்குள் சண்டை வந்துவிட்டது. நான் உன் கட்சியைத்தான் ஆதரித்துப் பேசினேன் என்பது உனக்கு ஞாபகம் இருக்கலாம்.

**அ**ன்றைக்கு உன் கல்யாண விஷயமாக ஆரம்பித்த சண்டைதான் இன்றுவரை இன்னும் முடியவில்லை. தன் பிறந்த வீட்டுவகையில் உறவான ஒருவனுக்கு உன்னைக் கொடுக்கவேண்டும் என்றாள் சரசு. நான் முடியவே முடியாது என்றேன். 'சரசு சொன்ன பயல் இன்னும் பள்ளிக்

கூடத்துக்குக்கூடப் போக ஆரம்பிக்கவில்லை. எப்பொழுது பார்த்தாலும் அம்மாவைச் சுற்றிச் சுற்றிவந்து கொண்டிருக்கிறான். இந்த அம்மாக் கோதண்டராமன் வாழ்க்கையில் என்ன பண்ணப் போகிறான் என்று நினைத்துத்தான் நான் உன்னை அவனுக்குக் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டேன். என்ன அனு! நான் சொல்லுகிறது சரிதானா ?

....அட கழுதை! என்னத்தைக் கிழிக்கப் பார்க்கிறாய்? பாரதியார் பாடல்களையா? கொண்டா புஸ்தகத்தை இப்படி! என்ன, கொடுக்க மாட்டாயா? உனக்கு இருக்கும் பிடிவாதம் வேறு யாருக்கு இருக்கும்? இப்பவே இத்தனை பிடிவாத மாக இருக்கிறவள் பின்னால் எங்கே நாங்கள் சொன்னபடி கேட்கப் போகிறாய்? வீணாக நானும் உங்கம்மாவும் உன் கல்யாணத்தைப் பற்றிச் சண்டைப் போட்டுக்கொள்கிறோமே, அதுதான் மிச்சமோ, என்னமோ!

○ ☆ ○

# பெற்றோர்கள், ஜாக்கிரதை!

[குறிப்பு: இக் கட்டுரையில் வரும் விஷயங்களுக்கு நான் துளிக்கூடப் பொறுப்பாளியல்ல. இக் கட்டுரையின் முழுப் பொறுப்பும் இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் பிறந்த என் பெண் அனுராதாவைச் சேர்ந்தது. அவள் தன் 'ங்கு'ப் பாஷையில் சொன்னதைத்தான் நான் எல்லோருக்கும் புரியும்படியான தமிழ்ப் பாஷையில் எழுதியிருக்கிறேன்.]

இரண்டு வாரங்களுக்கு முன்பாக என் தகப்பனார் ரொம்பப் பிரமாதமாக "வைத்தியர்கள், ஜாக்கிரதை" என்று ஒரு கட்டுரை எழுதினாரே, ஞாபகம் இருக்கிறதா? ஆனால் வைத்தியர்களைவிட நாம் கண்டு ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய ஆசாமிகள் யாராவது உண்டென்றால் அது இந்தப் பெற்றோர்கள்தான் என்று என் பொக்கை வாயால் கூசாமல் கூறுவேன்.

அப்பா! இந்தப் பெற்றோர்களிடம் அகப்பட்டுக் கொண்டு நான் படும் அவஸ்தையைச் சொல்லி முடியாது. ஒவ்வொரு சமயம் இந்தப் பெற்றோர்களை நினைக்கும்போது குழந்தைகளைப் படைத்த இந்தப் பிரம்மன் ஏன் இந்தப் பெற்றோர்களையும் படைத்தான் என்று தோன்றுகிறது.

வேறு ஒன்றும் வேண்டாம், முதலில் இந்தப் பெயர் விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! நான் பிறந்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகப் போகிறது. ஆனால் எனக்கு என்ன பெயர் என்பது இன்னும் நிச்சயமாகவில்லை. ஒரு நாளைக்கு எங்

கப்பா என்னை அனுராதா என்று கூப்பிடுகிருர். அடுத்த நாளே நிர்மலா என்று அழைக்கிருர். எனக்கு எந்தப் பெயருக்கு நாக்கை நீட்டுவது என்ருே, ஒரு பொக்கைவாய்ச் சிரிப்பு சிரிப்பது என்ருே தெரியவில்லை.

அப்பாதான் இப்படியென்ருல் அம்மா அதற்குத் துளிக்கூடச் சளைத்தவளல்ல. என்னைப் பார்க்க அவள் சிநேகிதிகள் எல்லாம் தினம் ஒருத்தியாக வந்து கொண்டிருக்கிருள். "படித்த பெண்கள்" என்று எங்கப்பா ஒரு கட்டுரை எழுதினுரே, அதில் வரும் பெண்களைப் போலவே எல்லாரும் இருக்கிருர்கள். ஒவ்வொருத்திக்குக் காது இருக்கிறதா என்பதே சந்தேகமாய் இருக்கிறது. காது இருக்கிறது அவர்களுக்கு அவமானமாக இருக்கிறதோ, என்னமோ, எல்லாப் பெண்களும் தலைமயிரால் தங்கள் காதை மூடிக் கொண்டிருக்கிருர்கள்.

இந்தப் படித்த பெண்கள் ஒவ்வொருத்தியும் எனக்கு என்ன பெயர் என்று எங்கம்மாவைக் கேட்கிருர்கள். அம்மா என்ன பெயர் சொன்னுலும் அவர்களுக்குக் கர்நாடகமாக இருக்கிறது. உடனேயே முகத்தைச் சுளித்துக் கொண்டு, தங்கள் மோவாக் கட்டையைத் தோள் பட்டையில் ஒரு இடி இடிக்கிருர்கள். "ஐயேடி!" என்று அங்கலாய்க்கிருர்கள். உடனேயே எங்கம்மா என் பெயரை மாற்றி வாயில் நுழையாத பெயர் கொடுத்து வருகிருள். அடுத்த நாளே இந்தப் பெயர் போய் இன்னெரு பெயர் வருகிறது.

இப்படியாக அப்பாவும், அம்மாவும் மாறி, மாறி, தங்களுக்குத் தோன்றின பெயர்களை யெல்லாம் வைத்துக்கொண்டு போகிறார்களே யொழிய, துளியாவது, பெயரை வைத்துக்கொள்ளப் போகிறவளை அவளுக்குப் பெயர் பிடித்திருக்கிறதா, இல்லையா என்று ஒரு வார்த்தை கேட்போம் என்று கிடையாது. பெற்றோர்களின் கொடுமைக்கு இதை விட வேறு என்ன அத்தாட்சி வேண்டும், கேட்கிறேன். பெற்றோர்கள் கொடுக்கும் பெயரை வைத்துக் கொண்டு பின்னால் அவஸ்தைப்படப் போகிறவள் நானா, அவர்களா? பின்னால் இந்தப் பெயரை நான் மாற்றிக் கொள்ள விரும்பினாலும், ஐந்து ரூபாயோ, பத்து ரூபாயோ கொடுத்தல்லவா மாற்றிக் கொள்ள வேண்டுமாம்?

இந்தக் கோபத்தை நான் என் பெற்றோகள் மீது காண்பிப்பதற்கு ஒரு நல்ல வழி கண்டு பிடித்து வைத்திருக்கிறேன். என்னைப் பார்ப்பதற்கு என் பெற்றோர்களின் சிநேகிதர்கள் அடிக்கடி வருகிறார்கள் அல்லவா? அவர்கள் வரும்போதெல்லாம் நான் சிரிக்கவேண்டும் என்று என் பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்கள். நான் சிரித்து விட்டால் அவர்கள் படும் சந்தோஷம் சொல்லி முடியாது. ஆனால் எனக்கு என் பெற்றோர்கள் மீதுள்ள கோபத்தைக் காண்பிப்பதற்காக, வேணுமென்றே அப்பொழுது என்று சிரிக்கவே மாட்டேன். விளக்கெண்ணெய் குடித்தவள் போல் முகத்தை வைத்துக் கொள்வேன். (ஏதோ எல்லாரும் எழுதுவதுபோல் இந்த வசனம் சொன்னேனே

ஒழிய, உண்மையில் விளக்கெண்ணெய் எனக்கு மிகவும் ருசியாகவே படுகிறது).

"சிரி சிரி" என்று அப்பா என் கையைப் பிடித்து ஆட்டுவார். "சிரி, சிரி" என்று அம்மா உதட்டைத் தட்டுவாள். "சிரி, சிரி" என்று என் அத்தை பாரு கன்னத்தைப் பிடித்துக் கிள்ளுவாள். "சிரி, சிரி" என்று சித்தப்பா பாலு (அரட்டைக் கல்லி பாலுதான், வேறு யாரும் இல்லை) கோணங்கிகள் எல்லாம் செய்து காண்பிப்பார்.

ஆனல் நான் இதற்கெல்லாம் ஒன்றும் மசிய மாட்டேன். பல்லைக் கடித்துக் கொண்டு (ஓஹோ! எனக்கு இன்னும் பல் வளரவில்லையோ! சரி, 'உதட்டைக் கடித்துக் கொண்டு' என்று வைத்துக் கொள்ளுங்களேன்?) சிரிக்காமலேயே இருப்பேன். அப்பொழுது பார்க்கவேண்டுமே எங்கப்பா முகத்தை! விளக்கெண்ணெய் குடித்தவர் முகம் எப்படி இருக்கும் என்று பார்க்க விரும்புகிறவர்கள், எங்கப்பா முகத்தைப் பார்த்தால் போதும்!

சிரிப்பு என்றதும் அழுகை வருகிறது, அதாவது என் அழுகை விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது.

இந்த என் பெற்ருேர்களைப் போல அத்தனை அசட்டுப் பெற்ருேர்கள வேறு எங்காவது இருப்பார்களா என்பது சந்தேகம் தான். என்ன நீங்களே, சொல்லுங்கள், ஒரு குழந்தை அழுதால் எதற்காக அழுகிருள் என்று கூடக் கண்டு பிடிக்கத்

தெரியாத பெற்றோர்கள் என்ன பெற்றோர்கள் என்று கேட்கிறேன் ?

நான் பிறந்த முதல் மாதம் தொப்புள் புண் ஆறாமல் மிகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது நடுவில் நடுவில் வலி பொறுக்காமல் அழுவேன். சில சமயங்களில் எங்கம்மா அதற்காகக் கண்ட மருந்தைப் போட்டு என்னை செய்யும் சித்திரவதை பொறுக்காமலும் அழுவேன். அழுதால், தொப்புள் புண் வலிக்கிறது, அதுதான் அழுகிறாள் என்று தெரிந்துகொள்ள மாட்டார்களோ ?

அது தெரியாமல் எங்கப்பா, "குழந்தைக்குப் பசிக்கிறது போலிருக்கிறது. பால் கொடேன்" என்பார். அம்மாவும் உடனே அவசரம் அவசரமாகப் புட்டிப்பாலைக் கரைத்து எனக்குப் புகட்ட ஆரம்பிப்பாள். "இப்படியும் இருப்பார்களா, பெற்றோர்கள்!" என்று நான் சிரிப்பேன். இதைப் பார்த்துவிட்டு, "பார்த்தாயா! குழந்தைக்குப் பசி. அதுதான் அழுதிருக்கிறாள். இப்பொழுது பால் உள்ளே சென்றதும் சிரிக்க ஆரம்பித்து விட்டாள்" என்பார் எங்கப்பா !

ஆனால் பால் குடித்ததனால் தொப்புள் புண் வலி அடங்கிவிடுமா ? அதனால் நான் வந்ததை விடுவானேன் என்று கிடைத்த பாலை மடக், மடக் கென்று குடித்து விட்டுக் கடைசியில் 'வீல்' என்று கதறி அழ ஆரம்பிப்பேன். வயிறு நிரம்பின பிறகும் அழுகிறாளே, ஏதோ வேறு காரணத்துக்காகத்தான் அழுகிறாள் என்று தெரிந்துகொள்ள

வேண்டாமோ? அது தெரியாமல் எல்லாரும் சேர்ந்து என்னைக் கன்னா பின்னாவென்று திட்டுவார்கள்.

“அப்பா! நன்னா பால் குடிக்க அலைகிறாள்! நாள் முழுவதும் குடி என்றாலும் குடித்துக் கொண்டேயிருப்பாள் போலிருக்கு” என்று பழிப்பார்கள். சித்தப்பா பாலு என்னைப் பார்த்து “பீப்பாய்” என்று கூப்பிடுவார். இருக்கட்டும் இன்னும் கொஞ்ச காலம் போனால் பேசத்தான் போகிறேன். அப்பொழுது பார்த்துக் கொள்கிறேன்!

நான் எதற்காக அழுகிறேன் என்று என் பெற்றோர்கள் தெரிந்து கொள்ளாததால் நான் தினம் அவதிப்படுகிறேன். நான் பசியால் அழும் போதெல்லாம் என் தொப்புள் புண்ணுக்கு மருந்து போடுகிறார்கள். நான் தூக்கக் கலக்கத்தினால் அழும் போதெல்லாம் பாலைப் புகட்டுகிறார்கள். தொப்புள் புண் வலிக்கிறது என்று அழும்போதெல்லாம் என்னைத் தூங்க வைக்கிறார்கள்.

இத்தனையிலும் நான் அழுகை ஓயமாட்டேன். அவர்கள் நான் எதற்காக அழுகிறேன் என்று காரணம் கண்டு பிடிக்கும்வரை நான் எப்படி அழுகையை நிறுத்த முடியும்?

இப்பொழுது கொஞ்ச நாளாக என் அத்தை பாரு என் அழுகையை அடக்குவதற்கு ஒரு யுக்தி கண்டு பிடித்திருக்கிறாள். நான் அழும் போதெல்லாம் ரேடியோவைத் திருப்பி விடுகிறாள். ரேடியோ

பாட ஆரம்பித்ததும் நான் அழுகையை நிறுத்தி விடுகிறேன். "குழந்தை பாட்டுக் கேட்கிறது, பாட்டுக் கேட்கிறது" என்று ரேடியோவை மூடாமலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நான் அழுகையை நிறுத்துவதன் உண்மைக் காரணம், பாட்டைக் கேட்டு மோகித்து அல்ல. "நான் அழுகையை வேண்டுமானாலும் நிறுத்திக் கொள்கிறேன். அந்தப் பாழும் ரேடியோ சங்கீதம் வேண்டாம்" என்று சொல்வதற்காகத் தான். ஆனால் இந்தப் பெரியோர்களுக்கு மூளை இருந்தால்தானே ?

இந்தப் பெரியவர்களுக்கு மூளை இல்லை என்பதற்கு இன்னொரு உதாரணம் கூறுகிறேன் கேளுங்கள். எங்கேயாவது ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா ? எங்கம்மாதான் பாக சாஸ்திரப்படி சமையல் செய்கிறாள் என்றால் எங்கப்பா என்னைப் பால சாஸ்திரப்படி வளர்க்க ஆரம்பித்திருக்கிறார். "குழந்தைகளை வளர்ப்பது எப்படி ?" என்று பெயர் போட்டிருக்கும் அநேகப் புத்தகங்களை ஊரில் உள்ள எல்லா வாசகசாலைகளி லிருந்தும் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார் அப்பா !

அந்தப் பாழும் புஸ்தகங்களிலே, ஒன்றில் போட்டிருக்கிறாப்போல் இன்னொன்றில் போட்டிருக்காது போல் தோன்றுகிறது. "குழந்தை தூங்குவதற்குத் தொட்டிலை ஆட்டு" என்று ஒரு புஸ்தகத்தில் போட்டிருக்கிறது. உடனே அன்றைக்கெல்லாம் தொட்டிலை ஆட்டுகிறார்கள். மறு நாள் வாசிக்கும் புஸ்தகத்தில், "தொட்டிலை ஆட்

டாதே. குழந்தை அழுது, அழுது தானே தூங்கும்" என்று போட்டிருக்கிறது. உடனே தொட்டிலை ஆட்டாமல் தொண்டை காய என்னை அழும்படி விட்டு விடுகிருர்கள்.

இந்தப் பாழும் புஸ்தகத்திஞல் எங்கப்பாவுக்கும், வீட்டில் உள்ள மற்றவர்களுக்கும் ஒரு தடவை சண்டையே வந்து விட்டது. "குழந்தை அழுதால் எதற்காக அழுகிருள் என்று காரணத்தைக் கண்டு பிடி. உடனே காரணத்தை அகற்று" என்று ஒரு புஸ்தகத்தில் போட்டிருக்கிறது போலிருக்கிறது. ஒரு நாள் நான் எதற்காகவோ அழுது கொண்டிருந்தேன். (எதற்காக அழுதேன் என்று கேட்கிறீர்களா? தினம் நூறு தடவைக்குக் குறையாமல் அழும்போது எதற்காக அழுதேன் என்று எப்படி ஞாபகம் வைத்துக் கொள்ள முடிகிறது? அழுது, அழுது பழக்கமாகப் போய், சில சமயங்களில் காரணமின்றியே அழுகிறேனே என்று கூடத் தோன்றுகிறது.)

அப்பொழுது என் வீட்டில் எல்லாரும் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். எங்கப்பா குழந்தை அழுவதற்குக் காரணம் எல்லாரும் சத்தம் போடுவதுதான் என்று தீர்மானித்து வீட்டில் உள்ள எல்லாரையும் வெளியே அகற்ற ஆரம்பித்து விட்டார்!

என் பெற்ருேர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நான் பால் விஷயத்தில் கூட ஜாக்கிரதையாக இருக்க வேண்டி யிருக்கிறது. ருசி கண்ட பூனை உரிக்கு உரி தாவும் என்று சொல்வார்களே,

அதைப்போல ஆகிவிட்டார்கள் எங்கப்பாவும் அம்மாவும்.

ஒரு நாள் நான் பால் குடிக்காமல் அழுது கொண்டிருந்தேன். பால் மிகவும் ருசியாக இருக்கும் என்று காண்பிப்பதற்காக அப்பா பால் புட்டியில் இருந்த பாலை எனக்குக் குடித்துக் காண்பித்தார். அவர் பாலைச் சற்று ருசி கண்டது எனக்கு அனர்த்தமாய்ப் போய்விட்டது. இப்பொழுதெல்லாம் புட்டிப் பாலை எனக்கென்று கரைத்தாலும் எனக்கு முழுவதும் கொடுப்பது கிடையாது. ருசியாய் இருக்கிறது என்று அப்பாவும், அம்மாவும் மாறி, மாறிக் குடித்து விடுகிறார்கள்! இப்படிக் குடித்து விட்டு, நான் குண்டாக வளர வில்லையே என்று குறை சொல்லுகிறார்கள்!

இப்பேர்ப்பட்ட பெற்றோர்களைக் கண்டு "ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கத் தோன்றுமா, தோன்றாதா, தயவு செய்து நீங்களே சொல்லுங்கள்!

○ ☆ ○

# "அட கழுதை, நீயா!"

என்னுடைய வெகுநாளைய நண்பர் ஒருவர் திடீரென்று இரண்டு நாளைக்கு முன்பு என்னோடு கோபித்துக் கொண்டு விட்டார். கோபித்துக் கொண்டது போதாது என்று என்னை ஒரு மாதிரி பார்க்கவும் ஆரம்பித்து விட்டார். என்னைப் பார்த்த போதெல்லாம் அவர் ஆடு திருடின கள்ளனைப் போல் விழிக்க ஆரம்பித்தார். அதிலிருந்து என்னை ஒரு திருடனைப் பார்ப்பதுபோல் பார்க்கத் தொடங்கி யிருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன். இந்தக் காலத்தில் திருடர்களைவிட, திருட்டுக் கொடுத்தவர்கள்தானே ஆடு திருடின கள்ளர்களைப்போல் விழிக்கிறார்கள்?

ஆனால் என்ன யோசித்துப் பார்த்தும், அவர் சொத்தை நான் என்ன திருடினேன் என்றே எனக்குப் புலப்படவில்லை. எனக்குத் தெரிந்து அவர் சாமான் ஒன்றையும் நான் விளையாட்டுக்குக் கூடத் திருடினதாக ஞாபகமில்லை. ஆகவே விஷயம் தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கையில் எங்கள் இருவருக்கும் பொது நண்பரான ஒருவர் விஷயத்தை விளக்கினார்.

சதிபதிகள் வாழ்க்கை நடத்துவது எப்படி என்பதைப் பற்றிக் கன்னா பின்னா வென்று எத்தனையோ புஸ்தகங்கள் எழுதப்படுகின்றன அல்லவா? அவற்றில் என் நண்பர் ஒரு புஸ்தகம் வாங்கி வைத்திருந்தார். அதை நான் அவரிட

யிருந்து இரவல் வாங்கிப் படித்துத் திருப்பிக் கொடுத்து விட்டேன். அப்படித் திருப்பிக் கொடுத்த அந்த புஸ்தகத்தின் நடுவில், நண்பர் வெகு சுவாரஸ்யம் என்று கருதியிருந்த சில பக்கங்களைக் காணவில்லையாம்! அதனால்தான் நண்பர் என்னை அப்படி ஆடு திருடின கள்ளனைப்போல் விழித்து, விழித்துப் பார்த்தாராம்!

நான் புஸ்தகத்தின் சில ஏடுகளைக் கிழித்துக் கொண்டு விட்டதாக என் நண்பர் என்மீது குற்றம் சாட்டியதைப் பற்றிக்கூட நான் கவலைப்பட வில்லை. ஆனால் அந்தப் புஸ்தகத்தில், அதுவும் அவர் சுவாரஸ்யம் என்று கருதின ஒரு பகுதியைக் கிழித்துக்கொண்டு விட்டேன் என்று அவர் என் மீது குற்றம் சாட்டியதுதான் எனக்கு வெகு வருத்தமாக இருந்ததுடன், வெட்கமாகவும் இருந்தது.

இந்த மர்மத்தை எப்படியாவது நானாகவே கண்டு பிடிப்பது என்று மண்டையை உடைத்துக் கொண்டேன். மண்டை உடைபட்டதுதான் மிச்சமே யொழிய, மர்மம் துலங்கவில்லை.

இப்படி இருக்கையில் திடீரென்று இன்னொரு ஆபத்து நேர்ந்தது.

சுவாரஸ்யமான நாவல் ஒன்று வாசித்துக் கொண்டிருந்தேன். அதில் கதாநாயகன் அநேக திருடர்களை விரட்டி யடித்து விட்டுப் புகழ்மாலை யுடன் திரும்பி வரும் கட்டம்.

ஒரு பத்து பக்கங்கள் கதாநாயகன் தான் திருடர்களை விரட்டி யடித்த சாமர்த்தியத்தைப் பற்றிக் கதாநாயகியிடம் சொல்லிப் பெருமையடித்

துக் கொள்கிறன். ஒரு பக்கத்தின் கடைசி வரியில் கதாநாயகி, "உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்." என்று கதாநாயகனைப் புகழ்கிறுள்.

ஆனல் அடுத்த பக்கத்தின் முதல் வரியில் "உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்" என்று திருடர் தலைவனின் மனைவி தன் புருஷனைப் புகழ்ந்து கொண்டிருக்கிறுள். என்னடா விஷயம் புரியவில்லை என்று மேலே படித்தால் கதாநாயகன் திருடர்களிடம் சிக்கிக்கொண்டு விட்டான் என்று தெரிகிறது.

முதல் பக்கக் கடைசி வரியில் தன் மனைவியோடு பேசிக்கொண்டிருந்த கதாநாயகன் அடுத்த பக்கத்து முதல் வரியில் எப்படித் திருடர்களிடம் அகப்பட்டுக் கொண்டான் என்று நான் திகைத்துப் பக்க எண்ணிக்கையைப் பார்த்தேன். பார்த்தால் 101-வது பக்கத்திலிருந்து 110-வது பக்கம்வரை புஸ்தகத்தில் காணவில்லை. நடுவில் யாரோ மாயமாகப் பத்துப் பக்கங்களைக் கிழித்துக் கொண்டு போய் இருக்கிறுர்கள்!

சதிபதிகளைப் பற்றிய புஸ்தகத்தில் 'சுவாரஸ்யமான' பகுதியைத் திருடிக் கொண்டு போன அதே கள்ளன்தான், இப்பகுதியையும் திருடியிருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

இதற்குப் பிறகு இப்புஸ்தகக் கள்ளன் காரியங்கள் ஒன்றுக்குமேல் ஒன்று அதிகரித்துக் கொண்டு வந்தன.

என் தங்கை பாரு தன் பள்ளிக்கூட சிநேகிதி எழுதிய பேத்தல் கதை ஒன்றைக் கொடுத்து அபிப்பிராயம் சொல்லும்படி கேட்டிருந்தாள். அந்தக்

கதையா, துளிக்கூடப் படிக்கச் சகிக்கவில்லை. சில இடங்களில் காதலனும், காதலியும் நடந்து கொள்ளும் விதம் சற்று அசட்டுப் பிசட்டு என்றுகூட இருந்தது. காரியாலயம் போய்விட்டுச் சாயந்திரம் வீடு திரும்பி வந்தால், அந்தக் கதையை அந்தக் கள்ளன் சுக்கு சுக்காகக் கிழித்துப் போட்டிருந்தான். 'அடே! இக்கதையைப் பற்றி நமக்கு ஏற்பட்ட அபிப்பிராயம் அந்தக் கள்ளனுக்கும் ஏற்பட்டிருக்கிறதே!' என்று வெகு சந்தோஷப்பட்டேன்.

நண்பர் கொடுத்த புஸ்தகத்திலிருந்து 'சுவாரஸ்யமான' பகுதியைக் கிழித்ததையும், மனைவியிடம் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்த கதாநாயகனை அடுத்த கணமே கள்வர் தலைவனிடம் சிக்கவைத்ததைப் பற்றியும்கூட நான் அப்புஸ்தகக் கள்வனை மன்னிக்கத் தயாராய் இருந்தேன்.

கதை விஷயத்தில் மட்டும் இன்றி அரசியல் விஷயமாகவும் அப் புஸ்தகக் கள்வன் நல்ல அழுத்தமான அபிப்பிராயம் கொண்டிருந்தான் என்று அடுத்த நாள் புலப்பட்டது. ராஜாஜியின் அரசியல் போக்கைக் கண்டித்து ஒரு பத்திரிகை தனக்கு வழக்கமாக உள்ள வெகு கேவலமான நடையில் எழுதியிருந்தது. கொஞ்ச காலமாக ராஜாஜி சொன்னதுதான் சரி என்று நிரூபிக்கப்பட்டு வருகிறதே என்று அதற்கு ஆத்திரம்! ஆகவே அப் பத்திரிகையை அத் திருடன் சுக்கு நூறாகக் கிழித்து வைத்திருந்ததைப் பார்த்தபோது நான் கொண்ட சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல.

ஆனால் அந்த அயோக்கியப் பயல் அடுத்த நாள் என்னையே அவமானப்படுத்தத் துணிந்து விட்டான். இதுவரையில் நான் இத்தனை அழகாக எழுதியதுமில்லை, இனிமேல் எழுதப் போவதுமில்லை என்று நான் கருதியிருந்த ஒரு கட்டுரையைக் கிழித்து வைத்திருந்தான். அதைப் பார்த்ததும் எனக்குண்டான கோபம் கொஞ்ச நஞ்சமல்ல. அந்தப் பயலை எப்படியும் கையும் களவுமாகப் பிடித்து விடுவது என்று தீர்மானித்தேன்.

**நே**ற்று காரியாலயத்துக்குப் போய்விட்டு மத்தியானம் இரண்டு மணிக்கு வீடு திரும்பினேன். சரசு கையில் ஒரு நாவலை வைத்துக் கொண்டு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். என் படிக்கும் அறையில் ஏதோ அரவம் கேட்கவே திருடன் அகப்பட்டுக்கொண்டு விட்டான் என்று அடிமேலடிவைத்து உள்ளே எட்டிப் பார்த்தேன். திருடன் வழக்கம்போல் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான். திருடனைப் பார்த்து, "அட கழுதை, நீயா!" என்றேன். வெகு சுவாரஸ்யமாக நான் எழுதிய என் புஸ்தகம் ஒன்றைக் கிழித்துக் கொண்டிருந்த என் ஒன்பது மாதக் குழந்தை அனு என்னைப் பார்த்து, தன் பொக்கை வாயைத் திறந்து கலகலவென்று சிரித்தாள்.

புஸ்தகக் கள்ளன் வேறு யாரும் இல்லை, அனு கழுதைதான் என்று அப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன். தனக்குத் தவழத் தெரிந்து விட்ட அற்புதத்தைக் கொண்டாடுவதற்காக அவள் இப்படிப் புஸ்தகங்களைக் கிழிக்க ஆரம்பித்து விட்டாள்! பலே கைகாரி!

# ஒரு சொட்டுக் கண்ணீர்

அன்று பாரதி தினம் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம், சர்வேசா
இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம்"

என்ற பாரதி பாட்டை ஒரு மாணக்கர் கல்லுங் கரைந்துருகும்படி அத்தனை உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்தார். நல்ல வேளை! கட்டிடம் சிமண்டுக் கட்டிடமாய் இருந்ததால் உருகிக் கீழே விழுந்து விடவில்லை. ஆனால் அந்த மனுஷர் கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீராவது வரவேண்டுமே, கிடையாது!

ஆனால் அந்த மனுஷன் மீதும் வஞ்சனையில்லை. ஒரு சொட்டுக் கண்ணீராவது வரவழைத்தால்தான் தாம் பாவத்தோடு பாடியதாகக் கொள்வார்கள் என்பதற்காக அந்த மாணக்கர் தம் கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வரவழைப்பதற்கு எவ்வளவோ சிரமப்பட்டார்! 'கண்ணீர்' என்ற இடத்தை எப்படி, எப்படி மாற்றி, மாற்றி, இழுத்துப் பாடமுடியுமோ, அப்படியெல்லாம் பாடிப் பார்த்தார். ஊஹூம், அந்தப் பாழும் கண்ணீர் ஒரு சொட்டாவது அவர் உதவிக்கு வந்து அவர் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமே, கிடையாது.

சுதந்திரம் கிடைக்காமல் இந்திய மக்கள் படும் அவதியை மனக் கண்ணால் பார்த்து மனம் உருகின

லாவது கண்ணீர் வருமோ என்பதற்காகக் கண்ணை மூடி, மூடித் திறந்தார். ஊஹூம், ஒரு சொட்டுக் கண்ணீர்கூட கண்ணில் வரவில்லை.

எதிரேயுள்ள அடிமை இந்தியர்களைப் பார்த்துப் பாடாமல், தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்த மின்சார விளக்கைப் பார்த்துப் பாடினாலாவது கண்ணீர் வருமோ என்பதற்காக, விளக்கைப் பார்த்துப் பாடினார். பிரயோசனமில்லை. பிறகு எதிரே இருந்த தூணைப் பார்த்துப் பாடினார். பயன் இல்லை. கீழே தரையைப் பார்த்துப் பாடினார். பலன் இல்லை.

மாணவருக்கு என்ன பண்ணுவது என்றே தெரியவில்லை. செத்துப் போன தம் அருமைப் பாட்டியை நினைத்துக் கொண்டு பாடினாலாவது கண்ணீர் வருமோ என்று பாட்டியையும் நினைத்துக் கொண்டார். ஊஹூம், பயன் இல்லை. "நீ பாட்டியைத்தான் நினைத்துக் கொள், அல்லது பாட்டிக்குப் பாட்டியைத்தான் நினைத்துக் கொள். நான் உதவிக்கு வரப்போவதில்லை" என்று கண்ணீர் கையைக் கட்டிக்கொண்டு சத்தியாக்கிரகம் செய்து விட்டது.

இதைப் பார்த்தபோது இதே மாதிரி நான் அவஸ்தைப்பட்ட எத்தனையோ சம்பவங்கள் என் ஞாபகத்துக்கு வந்தன.

அது என்னமோ தெரியவில்லை, நானும் எனக்கு ஞாபகம் ஏற்பட்டதிலிருந்து பார்க்கிறேன், கண்ணீர் விடவேண்டிய எத்தனையோ சமயங்களில்

என்னல் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விட முடிந்த தில்லை.

எனக்குத் தெரிந்தவரை இந்தப் பாழும் கண்ணீர் மிகவும் ஓர வஞ்சனையுள்ள வஸ்து என்றே கூறுவேன். ஸ்திரீகளைக் கண்டால் புருஷர்கள் தான் அசடு வழிய, அவர்கள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்து முடிக்கிறார்கள் என்றால் இந்தக் கண்ணீரும் அப்படித்தான். ஸ்திரீகள் கூப்பிட்டால், அவர்கள் காரணமின்றிக் கூப்பிட்டாலும் சரி, இதோ இருக்கிறேன் என்று ஓடி வருவது, புருஷர்கள் கூப்பிட்டால், அவர்கள் என்ன தலை போகிற காரியமாகக் கூப்பிட்டாலும் சரி, கையைக் கட்டிக்கொண்டு வராமல் இருந்து விடுவது என்று இந்தக் கண்ணீர் இருக்கிறது.

அத்தனைக்கும் கண்ணீருக்குக் காரணமான 'லாக்ரிமல் கிளாண்ட்ஸ்,' புருஷர்கள், ஸ்திரீகள் எல்லாருக்கும் ஒரே மாதிரிதான் பகவான் கொடுத்திருக்கிறார் என்று உடல் தத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

சின்ன வயதில் நானும் என் தங்கை பாருவும் சேர்ந்து விளையாடிக் கொண்டிருப்போம். குழந்தைகள் சேர்ந்து விளையாடினல் சண்டை வராமல் இருக்குமா? ஏதாவது காரணமின்றி பாரு என்னை அடிப்பாள். நான் என்ன கையாலாகாதவனு! உடனே வஞ்சனையின்றி வாங்கிய அடியை வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுத்து விடுவேன்.

நான் கொடுத்த அடியைப் பெற்றுக் கொண்டதும் அதற்காகப் பாரு உடனே கதற ஆரம்பிக்

கிறாளா, இல்லையா என்பது பக்கத்தில் அப்பா, அம்மா யாராவது இருக்கிறார்களா, இல்லையா என்பதைப் பொறுத்தது. பக்கத்தில் அப்பா அம்மா யாராவது இருந்தார்களோ, என்னமோ தேள் கொட்டியவளைப் போல், "ஹோ" என்று அழத் தொடங்கி விடுவாள்.

அப்பா, அம்மா யாரும் இல்லை யென்றால் அழ மாட்டாள். ஆனால் நான் அவளை அடித்து ஒரு மணி நேரம் ஆகியிருந்தாலும் சரி, அவர்களைக் கண்டதும், நான் அப்பொழுதுதான் அவளை அடித்ததுபோல் 'ஹோ' என்று கதற ஆரம்பித்து விடுவாள். அத்தனைக்கும், நான் அடித்ததைவிடப் பாரு என்னைப் பலமாக அடித்திருப்பாள். இருந்தும் ஒரு சொட்டு கண்ணீராவது என் உதவிக்கு வர வேண்டுமே! வராது.

ஆகவே பாரு அழுது கொண்டும் நான் அழாமல் இருப்பதையும் பார்த்துவிட்டு, என் பெற்றோர்கள் பாரு பக்கம் சேர்ந்து கொண்டு அவளைச் செல்லம் கொஞ்சுவார்கள். என்னை அடிப்பார்கள்.

வீட்டில்தான் இப்படி யென்றால் பள்ளிக்கூடத்திலும் அப்படித்தான். எனக்குக் கணக்கு வாத்தியாராக வந்து சேர்ந்தவர் போன ஜன்மத்தில் நாட்டுக் கோட்டைச் செட்டியாராக இருந்திருப்பாரோ, என்னமோ, எப்பொழுது பார்த்தாலும் இத்தனை ரூபாயை இத்தனை மாதத்துக்கு இத்தனை வட்டிக்கு விட்டால் மொத்தம் வட்டி என்ன வரும் என்று கணக்குக் கேட்பார். அந்தப் பாழும் வட்டிக் கணக்கு எனக்கு வரவே வராது.

வராவிட்டால் என்ன? இப்பொழுது என்ன நான் பாங்கிக் குமாஸ்தா வேலையா பார்க்கிறேன்? இல்லை, பணத்தை வைத்துக் கொண்டு யாரிடம் வட்டிக்கு விடலாம் என்று தவிக்கிறேன்!

ஆனால் எங்கள் கணக்கு வாத்தியார் அப்பொழுது கண்டாரா, பின்னால் இந்த வட்டிக் கணக்கு எனக்கு உபயோகப்படப் போகிறதில்லையென்று! ஆகவே கணக்குச் சரியாகப் போடாததற்காகக் கணக்கு வாத்தியார் என்னைப் பிரம்பால் சுளீர், சுளீர் என்று அடிப்பார். அடித்தால் வலிக்கத்தான் செய்யும். வலிக்கிறது என்று காட்டிக் கொள்வதற்காக அழுவதற்கும் பிரயத்தனம் செய்வேன். ஆனால் என் கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வராததைக் கண்டு வாத்தியார் எனக்கு அடி உறைக்கவில்லையாக்கும் என்று நினைத்துக் கொண்டு மேலும் மேலும் அடிப்பார்.

இந்தக் கண்ணீர் ஒர வஞ்சனையுள்ள வஸ்து மாத்திரம் அல்ல, வியவஸ்தை கெட்ட வஸ்துவுங்கூட. வருத்தத்தினால் மட்டும் அல்ல, சந்தோஷத்தினாலும் கண்ணீர் வரும் என்று மனோ தத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

அப்படியாவது நான் துக்கப்படும் சமயத்தில் உதவி புரியாத இந்தக் கண்ணீர், நான் சந்தோஷப்படும் சமயத்திலாவது என் உதவிக்கு வந்திருக்கிறதா, கிடையாது.

என் கல்யாணத்தில் மிகவும் சந்தோஷமாக இருக்க வேண்டியவன் நான் தானே? சந்தோஷமாக இல்லாவிட்டாலும், சந்தோஷமாக இருந்த

தாகக் காட்டிக் கொள்ள வேண்டியவன் நான் தானே? ஆகவே, ஆனந்தக் கண்ணீர் விடுவதற்காக, நான் எவ்வளவோ பிரயாசைப் பட்டும் வராமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில் என் மாமியார் குடம் குடமாக ஆனந்தக் கண்ணீர் விட்டால் எனக்கு எப்படி இருக்கும்? சரி, மாமியார் போனல் போகிருள், இந்த அசட்டுப் பெண்ணை (ஐயோடி அம்மா சரசு! சண்டைக்கு வந்து விடாதே! சும்மா கட்டுரைக் கோசரம் எழுதுகிறேன்) கல்யாணம் பண்ணிக்கொள்வதற்கும் ஒரு அசட்டு மாப்பிள்ளை அகப்பட்டானே என்ற சந்தோஷம் மாமியாருக்கு இருக்கலாம், ஆனல் மற்ற ஸ்திரீகளும் என் மாமியாரை மிஞ்சும்படியாய்க் கண்ணீர் விட்டால் எனக்கு எப்படி இருக்கும்?

சாதாரணக் கண்ணீர் விடுவதற்கே இத்தனைத் திண்டாட்டமாய் இருக்கும்போது, ஒவ்வொருவர் தேச நிலைமையை எண்ணி ரத்தக் கண்ணீர் விட்டதாகக் கூறுகிருர்களே, எப்படித்தான் விட்டார்களோ, பகவானைத்தான் கேட்கவேண்டும்.

நினைத்த மாத்திரத்தில் கண்ணீர் விட முடியாது, ஏதாவது துக்கமோ சந்தோஷமோ ஏற்பட்டால்தான் கண்ணீர்விட முடியும் என்று மனேதத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகிருர்கள். இவர்கள் சரசுவைப் பார்த்ததில்லை யென்றே நினைக்கிறேன். பார்த்திருந்தால் இப்படிச் சொல்லியிருக்க மாட்டார்கள்.

ஏனெனில் நான் சரசுவைக் கவனித்த மட்டில் அவள் தன் மனக் கருத்துக்களை எனக்குத் தெரியப்

படுத்துவதற்கு அதை ஒரு பாஷையாகவே உப யோகப் படுத்துகிறாள் என்று நினைக்கிறேன்.

உலக மெங்கும் உள்ள ஸ்திரீகள், பழக்க வழக் கத்தால், நடை, உடையால் வேறு பட்டிருந்த போதிலும், பாஷையால் ஒன்று பட்டிருக்கிறார்கள் எல்லா ஸ்திரீகளும் இந்தக் கண்ணீர் பாஷையைத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆங்கில அழகி மேரி தன் காதலன் ஜார்ஜு டன் பேசுவது இந்தக் கண்ணீர் பாஷையில்தான்.

சீன அழகி சிங்சாங் தன் அழகன் சாங்சுங்கு வுடன் பேசுவதும் இந்தக் கண்ணீர் பாஷையில் தான்.

எத்தியோப்பிய அழகி மடிஸ் மபாபா தன் நாயகன் மாயிலி மாலாசியுடன் பேசுவதும் இந்தக் கண்ணீர் பாஷையில்தான்.

இருந்தும் புருஷர்கள் இந்தப் பாஷையைக் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. கற்றுக் கொள்ளவும் முடியாதுபோல் தோன்றுகிறது.

கல்யாணம் ஆனதிலிருந்து சரசு இந்த பாஷை யில்தான் தினம் என்னோடு பேசிக்கொண்டு இருக் கிறாள். இருந்தும் இந்தப் பாஷை புரியாமல் நான் தினம் திண்டாடிக் கொண்டிருக்கிறேன். பாஷை புரியாததால் சரசு எதற்காகக் காரணம் இன்றிக் கண்ணீர் விடுகிறாள் என்று கூடக் கலங்கி யிருக்கி றேன்.

யாரோ ஒருவர் கண்ணீரை ரஸாயன முறைப் படி ஆராய்ச்சி செய்து, கண்ணீர் என்றால் இத்

தனை உப்பு, இத்தனை ஜலம் என்று கணக்கெடுத்துச் சொல்லி யிருக்கிறார். அதன்படி அந்த உப்புத் தண்ணீரைக் கண்டு நாம் கலங்குவானேன் என்று விஷயம் தெரியாதவர்கள் கேட்கலாம்.

அப்படிச் சொல்லுகிறவர்கள் அவரவர்கள் மனைவியின் கண்ணில் கண்ணீர் வருவதைக் கண்டு நடுங்காமல் இருக்கட்டும், கேட்கிறேன்.

ஏழைகள் அழுத கண்ணீர் கூரிய வாளை யொக்கும் என்று வசனம் உண்டு ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் சரசுவின் கண்ணீரை விடக் கொடிய வாள் ஒன்று உலகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வாளை உபயோகிப்பதற்கும் சரசு ஒரு தனிவழி கற்று வைத்துக் கொண்டிருக்கிறாள். இதை அவள் வேண்டிய அளவிற்கு மீறி அதிகமாகவோ, அல்லது குறைவாகவோ உபயோகிப்பதில்லை.

ஒவ்வொரு சமயம் ஒரு சொட்டு, இரண்டு சொட்டு, மூன்று சொட்டு என்று கண்ணீரை கணக்காக விடும்போது, அவள் பின் கண்ட முறையில் ஏதாவது ஜாபிதா தயாரித்து வைத்துக் கொண்டிருக்கிறாளோ என்று கூடத் தோன்றுகிறது.

| | |
|---|---|
| சினிமா போகவேண்டுமானால் | ஒரு சொட்டுக் கண்ணீர். |
| ஜாக்கட் வேண்டுமானால் | இரண்டு சொட்டுக் கண்ணீர் |
| புடவை வேண்டுமானால் | மூன்று சொட்டுக் கண்ணீர் |
| நகை வேண்டுமானால் | நான்கு சொட்டுக் கண்ணீர் |
| பிறந்தகம் போக வேண்டுமானால் | பத்து சொட்டுக் கண்ணீர் |

இப்பொழுதெல்லாம் அம்மாளைப் பின்பற்றி என் மூன்று மாதப் பெண் அனுராதாவும் அழ ஆரம்பித்திருக்கிறாள். தனக்கு என்ன காரியம் ஆகவேண்டியிருந்தாலும் சரி, உடனே அழுதுவிடுவது என்று வைத்துக்கொண்டிருக்கிறாள். அப்படியாவது தன் தாயாரைப்போல் கண்ணீரைக் கணக்காகச் செலவழிக்கிறாளா, கிடையாது. குடம் குடமாகக் கண்ணீர் விடுகிறாள்.

இதைப் பார்க்கும்போது இவளுக்கென்றே பிறந்து வளர்ந்து வரும் என் மாப்பிள்ளை இவள் கையில் என்ன பாடுபடப் போகிறானோ என்று நினைத்து நடுங்குகிறேன். அவனிடம் எனக்குள்ள அனுதாபத்தைக் காட்டுவதற்காக நான் இப்பொழுதே ஒரு சொட்டுக் கண்ணீர் விடத் தயார்! ஆனால் அது வந்தால் தானே?

○☆○

# அனுவை அழைத்துப் போங்கள்

“அனுவை அழைத்துப் போங்கள்” என்று அவள் தாத்தாவுக்கு, அதுதான் என் மாமனுருக்குக் கடிதம் எழுதி விட்டுத்தான் மறு காரியம். இல்லையோ என் பிழைப்புக்கு ஆபத்துத்தான்!

அது என்னமோ தெரியவில்லை. கொஞ்ச நாட்களாக அனு என்னை ஆபீஸ் போக விடமாட்டேன் என்கிருள்.

தினம் காலையில் நான் சாப்பிட்டு விட்டு ஆபீஸ் போவதற்காகச் சட்டையை மாட்டிக் கொள்ள வேண்டியதுதான் தாமதம், அனு முகாரி ராக ஆலாபனை தொடங்கி விடுகிருள். குடு குடு என்று என் பின்னலேயே தவழ்ந்து வாசல் வரைக்கும் வந்து விடுகிருள்.

அதிலும், அவள் முகாரி ராக ஆலாபனத்துக்கும், என் ஆபீஸில் அன்றன்றுள்ள வேலைக்கும் ஏதோ நேர் சம்பந்தம் இருக்கிறுப்போல் தோன்றுகிறது.

ஆபீஸில் என்று எனக்கு அதிக வேலையோ அன்றைக்கு என்றுதான் அனுவின் அழுகைக் குரல் பலமாக விழுகிறது. நான் ஆபீஸுக்குப் போகக்கூடாது என்று அவள் பிடிக்கும் பிடிவாதமும் அதிகரிக்கிறது.

அனு இப்படி யெல்லாம் அடம் பிடிக்கும் போது என்மேலுள்ள அன்பினுல்தான் அப்படிச் செய்கிருளா, அல்லது எங்கள் ஆபீஸின்மீது உள்ள துவேஷத்தினுல்தான் அப்படிச் செய்கிருளா என்பது தெரியவில்லை.

அனுவுக்கு எங்கள் ஆபீஸ் மீது துவேஷம் விழக் காரணமில்லை. அனு எங்கள் ஆபீஸைப் பார்த்ததில்லை. பார்த்து விட்டு அவள் இப்படி யெல்லாம் அடம் பண்ணினுல், "தேவலையே! கெட்டிக்காரப் பெண்தான்! நாம் பத்து வருஷ அனுபவத்துக்குப் பிறகு, 'இந்த ஆபீஸ் பிரயோசன மில்லை' என்று தெரிந்து கொண்ட விஷயத்தை அவள் ஒரே நாளில் தெரிந்து கொண்டு விட்டாளே" என்று ஆச்சரியப்படலாம். ஆகவே என்னைப் பக்கத்திலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அன்பினுல் தான் என்னை இப்படித் தடுக்கிருள் என்று கொள்கிறேன்.

இல்லையேல், அனு போன ஜன்மத்தில், வீட்டிலேயே ஏதாவது வியாபாரம் நடத்தும் வியாபாரியின் பெண்ணுகவோ, அல்லது வீட்டிலேயே வேலை பார்க்கும் வைத்தியரின் பெண்ணுகவோ இருந்திருக்க வேண்டும். அதனுல்தான் போன ஜன்மத்து அப்பா எப்பொழுது பார்த்தாலும் வீட்டைச் சுற்றியே வளையமிட்டு வந்து கொண்டிருந்திருக்கையில் இந்த ஜன்மத்து அப்பா மாத்திரம் தினம் காலையில் மணி பத்தானுல் வீட்டை விட்டு வெளிக் கிளம்பி விடுகிருரே என்று அவளுக்கு இருக்க வேண்டும்.

எது எப்படி இருந்தால் என்ன, தினம் காலையில் நான் அவளுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு, ஆபீசுக்குப் போவது என்பது பிரம்மப் பிரயத்தனமாக இருக்கிறது.

முதலில் சில நாள் அனுவின் கெஞ்சுதலான பார்வையை மறுக்க முடியாமல் ஆபீசுக்குப் போகாமல் வீட்டில் இருந்தபடியே தலைவலி என்று லீவ் எழுதிப் போட்டு விட்டேன். ஆனல் எத்தனை நாளைக்குத் தான் தலை வலி என்று லீவ் எழுதிப் போடமுடியும்! அதுவும், ஒரு நாள் சேர்ந்தாற் போல் ஒரு நாள் தலைவலி என்றால் எந்த ஆபீஸில் தான் நம்புவார்கள்?

சரி அனுவை எப்படியாவது விளையாட்டுக் காட்டி ஏமாற்றி விடுவது என்று பார்த்தேன். ஊஹூம், அதிலும் பலன் இல்லை.

தினம் சட்டையை மாட்டிக்கொண்டால் தானே ஆபீசுக்குப் போகிறேன் என்று கண்டு கொள்கிறாள் என்று இன்னொரு யுக்தி பண்ணினேன். வாசல் திண்ணை ஜன்னலில் என் சட்டையை மாட்டி விட்டு, வாசல் பக்கமாக ஆபீசுக்குப் போகாமல் கொல்லைப் பக்கமாக ஆபீசுக்குப் போக நினைத்தேன்.

ஆனல் அனுவா ஏமாறுகிறவள்? முதல் நாள் ஏமாந்தாளே யொழிய அடுத்த நாள் என் தந்திரத்தைக் கண்டு கொண்டு விட்டாள். வாசல் திண்ணை ஜன்னலில் நான் சட்டையை மாட்டி வைத்து விட்டு, கொல்லைப்பக்கம் போக ஆரம்பித்ததுதான் தாமதம், 'ஹோ' என்று கதறத்தொடங்கி விட்

டாள். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல் அன்றிலிருந்து நான் குளிக்கக் கொள்ள, கொல்லைப் பக்கம் போவதாய் இருந்தால்கூட அனு விட மாட்டேன் என்கிறாள். கொல்லையில் உள்ள கிணற்றண்டை போவதற்கு, வாசல் பக்கமாய்ப் போக வேண்டி வந்து விட்டது!

சரி, இப்படி யெல்லாம் அனுவை ஏமாற்றிப் பிரயோசனம் இல்லை, அவளைத் தூங்கவைத்தால் தான் நிம்மதியாக ஆபீசுக்குப் போகலாம் என்று அவளைத் தூங்கவைக்கும் பிரயத்தனத்தில் இறங்கினேன்.

வீட்டில் வேறு யாரும் இல்லை யாதலால் தினம் காலையில் சாப்பாட்டை நானே எடுத்துப் போட்டுக் கொள்ள வேண்டியது என்றும், அந்த சமயத்தில் சரசு அனுவைத் தொட்டிலில் போட்டு ஆட்டித் தூங்கவைக்க வேண்டியது என்றும் எங்களுக்குள் ஒப்பந்தமாயிற்று.

ஒப்பந்தத்தின்படி முதல் நாள் எனக்கு நானே பரிமாறிக்கொண்டிருந்தேன். சாதம், குழம்பு, கறி, மோர், ஊறுகாய் எல்லாவற்றையும் சாப்பாட்டுத் தட்டைச் சுற்றி வைத்துக் கொண்டு பரிமாறிக் கொள்ள ஆரம்பித்தேன்.

ஒப்பந்தத்தின்படி சரசு அனுவைத் தொட்டிலில் போட்டு ஆட்டிக் கொண்டிருந்தாள். அனு தூங்கிவிட்டாள் என்று சரசு முகமலர்ந்து சொன்ன சமயமும், நான் "ஹோ" வென்று வீறிட்டுக் கத்திய நேரமும் ஒன்றுசேரவே தூங்கிக் கொண்டிருந்த அனு விழித்துக் கொண்டுவிட்டாள்.

"கை ஒடிய ஆட்டித் தூங்க வைத்த குழந்தையை இப்படி எழுப்பி விட்டீர்களே!" என்று சரசு கோபித்துக் கொண்டாள்.

"கொதிக்கிற குழம்பைக் காலில் ஊற்றிக் கொண்டால் கூடக் கத்தக் கூடாது என்கிறாயா?" என்று கேட்டேன்.

"அப்பாடா! இதை விடக் கொதிக்கிற குழம்பை யெல்லாம் நான் காலில் ஊற்றிக்கொண்டிருக்கிறேன். உங்களைப் போல் இப்படி ஊரைக் கூட்டவில்லை!" என்று சரசு முகவாய்க் கட்டையினால் தன் தோளில் பலமாக ஒரு இடி இடித்தாள்.

இதற்கு மேலும் வாக்கு வாதத்தை வளர்த்திக்கொண்டு போனால், தாம்பத்திய கலகம் ஏற்பட்டு, ஆபீசுக்கே போக முடியாமல் போனாலும் போய்விடும் என்று பயந்து அதற்குமேல் ஒன்றும் பேசாமல், சற்றுக் கெஞ்சும் குரலில், "ஏதோ தவறிப் போய்க் கத்திவிட்டேன். அதற்காக என்ன பண்ண வேண்டும் என்கிறாய்? தயவு செய்து அனுவைத் திரும்பவும் ஆட்டித் தூங்கவையேன்" என்றேன்.

சரசுவும் அனுவை ஆட்டத் தொடங்கினாள். நானும் நாரத்தங்காய் ஊறுகாயைக் கலத்தில் போட்டுக் கொள்வதற்குப் பதில் கண்ணில் போட்டுக் கொண்டும் கத்தாமல் சாப்பாட்டுக் கடையை முடித்தேன்.

நான் சாப்பிட்டுக் கையலம்பித் திரும்புவதற்கும், அனு கண்ணயர்வதற்கும் சரியாக

இருக்கவே நான் கொண்ட சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல.

கண்ணில் நாரத்தங்காய் ஊறுகாய் பட்டு, கட, கட என்று ஜலம் வந்து கொண்டிருந்ததையும் மறந்து, மிகவும் ஆனந்தத்துடன் சட்டையை மாட்டிக் கொண்டு ஆபீசுக்குக் கிளம்பினேன். கிளம்பியதுதான் தாமதம், 'ஹோ' வென்ற அழுகைச் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் அனு விழித்துக் கொண்டு, நான் ஆபீசுக்குப் போவதைப் பார்த்து அழுது கொண்டிருந்தாள் !

சரி, முன்னமேயே தூங்க வைத்தாலும் புறப்படும் சமயத்துக்கு விழித்துக் கொண்டு விடுகிறாள் என்று வேறொரு யோசனை பண்ணினோம். அதாவது வழக்கமாகச் சாப்பிட உட்காரும் சமயத்துக்கு ஒரு அரை மணி முன்னாலேயே உட்கார வேண்டியது. (இப்படி வழக்கத்தைவிட அரை மணி முன்னால் உட்காருவதால் சோறு வெந்ததும், வேகாததுமாகத்தான் இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.)

இப்படி முன்னால் சேமித்த அரைமணியைப் பின்னால், சாப்பிட்ட பிறகு, அனுவைத் தொட்டிலில் வைத்து ஆட்டித் தூங்கவைக்க உபயோகிக்க வேண்டியது.

தொட்டிலை ஆட்டும் விஷயத்தில் சரசு எனக்கு அதிகப் பயிற்சி அளித்திருக்கிறாள் என்றாலும் அனுவை என்னமோ, என்னால் தூங்க வைக்க முடியவே இல்லை. தொட்டிலை ஆட்டி, ஆட்டி,

என் கை ஒடிந்ததுதான் மிச்சமே யொழிய, அனு தூங்கினபாடா யில்லை.

இம்மாதிரி எல்லா யுக்திகளும், குயுக்திகளாகி விடவே கடைசி யுக்தி ஒன்று கையாண்டேன். அதாவது நான் தினம் ஆபீசுக்குப் புறப்படும் போது சரசுவும் அனுவைத் தூக்கிக் கொண்டு என்னோடு கொஞ்ச தூரம் வரவேண்டியது. அப்பொழுது மூன்றுபேரும் எங்கேயோ போவதாக அனு நினைத்துக் கொள்வாள். நான் நடுவில் அவளை ஏமாற்றி விட்டு, ஆபீசுக்கு ஓடிப்போய்விட வேண்டியது.

இந்த யுக்தியை அநேக தகப்பனார்கள் தங்கள் குழந்தைகள் விஷயத்தில் கையாள்வதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அந்தக் குழந்தைகள் எல்லாம் அப்பாவுடன் வாசல் வரையிலோ, அல்லது வாசலைத் தாண்டி நான்கு அடிவரையிலோ வந்தவுடன் திருப்தி யடைந்து விட்டன. ஆனால் அனுவோ அப்படித் திருப்தி யடையாமல் என் கூடவேதான் வருவேன் என்று பிடிவாதம் பிடித்தாள்.

சரி, மாம்பலம் ஸ்டேஷன் வரையில் வரட்டும், பிறகு திரும்பிப் போய் விடுவாள் என்று சரசுவையும் அனுவையும் மாம்பலம் ஸ்டேஷன் வரையில் அழைத்துச் சென்றேன். ஆனால் அப்பொழுதும் அனு திருப்தி அடையவில்லை. கூடத்தான் வருவேன் என்று பிடிவாதம் பிடித்தாள். சரி, பீச் ஸ்டேஷன் வரை வந்தாலாவது திரும்பிப் போய் விடுவாள் என்று அனுவையும் சரசுவையும் பீச் ஸ்டேஷன் வரை அழைத்துக் கொண்டு போனேன்.

ஆனல் பேராசைக் காரி அனு பீச் ஸ்டேஷனிலும் திருப்தி அடையாமல் கூட ஆபீசுக்குத்தான் வருவேன் என்று பிடிவாதம் பிடிக்கவே வேறு வழியின்றி வீடு திரும்பினேன்.

மறுநாளாவது பீச் ஸ்டேஷன் வரையில் வருவதோடு திருப்தி அடைவாளோ என்று சரசுவையும், அனுவையும் பீச் ஸ்டேஷன்வரை அழைத்துச் சென்றேன். ஆனல் அனு, மேலும் பிடிவாதம் பிடிக்கவே வீடு திரும்பி விட்டேன்.

சென்ற பத்து நாட்களாக நாங்கள் மூவரும் பீச் ஸ்டேஷன் வரை போய் விட்டுத் திரும்பி, திரும்பி வருகிறோம். தினம் ரயில் வண்டியில் வருவது அனுவுக்கு ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது.

ஆனல் எத்தனை நாளைக்குத்தான் ஆபீசுக்குப் போகாமல் சரசு சமேதமாக பீச் ஸ்டேஷன் வரை போய்விட்டுத் திரும்ப முடியும்? ஆகவே அனுவை அழைத்துப் போகும்படி அவள் தாத்தாவுக்குக் கடிதம் எழுதி விட்டுத்தான் மறு காரியம்!

○ ☆ ○

# பெண்கள் நீடூழி வாழ்க!

நான் சமீபத்தில் பங்களூர் சென்றிருந்த காலையில் என் நண்பர் ஒருவர் என்னை ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றார். "ஸார்! இந்த வீட்டுப் பெண்கள் எல்லாரும் தங்கள் கட்டுரைகள் மீது மகா மோகம் கொண்டவர்கள். தங்கள் கட்டுரையின் பிரதிகள் என்ன காணமற் போயிருந்தாலும் சரி, இவர்களைக் கேட்டால் போதும். உடனே கட்டுரையை ஒப்பிக்கத் தொடங்கி விடுவார்கள்" என்று கூறினார்.

இதைக் கேட்டதும் எனக்குண்டான சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல. நான் கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்திருந்த எத்தனையோ பழைய கட்டுரைகளை என் பதினேரு மாதப் பெண் அனு கிழித்தெறிந்து விட்டாள். ஆகவே அந்தக் கட்டுரைகளை இவர்களைக் கொண்டு ஒப்பிக்கச் சொல்லி எழுதிக் கொண்டு வரலாம் என்று வீட்டுக் குள்ளே நுழைந்தேன்.

வீட்டு முன் ஹாலில் போடப்பட்டிருந்த சோபாக்களில் பஞ்ச கன்னிகைகள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் ஐந்து பேரும் என்னைப் பார்த்ததும் நண்பரைப் பார்த்து, "யார்?" என்னும் கேள்வி தோன்ற முகத்தைச் சுளுக்கினார்கள். அந்த அபிநயத்தின் கருத்தை உடனே அறிந்து கொண்ட நண்பர், என்னைச் சுட்டிக் காட்டி, "நாடோடி" என்றார்.

இதைக் கேட்டதும் அந்தப் பஞ்ச கன்னிகை கள் அத்தனை பேரும் உள்ளே ஓடினார்கள். "ஆஹா! நம்மீது எத்தனை அன்பு! ஆளுக்கு ஒரு கப் காப்பி எடுத்துக்கொண்டு வரத்தான் போயிருக் கிறார்களோ?" என்று நினைத்து நான் சந்தோ ஷப்பட்டுக் கொண்டிருக்கையில் அவர்கள் ஐந்து பேரும் கழியும் கையுமாகத் தோற்ற மளித்தார் கள். இதற்கு மேலும் அவர்கள் என்ன பண்ணப் போகிறார்கள் என்று பார்ப்பதற்காகக் காத்திருக் காமல் நான் அங்கிருந்து ஓடோடியும் வெளியே வந்தேன்

கடைசியில் நண்பரை விசாரித்த பிறகு தான் விஷயம் புரிந்தது. என் கட்டுரைகளைப் படிக்கும் பெண்கள் என்னைப் பற்றி வெகு தவறுத லான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. எப்பொழுது பார்த்தாலும் அவர்களைப் பழிப்பதையே நான் வேலையாகக் கொண்டிருப்ப தாக அவர்கள் நினைக்கிறார்கள்.

உண்மையில் ஸ்திரீகளைப் பற்றி எனக்கு இருக் கும் நல்லபிப்பிராயம் வேறு யாருக்கும் இருக்காது என்று கூறுவேன். சந்தேகமாய் இருந்தால் இந்தக் கட்டுரையைப் படித்துப் பாருங்கள்.

முதலில் கட்டுரையின் தலைப்பையே கவனி யுங்கள். **பெண்கள் நீடூழி வாழ்க!** நான் பெண்களைப் பற்றிக் கொண்டிருக்கும் நல்லபிப்பிராயத்துக்கு இதை விட வேறு என்ன அத்தாட்சி வேண்டும், கேட்கிறேன்!

நான் பெண்களைப் பற்றி இத்தனை நல்லபிப்பிராயம் கொண்டுள்ளதற்கு இதோ காரணம் கூறுகிறேன், கேளுங்கள்.

நம் நாட்டில், முன் காலத்தில், ஆளைப் பார்த்தாலே போதும், இன்ன உத்தியோகம், இன்ன சம்பளம், இன்ன அந்தஸ்து என்று உடனே சொல்லிவிடலாம். ஜரிகைக் குல்லா போட்டுக் கொண்டிருக்கிறாரா, ஜமீன்தார், ஜரிகைத் தலைப்பாகை கட்டிக் கொண்டிருக்கிறாரா, உத்தியோகஸ்தர், சாதாரண தலைப்பாகை கட்டிக்கொண்டிருக்கிறாரா, குமாஸ்தா, கிழிந்த சட்டை மாட்டிக் கொண்டிருக்கிறாரா, பள்ளிக்கூட உபாத்தியாயர் என்று சொல்லி விடலாம். அவரவர்கள் உத்தியோகத்திற்கும் அந்தஸ்துக்கும் என்ன ஆடை என்று விதிக்கப்பட்டிருந்ததோ, அதைத்தான் எல்லாரும் உடுத்தி வந்தார்கள்.

ஆனால், வர வரக் காலம் கெட்டுப்போய்த் தற்சமயம் பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் வித்தியாசமே தெரிவதில்லை. முப்பது ரூபாய் குமாஸ்தாவுக்கும், மூவாயிரம ரூபாய் மானேஜருக்கும் வித்தியாசமே தெரிவதில்லை. முப்பது ரூபாய் குமாஸ்தா போட்டுக் கொண்டிருக்கும் உடையைத் தான் மூவாயிரம் ரூபாய் மானேஜரும் போட்டுக் கொண்டிருக்கிறார். இந்தக் காலத்தில் எல்லாருமே சூட்டும், டையும் போட்டுக் கொண்டிருப்பதால் யார் முப்பது ரூபாய் குமாஸ்தா, யார் மூவாயிரம் ரூபாய் மானேஜர் என்று கண்டுபிடிக்க முடிவதில்லை.

யாருக்கு என்ன சம்பளம் இருந்தால் என்ன, எதற்காக அதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

இந்தக் காலத்தில், ஒருவரோடு ஒருவர் பழகுவதற்கு அவரவர்கள் சம்பளம் என்னவென்று தெரிய வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. யாருக்குச் சம்பளம் அதிகம் என்று தெரிந்தால்தான் யார் சொல்லும் வார்த்தைக்கு யார் 'ஆமாம்' போடவேண்டும் என்பது தெரியும். இன்னும் காப்பி ஹோட்டலுக்கோ, சினிமாக் கொட்டகைக்குள்ளோ நுழைந்தால் பில்லுக்குப் பணம் கொடுப்பதோ அல்லது டிக்கட்டுக்குப் பணம் கொடுப்பதோ யார் என்றும் தெரியும்.

இதற்குப் பயந்துகொண்டோ, என்னமோ இந்தக் காலத்தில் யாரைப் பார்த்தாலும் ஒரே மாதிரிதான் உடை உடுத்துகிறார்கள், யாரைக் கண்டாலும் ஒரே சம்பளக் காரர்களைப் போல் தோன்றுகிறது.

சாதாரண சமயங்களில்தான் இப்படி என்றால் கல்யாண வீடுகளில் கேட்கவே வேண்டியதில்லை. யாரைக் கண்டாலும் சில்க் ஷர்ட்டும், விசிறி மடிப்பு ஜரிகை அங்கவஸ்திரமும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். யாரோடு பேசினால் நமக்குக் கௌரவம், யாரோடு பேசினால் நமக்குக் கௌரவக் குறைச்சல் என்று தெரிவதில்லை.

முன்னொரு சமயம், அதாவது நான் எம். ஏ. பாஸ் பண்ணிவிட்டு, வேலையில்லாமல் திண்டாடிக்

கொண்டிருந்த சமயம் ஒரு கல்யாணத்துக்குப் போக நேர்ந்தது. அந்தக் கல்யாணத்துக்கு ஏதோ ஒரு கம்பெனியின் மானேஜர் வந்திருந்தார் என்று கேள்விப் பட்டேன். சரி, அந்த மானேஜரை வசப்படுத்தினால் வேலை கிடைத்துவிடும் என்று நினைத்து, "மானேஜர் யார்?" என்று விசாரித்தேன்.

"அதோ சில்க் ஷர்ட்டும், ஜரிகை அங்க வஸ்திரமும் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே, அவர்தான் மானேஜர்" என்றார்கள்.

அவ்வளவுதான். அன்று முழுவதும் அவரைச் சுற்றியே வளைய, வளைய வந்து கொண்டிருந்தேன். அவர், 'இம்' என்று உதட்டை அசக்கு முன், நான் 'உம்' மென்று காற்றாய்ப் பறந்து அவருக்கு வேண்டிய சிச்ருஷைகளை எல்லாம் செய்து வந்தேன்.

ஆனால் கடைசியில் எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை என்னவென்று சொல்ல? அவர் மானேஜர் அல்லவென்றும், மாப்பிள்ளைக்கு வேண்டிய சமையற்காரனென்றும் தெரிந்தபோது எனக்கு ஆத்திரம், ஆத்திரமாக வந்தது.

நல்ல வேளையாக, இத்தகைய ஆபத்துக் காலங்களில் நமக்கு உறு துணையாக விளங்குபவர்கள் ஸ்திரீகள்தான். புருஷர்களைப் பார்க்காமல், அவர்களுடைய மனைவிகளைக் கவனித்தால் போதும்; அவர்களுடைய புருஷர்களுக்கு என்ன சம்பளம், என்ன அந்தஸ்து என்று லகுவில் கண்டு பிடித்து விடலாம். இதனால்தான் "பெண்கள் நீடூழி வாழ்க"

என்றேன். (அப்பா ! ஒரு கட்டுரை எழுதி முடிப்ப தற்குள் இந்தப் பெண்களை எத்தனை தடவை வாழ்த்தித் தொலைக்க வேண்டி யிருக்கிறது !)

கல்யாண காலமாய் இருப்பதால் கல்யாணத் துக்கு வரும் ஸ்திரீகளையே எடுத்துக் கொள்வோம். இன்னும் கல்யாண காலங்களில் எல்லாரும் சற்றுத் தாராளமாய்ப் பழகுவதால் அவர்களைக் கவனிப் பதும் சற்று லகுவான காரியம்தான்.

புருஷனுக்குச் சம்பளம் உயர, உயர மனைவி யின் நகை கனம் உயர்வது என்று நம் நாட்டில் ஒரு நல்ல வழக்கம் இருக்கிறது. இன்னும் புடவை யின் ஜரிகைக் கரையின் அகலமும் உயர்வது என்று ஒரு வழக்கம் இருக்கிறது.

அதோ கையில் ஒற்றை வளையுடனும், கழுத் தில் ஒற்றை வடச் சங்கிலியுடனும் காட்சி யளிக் கிறாரே ஒரு அம்மாள், அந்த அம்மாள் புருஷனுக்கு ஐம்பது ரூபாய்தான் சம்பளம். சந்தேகமாய் இருந் தால் நீங்களே கேட்டுப் பாருங்கள்.

அதோ கையில் இரண்டு ஜோடி வளையலும், கழுத்தில் இரண்டு வட சங்கிலியும் அணிந்திருக் கிறாரே, அந்த அம்மாளின் புருஷனுக்கு என்ன சம்பளம் தெரியுமா?........தேவலையே! அதற்குள் இதன் சூட்சுமத்தை அறிந்து கொண்டு சரியாகச் சொல்லி விட்டீரே! நீர் சொன்னதுபோல் நூறு ரூபாய்தான். சரி....எங்கே, அதோ வெள்ளி கூஜா வும் கையுமாக ஒரு அம்மாள் வருகிறாரே? அந்த அம்மாளின் கணவருக்கு என்ன சம்பளம் சொல் லுங்கள் பார்க்கலாம்........

என்ன விழிக்கிறீர்கள்? கையில் எத்தனை வளையல்கள் என்றும், கழுத்தில் எத்தனை வடம் சங்கிலிகள் என்றும் எண்ண முடியவில்லையோ? அதோடு, கை வளையல்களோடு, கண்ணாடி வளையல் களும் சேர்ந்திருப்பதால் பொன் வளையல்கள் எத்தனை என்று கண்டு பிடிப்பது கஷ்டம்தான்.

ஆகவே இந்த மாதிரி எக்கச்சக்கமான இடங்களில் வளையல்களைக் கவனிப்பதை விட்டு, பெண்கள் கட்டிக் கொண்டிருக்கும் புடவையைக் கவனிப்பது நலம். புடவை என்ன விலை என்று ஒரு உத்தேசமாக மதிப்புப் போடுங்கள். புடவை என்ன விலையோ, அதில் பாதிதான் அவர் கணவருக்குச் சம்பளம்.

நான் என்னமோ அவர்கள் எல்லாருக்கும் பாதகமாக இருப்பதுபோல் ஸ்திரீகள் நினைத்துக் கொள்கிறார்களே, இந்த இடத்தில் அவர்களுக்கு எவ்வளவு செளகரியம் பண்ணி யிருக்கிறேன் என்பதைக் கவனிக்கட்டும்! கல்யாண காலங்களில் கட்டிக் கொள்வதற்கு ஒவ்வொரு புருஷனும் தன் இரண்டு மாதச் சம்பளம் பெறுமானமுள்ள புடவை மனைவிக்கு வாங்கித் தரவேண்டும் என்று சொல்லி யிருக்கிறேன். இதற்கு மேலும் ஸ்திரீகள் நான் அவர்களுக்கு விரோதமாக நடந்து கொள்வதாக எண்ண மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

நான் இதுவரை சொன்னது கல்யாண காலங்களுக்கே தவிர சாதாரணமாக, வீட்டில் கட்டிக் கொள்ளும் புடவைக்கு ஸ்திரீகள் இத்தனை பணம் செலவழிப்பதில்லை. அவர்களுக்குப் பயித்தியமா,

என்ன, ஒரு புடவையில் புருஷனின் இரண்டு மாதச் சம்பளப் பணத்தைப் போடுவதற்கு? அவர்கள் வீட்டில் கட்டிக்கொள்ளும் ஒவ்வொரு புடவையும் ஒரு மாதச் சம்பளப் பணம் பெருமானமுள்ளதாக இருக்குமே யொழிய, அதற்குமேல் ஒரு தம்பிடி கூட அதிகம் இருக்காது....

யார் அது பின்னாலிருந்து கட்டுரையைப் படிப்பது? சரசுவா?....என்ன வேண்டும்? இரண்டு மாதச் சம்பளத்தில் ஒரு புடவையா? ரொம்ப அழகாக இருக்கிறதே! கட்டுரைக் கோசரம் நான் ஏதாவது எழுதப் போக, புடவை வாங்குவதற்கு இரண்டு மாதச் சம்பளத்தைக் கொண்டா என்று கேட்க வந்து விட்டாயே!

○ ☆ ○

# வீட்டை மாற்றிப்பார்!

நான் முந்தியிருந்த வீட்டை விட்டுப் புது வீட்டுக்கு வீடு மாற்றி விட்டேன்....ஏன் இப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்? எதற்காக மூக்கின்மேல் விரலை வைக்கிறீர்கள்?

ஆம், இந்தக் காலத்தில், அதுவும் சென்னையில், வீடு மாறினேன் என்றால் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம்தான்.

சென்னையில் வீடு கிடைப்பது எத்தனைக் குதிரைக் கொம்பாய் இருக்கிறது, வீடுகளுக்கு எத்தனை கிராக்கி இருக்கிறது என்பதற்குச் சமீபத்தில் ஒரு பத்திரிகையில் வெளிவந்த வேடிக்கைக் கதை ஒன்றே போதும்.

சென்னையில் உள்ள ஏதோ ஒரு குளத்தில் ஒருவர் முழுகிக் கொண்டிருந்தார். அப்பொழுது குளத்தங்கரை வழியாக ஒருவர் செல்லவே அவரைக் கூப்பிட்டுத் தம்மைக் காப்பாற்றும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அதற்கு அவர், முழுகிக் கொண்டிருந்தவர் தம் வீட்டு விலாசத்தைத் தெரிவித்தால் காப்பாற்றுவதாக வாக்களித்தார். முழுகிக் கொண்டிருந்தவர் தாம் இன்ன தெருவில் இத்தனும் நம்பர் வீட்டில் இருப்பதாகத் தெரிவித்ததுதான் தாமதம், கரையில் இருந்தவர் முழுகிக் கொண்டிருந்தவரை இன்னும் ஆழத்தில் தள்ளிவிட்டு அவர் குறிப்பிட்ட வீட்டை நோக்கி ஓடினர்!

வீடு இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த எத்தனையோ ஆத்மாக்களில் அவரும் ஒருவர். ஜலத்தில் விழுந்தவர் இறந்து போய் விடுவார், தாம் உடனே முந்திக்கொண்டு அவர் குடியிருந்த வீட்டைப் பற்றிக் கொள்ளவேண்டுமென்பது அவர் ஆசை!

ஆனால் குறிப்பிட்ட வீட்டுக்குச் சென்றதும் என்ன ஏமாற்றம்! அந்த வீட்டுக்கு இவருக்கு முன்னர் வேறு யாரோ வந்து விட்டார்கள்! விசாரித்ததில் முழுகிக் கொண்டிருந்தவரை முதலில் குளத்தில் தள்ளி விட்டவர்தான் குடிவந்து விட்டார் என்று தெரிந்தது.

சென்னையில் உள்ளவர்கள் வீட்டுக்காக இத்தனைக் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும்போது எனக்கு எப்படி வீடு கிடைத்தது என்று நீங்கள் ஆச்சரியப்படுவது நியாயந்தான். ஆனால் வீடு கிடைத்த ரகசியத்தை வெளியில் சொல்லப் போவதில்லை. ரகசியமாகவே வைத்துக்கொள்ளப் போகிறேன்.

எதற்காகப் புது வீட்டுக்குக் குடிபோனேன்? பழைய வீட்டை விடப் புதிய வீடு செளகரியமா, என்ன என்று நேயர்கள் கேட்பது காதில் விழுகிறது.

எத்தனை வீடுகள் மாறினாலும் சரி, காலி பண்ணிவிட்டு வந்த வீட்டை இகழ்வது, புதிதாகக் குடி போயிருக்கும் வீட்டைப் புகழ்வது, பிறகு திரும்பவும் இந்த வீட்டைக் காலி பண்ணி விட்டுப் போகும்போது இதை இகழ்வது, புதிதாகக் குடி போகப் போகும் வீட்டைப் புகழ்வது, இப்படிச்

சில பிரகிருதிகள் இருக்கிறார்கள். ஆனால் நான் அத்தகைய பிரகிருதி அல்ல வாதலால் உண்மையைச் சொல்லி விடுகிறேன். பழைய வீடு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சௌகரியமாகவும் இருந்தது. புது வீடு துளிக்கூடப் பிடிக்கவில்லை. சௌகரியமாகவும் இல்லை.

அப்படி யிருக்க வீட்டை ஏன் காலி பண்ணினீர்கள்?

நியாயமான கேள்விதான். ஆனால் வீட்டுக்காரன் போ என்று சொல்லும்போது, எப்படிப் போகாமல் இருப்பது?

அட அசட்டு மனுஷா! வீட்டுக்காரன் போ என்று சொன்னதும் போக வேண்டிய அவசியம் இல்லை ஐயா! இப்பொழுது உள்ள சட்டம், இது விஷயமாகக் குடி யிருப்பவர்களுக்கு மிக்க அனுகூலமாய் இருப்பது தெரியாதா, என்ன என்று நேயர்கள் கேட்கலாம்.

நியாயந்தான். இப்பொழுது உள்ள சட்டப் பிரகாரம் வீட்டுக்காரன் நம்மை வீட்டைக் காலி பண்ணச் சொல்ல முடியாதுதான். ஆனால் வீட்டுக்காரன் நம்மோடு கூட ஒரு போர்ஷனில் குடியிருக்கக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? வீட்டுக்காரன் மனைவி நம் மனைவியிடம் கடு, கடு என்று விழக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? வீட்டுக்காரன் நம்மைப் பற்றித் தனக்குள்ளேயே முணுமுணுக்கக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? குழாய்க்கு ஜலம் பிடிக்கப் போகும் சமயத்தில் வீட்டுக் காரனும்

போட்டி போட்டுக் கொண்டு ஜலம் பிடிக்கப் போகக்கூடாது . என்று ஏதாவது சட்டம் இருக் கிறதா? நம் வீட்டுக்கு நம்மைத் தேடிக்கொண்டு வருகிற சிநேகிதர்கள் எல்லாரிடமும் நாம் இல்லை யென்றோ, அல்லது தெரியாது என்றோ வீட்டுக் காரன் சொல்லி அனுப்பக்கூடாது என்று சட்டம் இருக்கிறதா?

ஆக, இத்தகைய சட்டங்கள் ஒன்றும் இல்லாத தால் வீட்டுக்காரரை முந்திக் கொண்டு சரசு என் னைத் தினம் நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். சரசு வின் நச்சரிப்புப் பொறுக்காமல் நானும் வேறு வீடு பார்த்து, வீட்டுக்காரரிடமும் வீடு மாறப்போ வதாகத் தெரிவித்து விட்டேன்.

சரி, வீடு மாறினீர், அதில் என்ன இருக்கிறது என்று விஷயம் தெரியாதவர்கள் கேட்கலாம். இவர் களுக்கு நான் சொல்லக் கூடியது, "வீட்டை மாற் றிப் பார், அப்பொழுது தெரியும்" என்னும் ஒரே வார்த்தைதான்.

கல்யாணத்தைப் பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப் பார், ஒண்டுக் குடித்தனம் இருந்து பார் போன்ற அழகிய பழமொழிகளைச் சிருஷ்டித்த மகானுபாவன் **வீட்டை மாற்றிப் பார்** என்ற பழமொழி யையும் ஏன் சிருஷ்டிக்காமல் விட்டார் என்று தெரியவில்லை.

நான் வீடு மாறப் போகிறேன் என்று தெரிந் தது தான் தாமதம், வீட்டுக்காரக் கிழவி, அதாவது வீட்டுக்காரரின் தாயார் வீட்டைச் சுற்றிக் காவல் வைத்து விட்டாள்.

இத்தனை நாளாக மாடி அறையை விட்டுக் கீழே இறங்காத கிழவர், அதாவது வீட்டுக்காரரின் தகப்பனார், எங்கள் வாசல் அறைக்குப் பக்கத்தில் உள்ள திண்ணையில் மேலும் கீழும் உலாவ ஆரம்பித்து விட்டார்.

வாசல் அறையில் உள்ள சாமான்களை எடுத்துக்கொண்டு போகும் போது நான் வாசல் அறையையும் கூட எடுத்துக் கொண்டு போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவர் வேலை!

கொல்லைப்புறத்தில், குளிக்கும் அறைக்குப் பக்கத்தில் வீட்டுக்காரரின் மனைவி கவாத்து செய்து கொண்டிருந்தாள். எங்கே குளிக்கும் அறையையும் நாங்கள் கூடவே எடுத்துக் கொண்டு போய் விடுவோமோ என்று அவளுக்குப் பயம்!

வாசல் பக்கத்து அறைக்குக் காவல் வைத்தாகி விட்டது, கொல்லைப் பக்கத்து அறைக்கும் காவல் வைத்தாகி விட்டது. ஆனால் சமையல் அறை, சாமான் அறை முதலிய வற்றுக்குக் காவல் வைக்க வேண்டுமே, எப்படி வைப்பது? சமைய லறையிலேயே யாரையாவது ஒருவரைக் கொண்டு வந்து நிறுத்தி வைத்தால் நன்றாய் இருக்குமா? நாங்கள் ஏதாவது தவறுதலாக நினைத்துக் கொள்ள மாட்டோமா? அதற்காகக் கிழவி ஒரு யுக்தி கையாண்டாள்.

ஐந்து நிமிஷத்துக் கொருதடவை, ஏதோ ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு எங்கள் போர்ஷனுக்குள் நுழைந்து கொண்டே இருந்தாள். எங்களோடு பேசுவது போலவே நாங்கள் என்னென்ன

சாமான்கள் எடுக்கிறோம் என்று கடைக் கண்ணால் ஒரு பார்வை பார்த்து விட்டுச் சென்றாள்.

எனக்கா, இதெல்லாம் துளிக் கூடச் சகிக்கவில்லை. என்னடா இப்படி வளைய வளைய வந்து கொண்டிருக்கிறார்களே, எந்தச் சமயம் என்ன சண்டை நேருமோ என்று பயந்து கொண்டிருந்தேன். நம்மிடைத்தான் வீட்டைக்காலி பண்ணும் போது வீட்டுக்காரர் நம்மோடு ஒரு சண்டை போடாமல் விடுவதில்லையே!

இந்த யுத்தத்தின் முதல் வேட்டு, எந்த மூலையில் யாரால் வெடிக்கப்பட போகிறதோ என்று பயந்து கொண்டிருக்கையில் குளிக்கும் அறையிலிருந்து ஒரு பெரிய இரைச்சல் கேட்டது. என்ன என்று ஓடிப்போய்ப் பார்த்தால் என் சஹதர்மிணிக்கும் வீட்டுக்காரரின் சஹதர்மிணிக்கும் ராம-ராவண யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருந்தது! குளிக்கும் அறையில் அடிக்கப்பட்டிருந்த மர 'ஷெல்ப்' யாருக்குச் சொந்தம் என்பதைப் பற்றித்தான் யுத்தம்.

'ஷெல்ப்' என்னமோ எங்களுக்குத் தான் சொந்தம் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் உள்ளூரிலேயே இருக்கும் எங்கள் உறவினர் ஒருவரிடமிருந்து சரசு அதைக் கடன் வாங்கி யிருந்தாள். இந்த வீட்டைக் காலி பண்ணி விட்டு வேறு வீட்டுக்குப் போனால் தேவலை என்று நாங்கள் யோசனை பண்ணினதுதான் தாமதம், அந்த உறவினர் 'ஷெல்பை'த் திருப்பிக் கொடு என்று நச்சரிக்க ஆரம்பித்து விட்டார்.

'ஷெல்ப்' யுத்தத்தில் சரசுவுக்கு உதவியாகத் தலை யிடலாமா, கூடாதா என்று ஒரு கணம் யோசித்தேன். ஆனால் சரசு போட்ட சத்தத்தில் இறுதி வெற்றி அவளுக்குத்தான் என்ற நிச்சயம் ஏற்படவே, நாம் தலையிட்டு வலுவில் கிடைக்கிற வெற்றியைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்று வாசல் அறைக்குத் திரும்பினேன்.

திரும்பினால் அங்கே என் தாயாருக்கும் வீட்டுக் காரக் கிழவருக்கும் பிரமாதமான சண்டை நடந்து கொண்டிருந்தது. வீட்டு மின்சார பல்புகள் யாருக் குச் சொந்தம் என்பதைப் பற்றித்தான் தகராறு. மின்சார பல்புகளும் எனக்குத்தான் சொந்தம் என்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் எந்தக் கடையில் பல்புகள் வாங்கினேனோ அந்தக் கடைக்காரர் தினம் இந்த விஷயத்தை எனக்கு ஞாபகம் மூட்டிக்கொண்டே இருக்கிறார். பல்பு களுக்காகக் கொடுக்க வேண்டிய பணத்தை நான் இன்னும் கொடுத்த பாடில்லை.

இரண்டு முனையிலும் போர் ஏற்படுத்திக் கொள் ளக்கூடாது என்று ஹிட்லருக்குத் தெரிந்ததுபோல் எனக்கும் தெரியும். ஹிட்லர் தாமே இரண்டு முனைப் போரை வரவழைத்துக் கொண்டார். ஆனால் என் விஷயத்திலோ என்னை யறியாமல் இரண்டு பக்கங்களிலும் போர் மூண்டு விடவே, நான் இந்த முனையில் கொஞ்ச நேரமும், அந்த முனையில் கொஞ்ச நேரமும், மாறி மாறிப் போர் புரிய நேர்ந்தது.

வீட்டில் ஏற்பட்ட ரகளையைப் பார்த்து விட்டு,

சாமான் எடுப்பதற்காக வந்திருந்த வண்டிக்காரர்கள் கையில் அகப்பட்ட சாமான்களை எடுத்துக் கொண்டு கண்காணுமல் ஓடிப்போய் விட்டார்கள். அந்த சமயம் பார்த்து, நான் காலி பண்ணப் போகும் இடத்துக்குத் தாங்கள் வரலாம் என்கிற எண்ணத்தில், நாலைந்து பேர் உள்ளே நுழைந்து வீட்டுக்கு வாடகை என்ன, ஜல சௌக்கியம் எப்படி, பக்கத்தில் குடியிருக்கும் வீட்டுக்காரர்கள் எப்படி என்று என்னைக் கேள்விகள் கேட்கத் தொடங்கி விட்டனர்! வீட்டுக்காரரைக் கேட்டால் உண்மையைச் சொல்ல மாட்டார் என்பது அவர்கள் எண்ணம்!

கடைசியில் ஒரு மாதிரியாக வீட்டைக் காலி பண்ணினேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன். ஆனல் எனக்கும், வீட்டுக்காரருக்கும் ஏற்பட்ட ரசாபாசத்தில், அவரைப் பார்த்து, "வா, உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அவரும் என்னைப் பார்த்து, "வா, உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லி யிருக்கிருர்.

ஆனல் வீட்டைக் காலி பண்ணிய பிறகு ஒருவரை யொருவர் சந்திக்கவில்லை யாதலால், இன்னும் ஒருவரை யொருவர் "பார்த்துக் கொள்ளவில்லை."

○☆○

# அடுத்த வீட்டு ஜன்னல்

"என்ன ஸார்! புது வீட்டுக்குக் குடி போய் விட்டேளாமே! வீடு ரொம்ப சௌக்கியமோ!"

"ஆமாம். ரொம்ப சௌக்கியம்"

"என்ன' தெற்குப் பார்த்த வீடோ? காற்று ஜிலு, ஜிலு என்று அடிக்கிறதோ?"

"காற்ரு? மூச்சு விடக்கூடாது. வடக்கு பார்த்த வீடாய் இருப்பதால் துளிக்காற்றுகூடக் கிடையாது. ராத்திரி வேளைகளில் காற்றில்லாமல் தூங்க முடியாமல் விசிறி, விசிறி கை உடைந்து போகிறது."

"குழாயிலாவது ஜலம் நன்ருக வந்து கொண்டிருக்கிறதா?"

"நாசமாய்ப் போச்சு! எங்காத்துக் காரரும் ஆபீசுக்குப் போகிருர் என்பது போல் குழாய் ஒன்று அழகுக்கு இருக்கிறதே ஒழிய, ஜலம் அருணஜலம் தான்."

"கிணற்று ஜலமாவது நன்ருக இருக்கிறதா?"

"அந்த வயிற்றெரிச்சலே ஏன் கேட்கிறீர்? கிணற்று ஜலம் வாயில் வைக்க வழங்காது."

"வீடாவது பார்க்க அழகாக இருக்கிறதா!"

"அழகா! பாழடைந்த பங்களா எதையாவது பார்க்க வேண்டுமானுல் எங்கள் வீட்டைப் பார்த்தால் போதும்."

"பின் வீடு ரொம்ப சௌக்கியம் என்றீரே! என்ன சௌக்கியம்" என்று நண்பர் கேட்டார்.

அந்தக் கேள்விக்குத்தான் நான் இக்கட்டுரையில் பதில் அளிக்கப் போகிறேன்.

**மா**மியார் இல்லாமல், புருஷனும், மனைவியும் தனிக் குடித்தனம் நடத்துவதில் உள்ள இடைஞ்சல்கள் தனிக் குடித்தனம் நடத்தும் புருஷர்களைக் கேட்டால்தான் தெரியும். மாமியார் மாட்டுப் பெண்ணைப் பிடுங்கிக் கொண்டே இருப்பதைப் பார்க்கும்போது ஒவ்வொரு சமயம் தனிக் குடித்தனம் நடத்த மாட்டோமா என்று எல்லாருக்கும் தோன்றுவது இயல்பே.

ஒரு சமயம் என் தாயார் என்னிடம் கோபித்துக்கொண்டு ஊருக்கு போய்விடவே நான் சரசுவுடன் தனிக் குடித்தனம் நடத்த வேண்டி வந்து விட்டது!

முதலில் நான்கு நாட்கள் நிம்மதியாகத்தான் இருந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, வீட்டில் நிலைமை மாறிக் கொண்டே வந்தது. சரசு என்னிடம் கொண்டிருந்த பக்தியும், மரியாதையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது.

என் தாயார் என்னுடன்கூட இருந்தபோது சரசு என்னை ஒரு காரியமும் செய்ய விடுவதில்லை. நான் காலையில் படுக்கையை விட்டு எழுந்ததிலிருந்து ராத்திரி படுக்கப்போகும் வரை ஏதோ மகாராஜாவுக்கு உபசாரங்கள் நடப்பதுபோல் எனக்கு நடக்கும்.

பல் தேய்க்கப் போனால் டூத் பிரஷ்ஷூம், பேஸ்ட்டும் தாயராகக் காத்துக் கொண்டிருக்கும். என் அறைக்குள் நுழைந்தால் காப்பி தயாராக மேஜையில் காத்துக் கொண்டிருக்கும். காப்பி சாப்பிட்டு விட்டுப் பத்திரிகை படித்துவிட்டு, வெந்நீர் அறைக்குள் நுழைந்தால் வெந்நீர், டவல், சோப்பு எல்லாம் தயாராக எடுத்து வைக்கப் பட்டிருக்கும்.

இப்படியாகத் தானே ஒரு காரியமாவது நான் வாய்விட்டு வேண்டும் என்று கேட்கும்படியாக இருக்காது. வீட்டில் நான் ஊமைபோலவே இருந்து வந்தேன்.

இத்தனை சிச்ரூஷைகளையும் சரசுதான் செய்து வைப்பாள். மாமியாருக்குப் பயந்து கொண்டுதான் செய்தாளா, அல்லது என்மேலுள்ள அன்பினால் தான் அப்படிச் செய்தாளா என்பதைச் சரசுவைத் தான் கேட்கவேண்டும். என் மேலுள்ள அன்பினால் தான் என் தாயார் சரசுவை ஏவினாளா, அல்லது மாட்டுப்பெண் உழைக்கட்டுமே என்றுதான் சரசுவை அதிகாரம் பண்ணினாளா என்று என் தாயாரைத்தான் கேட்கவேண்டும்.

ஆனால் தனிக் குடித்தனம் பண்ண ஆரம்பித்தாலும் ஆரம்பித்தேன், இந்தச் சௌகரியங்கள் எல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக எனக்குக் குறைய ஆரம்பித்து விட்டன. ஊமையாக இருந்தவன், வாயைத் திறந்து பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. "அது வேண்டும், இது வேண்டும்" என்று வாய்விட்டுக் கேட்க வேண்டியதாகி விட்டது.

“ இந்தாங்கோ ! உங்களைத்தானே ! கொஞ்சம் இங்கே வந்துதான் காப்பியைக் குடித்து விட்டுப் போங்களேன் ” என்று சொல்ல, சரசு முதல் நாள் நடுங்கினாள்.

சரி, போனால் போகிறாள் என்று நான் அவளுக்கு இடம் கொடுத்ததுதான் தாமதம், கொஞ்சம் கொஞ்சமாக மடத்தைப் பிடுங்கிக் கொண்டு விட்டாள். சரசு எனக்குச் சிச்ருஷைகள் செய்து கொண்டிருந்தது போய், நான் அவளுக்குச் சிச்ருஷைகள் செய்ய வேண்டிய நிலைமை இப்பொழுது ஏற்பட்டு விட்டது !

இதற்காக நான் என் தாயாரை உடனே ஊரிலிருந்து புறப்பட்டு வரும்படி தந்தி யடித்தேன். ஆனால் வர முடியாது என்று என் தாயார் பதில் தந்தி அடித்துவிடவே எனக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே தெரியவில்லை.

இந்தச் சமயத்தில்தான் எனக்குப் புது வீடு கிடைத்தது. ஜனங்கள் பொதுவாகச் சௌகரியங்கள் என்று கருதும் காற்று, ஜலம், இடம் முதலிய வசதிகள் அதில் இல்லாவிட்டாலும் அதில் ஒரு முக்கியமான சௌகரியம் இருக்கிறது என்பது பின்னால்தான் தெரிந்தது.

நான் குடியிருக்கும் வீட்டில், வீட்டின் கிழக்குப் புறமாக ஒரு ஜன்னல் இருக்கிறது. அதை எதிர்த்தாற்போல் பக்கத்து வீட்டில் மேற்குப் புறமாக ஒரு ஜன்னல் இருக்கிறது.

பக்கத்து வீட்டு ஜன்னலிலிருந்து பார்த்தால் எங்கள் வீட்டில் நடப்பது எல்லாம் தெரியும்

நானும் சரசுவும் சௌஜன்யமாக இருக்கிறோமா, அல்லது சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோமா, தினம் காலையில் எழுந்ததும், வெந்நீர் அடுப்பை மூட்டுவது நானா, சரசுவா, எங்கள் குழந்தை அனுவை தொட்டிலில் போட்டு ஆட்டும் பொறுப்பு என்னைச் சேர்ந்ததா, சரசுவைச் சேர்ந்ததா ஆகிய சகல விஷயங்களும் அடுத்த வீட்டு ஜன்னலி லிருந்து பார்த்தால் தெரியும்.

இதனால்தானோ என்னமோ, எப்பொழுது பார்த்தாலும் அடுத்த வீட்டு ஜன்னலில் ஓர் உருவம் (வேறு யாரும் இல்லை. பக்கத்து வீட்டு அம்மாள் தான்) எங்கள் வீட்டு ஜன்னல் பக்கமே பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருக்கிறது.

அந்த உருவத்துக்கு, நம்மைப்போல் சாப்பாடு, தூக்கம் முதலியவை அவசியம் இல்லைபோல் தோன்றுகிறது. ஏனெனில் நான் பார்க்கும் போதெல்லாம் அந்த உருவம் அங்கேயே நின்று கொண்டிருக்கிறது.

**நான்** இந்த வீட்டுக்குக் குடி வந்த புதிதில் அந்த உருவத்தைக் கவனிக்கவே இல்லை. அப்படி ஒரு உருவம் அங்கு நிற்பதாகவும் யாரும் எனக்கு எச்சரிக்கை செய்யவும் இல்லை. நான் மட்டில் தன்னந்தனிக் காட்டில் தனிக் காட்டு ராஜாவாக விளங்குவதுபோல் நினைத்துக் கொண்டு சரசு காலால் இட்ட வேலையை எல்லாம் தலையால் செய்து வந்தேன். தினம் எழுந்ததும் வெந்நீர் அடுப்பை மூட்டி வந்தேன். குழந்தை அனுவைக் குளிப்பாட்டி, புட்டிப் பாலைக் கொடுத்து வந்தேன். வீட்-

டில் சாமான் பண்டங்களை அங்கங்கே ஒழுங்காக எடுத்து வைத்து வந்தேன். நானே கிணற்றில் ஜலம் இழுத்துக் குளித்து வந்தேன். இப்படியாகத் தானே சரசு எனக்கு முன்பு செய்து வந்த சிச்ருஷைகளை யெல்லாம் நானே எனக்குச் செய்து கொண்டதோடு, நடுவில் சரசுவுக்கும் சிச்ருஷைகள் செய்து வந்தேன்.

ஒரு நாள் அனு எதற்காகவோ 'ஹோ' என்று கதறிக் கொண்டிருந்தாள். "குழந்தை கதறிக் கொண்டிருக்கிறது. நீங்கள் கவனிக்காமல் வாயை மூடிக்கொண் டிருக்கிறீர்களே" என்று சரசு சற்று அதிகார தோரணையில் கத்தினாள். உடனே பயந்து, குழந்தை அனுவை எடுத்து வைத்துக் கொண்டு கொஞ்ச ஆரம்பித்தேன்.

அப்பொழுது 'களுக்' கென்று யாரோ சிரிக்கும் சப்தம் கேட்டது. நான் அனுவைச் சமாதானப் படுத்தும் அழகைக் கண்டு சரசுதான் சிரிக்கிறாளாக்கும் என்று நினைத்துக்கொண்டு, சரசுவைப் பார்த்துச் சற்றுக் கோபமாகவே, "எதற்காகச் சிரித்தாய்?" என்று கேட்டேன்.

"நான் எங்கே சிரித்தேன்!" என்று சரசு சொன்னதும் திரும்பிப் பார்த்தேன். திரும்பிப் பார்த்தால் பக்கத்து வீட்டு ஜன்னலில் ஒரு உருவம் நின்று கொண்டிருந்தது! அந்த உருவம் முகத்தை வைத்துக்கொண்ட கோணலி லிருந்து அதுதான் சிரித்தது என்று தெரிந்தது!

அடுத்த வீட்டு ஜன்னலில் ஒரு உருவம் நின்று கொண்டிருந்ததை சரசுவும் பார்த்தாள்.

கண்டதும் மாமியாரைக் கண்ட மாட்டுப் பெண்ணைப் போல் நடுங்கினாள் !

அடுத்த வீட்டு ஜன்னலில் அந்த உருவம் எப்பொழுது பார்த்தாலும் நிற்கிறது, நம் வீட்டில் நடக்கும் காரியங்களை யெல்லாம் கண் கொட்டாமல் கவனிக்கிறது என்று தெரிந்ததும் சரசுவின் நடத்தையில் திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டது. என் தாயார் இருந்தபோது எப்படி ஓடி, ஆடி எனக்குச் சிச்ருஷைகள் செய்வாளோ அந்த மாதிரி செய்யத் தொடங்கினாள்.

நான் காப்பியைத் தேடிக்கொண்டு சமையலறைக்குப் போக வேண்டிய வேலை நின்றது. நானே வெந்நீர் அடுப்பை மூட்டும் வேலை நின்றது. இப்படியாகத் தானே பழைய ஸ்திதி மெள்ள மெள்ளத் திரும்பி வந்து விட்டது.

இத்தனை சௌகரியங்களும் அந்த அடுத்த வீட்டு ஜன்னலினாலும், அங்கு நின்றுகொண்டிருந்த உருவத்தினாலும் ஏற்பட்டது என்று நினைக்கும் போது, அந்த அடுத்த வீட்டு ஜன்னலை வாழ்த்துவதா, அல்லது பசி, தாகம், தூக்கம் ஒன்றையும் பாராமல் எப்பொழுது பார்த்தாலும் அங்கு நின்றுகொண்டிருக்கும் உருவத்தை வாழ்த்துவதா, அல்லது நான் குடி போயிருக்கும் புது வீட்டை வாழ்த்துவதா என்று தெரியவில்லை.

புது வீட்டுக்குக் குடிபோனதன் பலனாக, சரசுவுக்கு நான் வேலை செய்து கொண்டிருந்தது போய், சரசு எனக்கு வேலை செய்ய ஆரம்பித்

திருக்கும்போது, புது வீடு சௌகரியமாக இருக்கிறது என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது ?

இப்பொழுது தான் உடனே ஊருக்குப் புறப்பட்டுவரப் போவதாக என் தயாரிடமிருந்து தந்தி வந்திருக்கிறது; அதற்கு நான் பின் கண்ட பதில் தந்தி அடித்து விட்டேன்.

"அம்மாளுக்கு நமஸ்காரம். தயவு செய்து இங்கு வரவேண்டாம். சரசுவுக்கு இங்கு ஒரு புது மாமியார் கிடைத்து விட்டாள். அந்த மாமியார் அடுத்த வீட்டு ஜன்னலில் இருந்து கொண்டே சரசுவைக் கவனித்துக் கொள்கிருள். ஆகவே மாமியார் இல்லாமல் மாட்டுப் பெண் சோம்பேறியாய்ப் போய்விடுவாளோ என்று நீங்கள் இங்கு வரவேண்டாம்.

○☆○

# தடியெடுத்தவன் தண்டல்காரன்

“க்யூ வரிசை” என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா?....இல்லையா?....ரயில்வே ஸ்டேஷன்களி லும், தபால் காரியாலயங்களிலும், ஒரு வித விளம் பரங்கள் ஒட்டி இருக்கிறார்களே, பார்த்திருக்கிறீர் களா?

ஒரு பக்கத்தில் டிக்கட் வாங்குவதற்கோ, அல் லது தபால் தலை வாங்குவதற்கோ ஜனங்கள் ஒரு வரை யொருவர் நெருக்கி யடித்துக் கொண்டிருப் பார்கள். அவர்கள் தலைக்கு மேலே, “இது சரி யான வழி அல்ல” என்று போட்டிருக்கும். இன் னொரு பக்கத்தில் ஜனங்கள் ஏதோ ‘டிரில்’ வகுப்பில் அணிவகுத்து நிற்பதுபோல் நின்று கொண்டிருப் பார்கள். அவர்கள் தலைக்குமேலே, ‘சரியான வழி’ என்று போட்டிருக்கும்.

இந்தச் “சரியான வழி”க்குத் தான், அதா வது ஒரு வரை யொருவர் நெருக்கி யடிக்காமல் வரி சையாக நிற்கும் வழிக்குத்தான் ஆங்கிலத்தில் ‘க்யூ வரிசை’ என்று பெயர்.

‘க்யூ வரிசை’ என்றால் என்ன என்பதை நீங்கள் தெரிந்து கொண்டு விட்டபடியால் மேலே இதைப்பற்றி ஒரு சிறு கதை சொல்லலாம் என்று பார்க்கிறேன்.

ஜெர்மனியில் சாமான், பண்டங்கள் கிடைப் பதற்கு மிகவும் திண்டாட்டமாய் இருக்கிறபடியால், எந்த சாமான் வாங்குவதற்கும் ஜனங்கள் க்யூ வரிசையில் வெகு நேரம் நின்றுகொண்டிருப்பார்களாம். ஒரு ஜெர்மானியனுக்கு ஒரு கெஜம் துணி வாங்கவேண்டி யிருந்தது. இதற்காக அவன் ஒவ்வொரு துணிக் கடையிலும் ஒன்பது மணி நேரம் க்யூ வரிசையில் நின்று, நின்று அலுத்துப் போய் விட்டான். க்யூ வரிசையில் நின்று, நின்று கால் ஒடிந்தது மிச்சமே யொழியத் துணி கிடைக்கும் வழியாயில்லை.

ஒரு நாள் அவனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. இத்தனை கஷ்டத்துக்கும் அந்த ஹிட்லர் அல்லவா காரணம் என்று நினைத்தான். உடனே போய் அந்த ஹிட்லரைக் கொன்று தீர்த்து விட்டுத்தான் மறு காரியம் என்று ஹிட்லர் மாளிகையை நோக்கி ஓடினன். மாளிகையை அடைந்தான். ஆனல் என்ன ஏமாற்றம்! அங்கும் ஒரு மைல் நீளத்துக்கு ஜனங்கள் க்யூ வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். எல்லாரும் இவனைப் போல் ஹிட்லரைக் கொல்வதற்காக அங்கு வந்தவர்கள்!

அப்பொழுது அந்த ஜெர்மானியனுக்கு க்யூ வரிசையின்மீது எத்தனை ஆத்திரமாக இருந்திருக்கும்! அதே ஆத்திரம்தான் எனக்கும் 'க்யூ வரிசை' யின் மீது.

அது என்னமோ தெரியவில்லை, இந்த 'க்யூ வரிசை யைக் கண்டால் எனக்குப் பிடிப்பதே

இல்லை. இது மிகவும் நல்ல வழக்கம் என்றும், எல்லாரும் இம்மாதிரி நிற்கப் பழகிக்கொள்ள வேண்டும் என்றும், எல்லாரும் இம்மாதிரி நிற்கப் பழகிக் கொள்ளாததனால்தான் நமக்கு இன்னும் சுயராஜ்யம் கிடைக்கவில்லை யென்றும் சொல்லுகிறவர்கள் அநேகரை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் எனக்கு என்னமோ இந்த க்யூ வரிசையில் நிற்பதனால் நன்மைகளை விடத் தீமைகள்தான் அதிகம் இருப்பதாகத் தோன்றுகிறது.

உதாரணமாக இந்தச் சினிமாக் கொட்டகைகளை எடுத்துக் கொள்ளுங்கள்! வர வர அநேக சினிமாக் கொட்டகைகளில், அதிலும் முக்கியமாக ஆங்கில சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் வாங்குவதற்காக க்யூ வரிசையில் நிற்கும் வழக்கம் பரவி வருகிறது.

இந்தச் சினிமாக் கொட்டகைகளுக்கு முன்னால், டிக்கட் வாங்குவதற்காக க்யூ வரிசையில் நிற்கும்போதெல்லாம் நான் கடவுளை வேண்டிக் கொண்டேயிருப்பேன்.

"பகவானே! இந்தியாவுக்கு வேறு என்ன கஷ்டம் வந்தாலும் வரட்டும்! தேசத்திலுள்ள பஞ்சம் நீங்கி, செழிப்பு ஏற்பட்டு, எல்லாரும் அஜீரணத்தினால் சாகும் துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படட்டும்! ஆனால் நம் தமிழ் சினிமாக் கொட்டகைகளுக்கு முன்னாலும் இம்மாதிரி க்யூ வரிசையில் நிற்கும் கஷ்டம் ஏற்பட வேண்டாம்" என்று வேண்டிக் கொள்வேன். அதற்குக் காரணம் கூறுகிறேன், கேளுங்கள்.

தற்காலத்தில் தமிழ் சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் வாங்குவதே ஒரு தனிக்கலை என்று கூறவேண்டும். ஒருவன் வாழ்க்கையில் வெற்றியடைவானா, மாட்டானா என்பதை அவனால் ஒரு தமிழ் சினிமாவின் முதல் நாள் ஆட்டத்திற்கு டிக்கட் வாங்க முடிகிறதா, இல்லையா என்பதிலிருந்து கண்டு பிடித்து விடலாம்.

ஏனெனில் நான் இப்பொழுது குறிப்பிடப் போகும் சில யோக்கியதாம்சங்கள் இருந்தால்தான் தமிழ் சினிமாக் கொட்டகையில் டிக்கட்டு வாங்க முடியும்.

முதலாவதாக, நல்ல தேக திடகாத்திரம் இருக்கவேண்டும். நூறு பேருக்குப் பின்னால் வந்தாலும் அவர்களை முண்டி யடித்துத் தள்ளிவிட்டு, முன்னால் போய் டிக்கட்டு வாங்குவதற்குத் தேக திடகாத்திரமின்றி முடியாது. ஆகவே எவ்வளவுக்கெவ்வளவு நாம் சினிமா அதிகமாகப் பார்க்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நம் தேகம் திடம் பெறும் என்றே சொல்லலாம்.

க்யூ வரிசையில் நின்றால் நம் தேகம் திடம் பெறுமா, நீங்களே சொல்லுங்கள் ! மேல் நாடுகளில் க்யூ வரிசையில் நிற்கிறார்களே என்றால் அவர்கள் தேகம் திடமாவதற்கு எத்தனையோ வழிகள் வைத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட எல்லாருமே தேகாப்பியாசம் செய்கிறார்கள். கால் பந்து, கிரிக்கட் போன்ற அநேக விளையாட்டுகள் விளையாடுகிறார்கள்.

ஆனால் அம்மாதிரி நாம் எங்கே விளையாடுகிறோம் ? தேகாப்பியாசமாவது செய்கிறோமா ?

அதுவும் கிடையாது. அப்படி யிருக்கத் தமிழ் சினிமாக் கொட்டகைகளுக்கு முன்னாலாவது நாம் ஒருவருக் கொருவர் முண்டி யடித்துக் கொண்டு தேகாரோக்யம் பெறுவதை எதற்காகச் சில நாகரிக புருஷர்கள் தடுக்கிறார்கள் என்று கேட்கிறேன்!

நமக்குள் ஐக்ய பாவம் வளர்வதற்கு இம் மாதிரி முண்டி யடித்து, நெருக்கி யடித்து டிக்கட் வாங்குவதை விடச் சிறந்த வழி கிடையாது என்பது என் அபிப்பிராயம்.

அப்படி டிக்கட் வாங்கும்போது நாம் ஹிந்து வென்றோ, முஸ்லிம் என்றோ வித்தியாசம் பார்க்கிறோமா? பிராமணர் என்றோ, பிராமணரல்லாதார் என்றோ நினைத்துப் பார்க்கிறோமா? ஏழை யென்றோ, பணக்காரன் என்றோ எண்ணிப் பார்க் கிறோமா? ராஜாஜி கட்சியா அல்லது காந்தி கட்சியா........அதுதான் இப்பொழுது இரண்டு கட்சி யும் ஒரு கட்சிதான், சுயராஜ்யம் சம்பாதிக்கும் கட்சிதான் என்று ஆகிவிட்டதே!—ஆகவே இந்த வித்தியாசத்தையும் நாம் பாராட்டுவதில்லை.

யாராயிருந்தாலும் சரி, எல்லாரும் நமக்குச் சமம். "எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்தியா மக்கள்." ஆகவே நாம் தமிழ் சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் வாங்கும்போது ஜாதி வித்தியாசம், மத வித்தி யாசம், கொள்கை வித்தியாசம் எதுவும் பாராட்டுவ தில்லை. யாராய் இருந்தாலும் சரி, ஒன்று தான் என்று அவர்களைக் கழுத்தைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு முன்னால் செல்கிறோம்.

க்யூ வரிசையில் நிற்கும் வழக்கம் பரவி விட்டால், நமது ஐக்ய பாவம் இந்த ரீதியில் வளர்வதற்கு வழி யுண்டா, நீங்களே சொல்லுங்கள்!

அடுத்தபடியாக, இந்தப் பழைய வழக்கத்தினால் ஏற்படும் இன்னொரு நன்மையைக் கேளுங்கள். எவ்வளவுக் கெவ்வளவு நாம் கஷ்டப்பட்டு டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே செல்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நம் மனதுக்குச் சந்தோஷமாக இருக்கிறது. டிக்கட் கிடைத்த சந்தோஷத்தில் கொட்டகைக்குள் உள்ள குறைபாடுகள், கஷ்டங்கள் நம் கண்ணில் தென்படுவதே இல்லை.

உள்ளே எவ்வளவு இறுக்கம் புழுங்கட்டும், மூட்டைப் பூச்சிகள் கடிக்கட்டும், படம் மண்ணாக இருக்கட்டும், நாம் கவனிப்பதே இல்லை. நாம் டிக்கட் வாங்கின சாமர்த்தியத்தைப் பற்றியே எண்ணி, எண்ணி, நாம் சந்தோஷப் பட்டுக்கொண் டிருப்பதால் படம் எத்தனை ஓட்டையாய் இருந்தாலும் நாம் ரஸிக்கிறோம்.

ஆனால் க்யூ வரிசையில் நின்று, கஷ்டம் இல்லாமல் டிக்கட் வாங்குவதில் இத்தனை ஆனந்தம் இருக்கிறதா? கிடையாது.

இல்லை நீங்கள் படம் பார்க்கிறவர்கள் இல்லை, படத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் படத்திற்குப் பொதுஜன ஆதரவு நிறைய இருக்கிறது என்பது எப்படித் தெரியும்?

ஜனங்கள் ஒருவர் பின் ஒருவராக, சண்டை சச்சர வின்றி, இரைச்சல், கூச்சல் ஒன்று மின்றி,

கொட்டகைக்குள் நுழைந்தால் கூட்டம் நிறைய வருகிறது என்று தெரியுமா? இல்லை, ஒருவரை யொருவர் நெருக்கி யடித்துக் கொண்டிருந்தால் கூட்டம் நிறைய வருகிறது என்று தெரியுமா? சந்தேக மின்றி, நெருக்கி யடித்துக் கொண்டிருந் தால்தான் தெரியும். இல்லாவிடில் சில தமிழ்ப் பட முதலாளிகள் வேண்டு மென்றே ஜனங்கள் கொட்டகைக்கு வெளியில் ஒருவரை யொருவர் அடித்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்தை ஏற் படுத்தி அதைப் படம் பிடித்து வெளியிடுவார் களா?

தங்கள் படத்துக்கு டிக்கட் வாங்குவதற்காக ஜனங்கள் ஒருவரை யொருவர் அடித்துக் கொள் கிறார்கள் என்று காண்பிப்பதற்காக எத்தனை தமிழ்ப் பட முதலாளிகள் வேண்டு மென்றே கடைசி நிமிஷம் வரை டிக்கட் கொடுக்காமல் ஜனங் களைக் காக்க வைக்கிறார்கள்! எத்தனை தமிழ்ப் பட முதலாளிகள் தங்கள் காரியாலயச் சிப்பந்திகளையும் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சொல்லி நெருக் கடி ஏற்படுத்துகிறார்கள்!

ஆனால் க்யூ வரிசையில் ஜனங்களை நிறுத்தி வைத்து டிக்கட் வாங்கச் சொன்னால் இத்தனை கூட் டம் காண்பிக்க முடியுமா?

மேற் கூறிய காரணங்களுக்காக இல்லா விட் டாலும் இப்பொழுது நான் சொல்லப் போகும் ஒரு காரணத்திற் காகவேனும் இந்த க்யூ வரிசை வழக் கம் நம் நாட்டில் பரவக் கூடாது என்று நான் கூறுவேன்.

"தடி யெடுத்தவன் தண்டல்காரன்" என்னும் அழகிய தமிழ்ப் பழமொழியை அழியாமல் காத்து வருகிறவர்கள் யாராவது உண்டென்ருல் அது தமிழ்ப்பட முதலாளிகள்தான். அவர்கள் தமிழ்ப் பழமொழிக்குச் செய்து வரும் இப் பெரும் தொண்டு அழியாமல் இருக்க வேண்டுமானல், க்யூ வரிசை வழக்கம் பரவாமல் இருக்க வேண்டும். வேறு எங்கு பரவினலும் சினிமாக் கொட்டகைக் குப் பரவக்கூடாது. சந்தேக மில்லை!

ஆகவே என்ன சொல்கிறீர்கள்? இந்த பாழாய்ப்போன க்யூ வரிசை வழக்கம் பரவாமல் இருக்கவேண்டும் என்று நீங்கள் என்னுடன் சேர்ந்து பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்க விரும்புகிறீர்கள் அல்லவா?....சரி, அதற்காக, எதற்காக அப்படி எல்லோரும் மோதி அடித்துக் கொண்டு பிள்ளையார் கோவிலை முற்றுகை போடு கிறீர்கள்? க்யூ வரிசையில் நின்று ஒவ்வொருவ ராகத் தேங்காய் உடையுங்களேன்!

○ ☆ ○

# வைத்தியர்கள் ஜாக்கிரதை!

[குறிப்பு:—"திருடர்கள் ஜாக்கிரதை" என்கிற பதச் சேர்க்கையில் யார் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அர்த்தமோ அதே அர்த்தத்தில்தான் மேலேயுள்ள தலைப்பு எழுதப்பட்டிருக்கிறது.]

அன்று என் தம்பி அரட்டைக் கல்லி பாலுவுக்கு ஒரே வயிற்று வலி! வயிற்று வலிக்கு என்ன காரணம் என்பது எனக்கும் தெரியும், பாலுவுக்கும் தெரியும். பக்கத்து ஹோட்டலில் ஒரே சமயத்தில் ஒரு ரூபாய்க்கு இட்லியும் சாம்பாருமாக 'மொசுக்கினால்' வயிற்றை வலிக்காமல் பின் என்ன பண்ணும்?

ஆனால் என் தாயாருக்கு அது தெரியாது நானும் சொல்லவில்லை. ஆகவே, வயிற்றுவலி பொறுக்காமல் பாலு கத்த ஆரம்பிக்கவே, அவனை டாக்டர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகும் படி என் தாயார் கத்த ஆரம்பித்து விட்டாள். கத்தல் பொறுக்காமல் (தாயாரின் கத்தல்தான், பாலுவின் கத்தல் அல்ல) பாலுவை அழைத்துக்கொண்டு பக்கத்தில் இருந்த ஒரு டாக்டர் வீட்டுக்குப் போனேன்.

டாக்டரின் இள வயதிலிருந்தும், வர்ணம் அழியாமல் பள பளவென்று மின்னிக் கொண்டிருந்த அவர் போர்டிலிருந்தும் அவர் வைத்தியத் தொழில் ஆரம்பித்து இரண்டு மூன்று வருஷங்களுக்கு மேலிராது என்று பட்டது.

பானுவுக்கு வயிற்றுவலி என்று சொன்னதும் அவர் பானுவை அதே அறையில் படுதாவினல் மறைக்கப்பட்டிருந்த பாகத்துக்கு அழைத்துக் கொண்டு சென்ருர். அதில் ஒரு பெஞ்சும், தலையணையும் போடப்பட்டிருந்தது. டாக்டர் பானுவைப் பெஞ்சியில் படுத்துக் கொள்ளச் சொல்லி, தொப்புளண்டை படீர் என்று ஒரு குத்துவிட்டார். பானு "ஐயோ" என்று அலறினன்.

"எங்கே வலிக்கிறது, இங்கேயா?" என்று கேட்டார் டாக்டர்.

"இல்லே" என்ருன் பானு.

இந்தப் பதில் டாக்டருக்குப் பெருத்த ஏமாற்றம் அளித்தது என்பது அவர் முகத்தைச் சுளித்துக் கொண்டதிலிருந்து தெரிந்தது. ஆகவே அவர் பானுவின் வயிற்றில் இன்னெரு இடத்தில் முன்னே விட இன்னும் பலமாகக் குத்து விட்டார்.

"இங்கேயா வலிக்கிறது?"

"இல்லே."

இப்படியாகத்தானே டாக்டர் வயிறு முழுவதும் பலமாகக் குத்தியும் பானுவுக்கு எங்கே வலிக்கிறது என்று சொல்லத் தெரியவில்லே. ஆனல் முன்னே விடப் பலமாக, "வயிறு வலிக்கிறதே" என்று அழ ஆரம்பித்து விட்டான். வயிற்றில் டாக்டர் அத்தனே குத்துகள் விட்டிருக்கும்போது வலிக்காமல் என்ன பண்ணும்?

வயிற்றில் குத்திக் குத்தி, டாக்டருக்குக் கை தான் வலித்ததோ, அல்லது யோசனே பண்ணு

வதற்குத்தான் சற்று அவகாசம் வேண்டியிருந்ததோ, பாலுவின் வயிற்றில் குத்துவதை நிறுத்தி. ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து, சிறிது நேரம் புகை விட்டார். சிகரெட்டைக் குடித்து முடித்ததும், பாலுவைத் திரும்பிப் படுத்துக் கொள்ளச் சொல்லி முதுகில் ஒவ்வொரு இடமாகக் குத்த ஆரம்பித்தார். குத்து பொறுக்காமல் பாலு அழுதானே யொழிய பாலுவால் எங்கே வலிக்கிறது என்று மாத்திரம் சொல்ல முடியவில்லை.

டாக்டருக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. பாலுவை மறுபடியும் திரும்பிப் படுத்துக் கொள்ளச் சொன்னார். கையினால் குத்துவதற்குப் பதில் ஸ்டதாஸ் கோப்பினால் ஒவ்வொரு இடமாக அமுக்கினார். ஊஹூம். அப்பொழுதும் பலன் இல்லை.

பிறகு தீப் பெட்டியைத் திறந்து தீக்குச்சி ஒன்று எடுத்தார். தீக் குச்சினால் வயிற்றில் என்னென்னமோ கோடுகள் போட்டார். அதிலும் அவருக்கு ஒன்றும் புலனாகவில்லை.

**பி**றகு பாலுவைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். அவர் போட்ட கேள்விகளைக் கேட்ட போது எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. சில போலீஸ் ஸ்டேஷன்களில் சாமான் பறி கொடுத்தவர்களைக் கேள்வி கேட்பார்களே, தெரியுமா?

"உங்கள் சாமானைத் திருடியிருக்கலாம் என்று யார் பேரிலாவது சந்தேகப் படுகிறீர்களா?"

"சாமான் திருட்டுப் போன போது யாராவது பக்கத்தில் சாட்சி இருந்தார்களா?"

"திருட்டுப் போன சாமான்கள் உங்களுக்குத் தான் சொந்தம் என்பதற்கு ஏதாவது ருஜு உண்டா?"

அன்று டாக்டர் பானுவை இதே மாதிரிதான் கேட்டார்.

"உனக்கு இதற்கு முன்னர் இதேமாதிரி வயிற்றுவலி வந்ததுண்டா?"

"அப்பொழுது என்ன மருந்து சாப்பிட்டாய்? ஞாபகம் இருக்கிறதா?"

"வயிற்று வலி எத்தனை மணிக்குச் சரியாக ஆரம்பம் ஆயிற்று என்று சொல்ல முடியுமா?" என்று இப்படிக் கேட்டுக் கொண்டே போனார்.

எனக்கா, "ஐயோ, நாழியாகிறதே, வாசலில் ரிக்ஷாக்காரனை வேறு நிறுத்தி வைத்துவிட்டு வந்துவிட்டோமே, இன்றைக்கு அவனோடு ஒரு சண்டை போட்டுத்தான் தீரவேண்டியிருக்கும் போலிருக்கே" என்று பயம்!

கேள்விப் படலம் முடிந்ததும் டாக்டர் கொஞ்ச நேரம் தலையைச் சொறிந்தார். பிறகு என்னைச் சமிக்ஞை செய்து வெளியே அழைத்தார்.

அவர் அப்படி சமிக்ஞை செய்து அழைத்ததும் நான் பயந்தே போய்விட்டேன். பானுவுக்கு என்னமோ, ஏதோ என்று நடுங்கினேன்.

இரண்டு பேரும் அறையின் முன்பக்கம் போனதும் டாக்டர், "எனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் பக்கத்தில் இருக்கிறார். அவரையும் அழைத்துக் கொண்டு வந்து காட்டி 'கன்ஸல்ட்' பண்ணினால்

தேவலை என்று படுகிறது. என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"எதற்காக இத்தனை சிரமம்! நான் வேண்டுமானால் நாளைக்குப் பையனை அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்றேன்.

"இல்லை, இல்லை. இதோ நானே போய் டாக்டரை அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று டாக்டர் தம் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

பத்து நிமிஷத்தில் இன்னொரு டாக்டரை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். அந்த டாக்டரும் முதல் டாக்டர் செய்ததுபோலவே முதலில் வயிற்றில் குத்தினார், பிறகு முதுகில் குத்தினார், பிறகு ஸ்டதாஸ்கோப்பினால் அமுக்கினார் தீக்குச்சியினால் கீறினார், கடைசியில் கேள்விகள் கேட்டார்.

கடையில் தம் தலையைச் சொறிந்துகொண்டு, முதல் டாக்டரைச் சமிக்ஞை செய்து வெளியே கூப்பிட்டார்.

இதைக் கண்டதும் பாலு பயந்தே விட்டான். எங்கே மூன்றாவது டாக்டர் ஒருவரை அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லிவிடப் போகிறார்களோ என்று அவனுக்கு நடுக்கம்! ஆனால் நல்ல வேளையாக அத்தகைய விபரீதம் ஒன்றும் நிகழ வில்லை. இரண்டாம் டாக்டர் முதல் டாக்டரை சமிக்ஞை செய்து கூப்பிட்டது, பாலுவுக்குத் தெரியாமல் ரகசியமாக ஒருவரை வொருவர் 'கன்ஸல்ட்' பண்ணுவதற்காகத்தான்.

இரண்டு டாக்டர்களும் ஒரு பத்து நிமிஷம் ஏதோ குசு, குசு என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் பேசிக் கொண்டது காதில் விழாத படி வாசலில் இருந்த ரிக்ஷாக்காரன் கத்த ஆரம்பித்து விட்டான் !

கடைசியாக இரண்டு டாக்டர்களும் ஒரு வகையாகப் பேசி முடித்ததும் முதல் டாக்டர், "இந்தப் பௌடரை இரண்டு மணிக்கொரு தடவை கொடுங்கள். குணமாக வில்லையென்றால் நாளைக்கு வாருங்கள். ரத்தத்தைப் பரிசோதனைக்கு அனுப்புகிறேன்" என்று ஒரு கடிதத்தைக் கையில் கொடுத்தார்.

இந்தக் காலத்தில்தான் டாக்டரே கையில் மருந்து வைத்துக் கொள்ளும் வழக்கம் கிடையாதே. டாக்டர் மருந்து எழுதிக் கொடுக்க வேண்டியது. நாம் ஒவ்வொரு கடையாக மருந்து இருக்கிறதா என்று அலைய வேண்டியது. இதுதானே தற்கால முறை?

இதே முறைப் பிரகாரம், பானுவைக் கொண்டு போய் வீட்டில் சேர்த்துவிட்டு, ரிக்ஷாக்காரனோடும் சண்டை போட்டுவிட்டு டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தைத் தேடிக்கொண்டு கடை கடையாக அலைந்தேன். ஒரு கடையிலாவது மருந்து கிடைக்கணுமே, கிடையாது.

நான் எதிர்பார்த்ததுபோல் பானுவுக்கு மருந்தில்லாமலே வயிற்று வலி குணமாகி விட்டது. ஆனால் தற்கால வைத்தியர்கள் மேல் எனக்குள்ள கசப்பு மாத்திரம் குறையவே யில்லை.

தற்கால வைத்தியர்களையும், வைத்திய முறைகளையும் கண்டால் மகாத்மா அவர்களுக்கு பிரிட்டிஷ் ஆட்சியை விடக் கசப்பு என்பது பிரசித்தம். ஆனால் மகாத்மா ஏன். எல்லாருக்கும் தான், எனக்கும்தான் கசப்பா யிருக்கிறது.

அத்தனைக்கும் தற்கால வைத்தியர்கள் மருந்துக்குக் கூடக் கசப்பு மருந்து கொடுப்ப தில்லையே, அவர்கள்மீது எனக்கு ஏன் இத்தனை கசப்பு என்று நேயர்கள் கேட்கலாம்.

பின் நமக்கு வேண்டிய மருந்துக்கெல்லாம் அமெரிக்காவையும், ஆஸ்திரேலியாவையும் தான் நம்பிக் கிடக்க வேண்டுமென்றால் கோபம் வருமா, வராதா? இந்த யுத்தம் வந்து, கப்பல்கள் வருவது குறைந்தாலும் குறைந்தது, மருந்து கிடைக்காமல் திண்டாட வேண்டி யிருக்கிறது. அப்படியாவது நாட்டு வைத்தியர்களைப்போல் நம் ஊர் சாமான்களை வைத்துக்கொண்டு மருந்து பண்ணிக் கொடுக்கத் தெரிகிறதா? கிடையாது.

தற்கால டாக்டர்கள் எட்டு வருஷமும், பத்து வருஷமும் பிரமாதமாக வைத்தியம் படிக்கிறார்களே யொழிய, கடைசியில் அமெரிக்காவில் உற்பத்தியாகும் மருந்துகளுக்கு விற்பனை ஏஜண்ட் உத்தியோகம்தான் பார்க்கத் தெரிகிறது. ஏதோ சீட்டு எழுதிக் கொடுத்து, கடைக்காரனிட மிருந்து கமிஷன் பெறும் உத்தியோகம்தான் செய்ய வேண்டி யிருக்கிறது.

இந்த டாக்டருக்கும் நல்ல பெயர் வாங்கிக் கொடுக்கும் டாக்டர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு 'ஸ்பெஷலிஸ்டுகள்' என்று பெயர்.

இவர்களிடம் வைத்தியம் செய்துகொள்ள விரும்புகிறவர்கள் தாங்கள் பாதி வைத்தியர்களாயிருப்பது நலம். தங்கள் வியாதி உடம்பின் எந்தப் பாகத்தைச் சேர்ந்தது என்பதை நிர்ணயிக்கத் தெரிந்தவர்கள்தான் 'ஸ்பெஷலிஸ்டு'களிடம் போகலாம்.

இருதயத்திலிருந்து இரண்டு அங்குலச் சுற்று வட்டாரத்தில் உள்ள வியாதிகளுக்கென்று ஒரு ஸ்பெஷலிஸ்ட் இருப்பார். இருதயத்திலிருந்து மூன்று அங்குலத்துக்கு அப்பால் வியாதி உள்ளவர்கள் இவரிடம் போனால் வீண் பணச் செலவும் கால விரயமும்தான் ஆகும். "இந்த வியாதி என் இலாகாவைச் சேர்ந்ததல்ல" என்று கண்டு பிடிப்பதற்கே ஸ்பெஷலிஸ்டுக்கு ஒரு மாத காலம் ஆகும்.

அப்படிக் கண்டுபிடிப்பதற்குள் அவர் இருபது தடவையாவது நம் ரத்தத்தைப் பரிசோதித்து விடுவார். ஒரு பத்துத் தடவையாவது நம்மை 'எக்ஸ்ரே' எடுத்து விடுவார். இன்னும் என்னென்னமோ மருந்துகள் கொடுப்பார். வியாதியைக் குணப்படுத்துவதற்காக மருந்து கொடுக்கிறார் என்று நினைத்து ஏமாறுகிறவர்கள் எத்தனையோ பேர்! இந்த மருந்து உடம்பில் என்னென்ன கோளாறுகள் ஏற்படுத்துகிறது என்று கவனித்து, அதன் மூலம் என்ன வியாதி, அந்த வியாதி தங்கள் இலாகாவைச் சேர்ந்ததுதானா என்று கண்டு பிடிப்பதே இந்த டாக்டர்களின் நோக்கம்.

நம் வியாதி இவர் இலாகாவைச் சேர்ந்த தல்ல, இவரால் குணப்படுத்த முடியாது என்று கண்டு பிடிப்பதற்காக நாம் பணம் கொடுத்தாக வேண்டும்!

நீங்களே சொல்லுங்கள்: இத்தகைய வைத்தியர்களைக் கண்டால், "வைத்தியர்கள், ஜாக்கிரதை" என்று சொல்லத் தோன்றுமா, தோன்றாதா?

○ ☆ ○

# ஸ்ரீமதி சரஸ்வதி அவர்களுக்கு!

[ஸ்ரீமதி சரஸ்வதி வேறு யாரும் இல்லை; எல்லாம் என் மனைவி சரசு தான்.]

மனைவி என்ற முறையில் தங்களை நான் ஒருமையி லேயே அழைக்கலாம் என்று சட்டமும், சம்பிர தாயமும் இடம் கொடுத்திருந்த போதிலும், நான் தங்களைப் பன்மையில் அழைப்பதன் காரணத் தைத் தாங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என்றே நம்புகிறேன். தங்கள்மீது எனக்குள்ள கோபத்தைத் தெரிவிப்பதற்குப் பன்மைக்கும் பன்மை இருந்தால் கூடப் போதாது என்று தோன்றுகிறது.

அம்மணி! நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன்! தங்களிடம் எத்தனையோ தடவைகள் நேரிலும் சொல்லிப் பார்த்தேன். என் தாயார் பக்கத்தில் இருந்த சமயங்களில், தாங்கள் எதிர்த் துப் பேச முடியாது என்ற தைரியத்தில் சற்று அதிகாரமாகவும் சொல்லிப் பார்த்தேன். கொஞ்ச நாளாகத் தாங்கள் என்மீது கோபித்துக் கொண்டு பேசாமல் இருப்பதால் நானும் பேசக்கூடாது என்று வீம்பு வைத்துக்கொண்டு அனுவிடம் சொல் லுவது போல் தங்களிடம் சொல்லிப் பார்த்தேன். ஆனல் என்ன சொல்லியும் தாங்கள் திருந்தின தா கத் தெரியவில்லை.

தாயே! தங்களுக்கு எவ்வளவோ புண்ணியம் உண்டு. தயவு செய்து என் மேஜையை ஒழித்து

வைக்க வேண்டாம்! இத்தனை நாளாகத் தாங்கள் என் மேஜையை ஒழித்து வைத்துக் கட்டிக்கொண்ட புண்ணியம் தங்களுக்கு ஈரேழு ஜன்மங்களுக்கும் போதும். தயவு செய்து இனி மேலாவது என் மேஜையை ஒழித்து வைக்கும் கைங்கரியத்தை மேற் கொள்ளாதீர்கள். என் மேஜை எத்தனை குப்பை யாகவாவது இருக்கட்டும்! எத்தனை அலங்கோலமாகவாவது விளங்கட்டும்! அதைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம்.

அம்மையே! நான் காரியாலயம் போயிருக்கும் சமயம் பார்த்துத்தான் தங்கள் சிநேகிதர்கள் தங்களைப் பார்க்க வருகிறார்களாதலால் என் மேஜை அலங்கோலமாக இருந்தால் தங்களுக்கு அவமானமாக இருக்கலாம். அந்த அவமானத்துக்குப் பயந்தே தாங்கள் என் மேஜையை ஒழித்து வைப்பதாகத் தெரிகிறது.

ஆனால் இதை எனக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டு செய்கிறீர்களா, அல்லது தீமை செய்வதாக நினைத்துக் கொண்டு செய்கிறீர்களா என்றுதான் தெரியவில்லை. தங்கள் மனதுக்குள் தாங்கள் எனக்கு ஏதோ பெரிய நன்மை செய்வதாக நினைத்துக்கொண்டுதான் செய்கிறீர்கள் என்று தோன்றுகிறது. அப்படியானால் தாங்கள் இதுவரை எனக்குச் செய்துள்ள "நன்மை" இன்னும் ஈரேழு ஜன்மங்களுக்கும் போதும். இதற்கு மேலும் தங்கள் நன்மையை என்னால் தாங்க முடியாது.

ஆம், தாயே! தாங்கள் என் மேஜையை ஒழித்து வைப்பது எனக்குப் பிரதிகூலமாக முடிகிறதே யொழிய, அதனால் எனக்குத் துளிக்கூட அனுகூலம் இல்லை. இதைத் தங்களிடம் நேரில் சொன்னால் என்ன பண்ணுவீர்களோ என்று பயந்து கொண்டுதான் என் அபிப்பிராயத்தை இக்கடிதம் மூலம் தெரிவிக்கிறேன்.

அம்மா பரதேவதே! தற்காலத்திய நாகரிகப் படி மனைவி செய்யும் காரியங்களைப் புருஷன் கண்டிக்கக் கூடாது என்றாலும் பழைய கால வழக்கத்தை யொட்டி, தங்கள் அனுமதியின் பேரில் தங்கள் காரியத்தில் ஒரே ஒரு குற்றம் மாத்திரம் எடுத்துக் காட்டலாம் என்று நினைக்கிறேன்.

அம்மணி! முதலில் 'ஒழிப்பது' என்றால் என்ன என்றே தாங்கள் இன்னும் தெரிந்து கொள்ள வில்லை என்று தெரிகிறது. இது விஷயமாகத் தாங்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்திற்கும் அடியேன் கொண்டுள்ள அபிப்பிராயத்துக்கும் பெருத்த வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு சாமானுக்கும் ஒரு இடத்தைக்குறிப்பிட்டு, அதை, அதை அந்தந்த இடத்தில் வைப்பதற்குத்தான் ஒழிப்பது என்று பெரியவர்கள் அர்த்தம் கொண்டிருப்பதாக எனக்கு ஞாபகம்.

பெரியவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களை யெல்லாம் கண்ட துண்டம் செய்வதுதான் தற்காலத்திய 'பேஷ'னாகக் கருதப் படுகிறது என்றாலும், இந்த ஒரு விஷயத்திலாவது பெரியவர்கள் கருத்தை ஒப்புக் கொள்ளலாம் என்று நினைக்கி

றேன். ஏனெனில் இதில் கொஞ்சம் நியாயமும் இருப்பதாகத் தெரிகிறது. வேண்டிய சாமான்களை வேண்டிய போது எடுக்க முடிய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே பெரியவர்கள் 'ஒழித்தல்' என்ற பதத்துக்கு இந்த அர்த்தம் கொடுத்திருப்பதாக அடியேனுடைய சிற்றறிவுக்குப் புலனாகிறது.

ஆனால் அம்மையே! தங்கள் அகராதியிலோ இதே வார்த்தைக்கு வேறு அர்த்தம் இருப்பதாகத் தெரிகிறது. மேஜையில் இருக்கும் சாமான்களையெல்லாம் ஒரே சுருட்டாகச் சுருட்டுவது, சுருட்டி மேஜை டிராயரிலோ அல்லது பக்கத்தில் உள்ள அலமாரியிலோ அடைப்பது, பிறகு மேஜை டிராயரையும் அலமாரிக் கதவையும் இறுகச் சாத்துவது, இதுதான் 'ஒழிப்பது' என்னும் பதத்துக்குத் தாங்கள் கொண்டிருக்கும் பொருள்.

தங்கள் சிநேகிதர்கள் வரும் சமயத்தில் மேஜை பள, பள வென்று விளங்க வேண்டும், மேஜைமீது ஒரு சாமான் கூட இருக்கக்கூடாது, மேஜை விரிப்பின் மீது தாங்கள் போட்டிருக்கும் பூ வேலை மாத்திரம்தான் தெரியவேண்டும் என்பது தங்கள் எண்ணம்.

ஆனால் அம்மணி! இதனால் நான் எவ்வளவு சிரமப் படுகிறேன் என்பது தங்களுக்கு எங்கே தெரியப்போகிறது? குயவனுக்கு பல நாள் வேலை, தடியனுக்கு ஒரு நிமிஷ வேலை என்பது போல் தாங்கள் ஒரே நிமிஷத்தில் ஒழித்து வைக்கும் சாமான்களை, நான் திரும்பவும் எது எது எங்கே

இருக்கிறது என்று கண்டு பிடிக்க ஒரு மணி நேரம் ஆகிறது.

சில சமயங்களில் இதனால் ஏற்படும் விபரீதங்களைச் சொல்லி முடியாது.

அன்றொரு நாள் பாருங்கள், எங்கள் காரியாலயத்தில் திடீரென்று ஒரு விபரீதம் நிகழ்ந்தது. எனக்கும் என் காரியாலய "ப்ரூப் ரீடருக்கும்" சற்று ஆகாது. என் மீது காண்பிக்க முடியாத கோபத்தை யெல்லாம் அவர் எப்பொழுதும் என் கட்டுரைகள் மீது காண்பிப்பது வழக்கம். என் கட்டுரைகள் அச்சுக் கோத்தானதும் ப்ரூப் பார்ப்பதற்காக அவரிடம் வரும். அப்பொழுது அவர் முகத்தை வைத்துக் கொள்ளும் கோரத்தைப் பார்க்க வேண்டுமே! விளக்கெண்ணெய் குடித்தவன் முகம் கூடச் சற்று சுமுகமாய் இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

அப்படிப் பட்ட ப்ரூப் ரீடர் நான்கு நாளைக்கு முன்னர் என் கட்டுரை ஒன்றை ப்ரூப் பார்த்துக் கொண்டிருக்கும்போது விழுந்து, விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

அதைப் பார்த்ததும் எனக்குண்டான சந்தோஷம் சொல்லி முடியாது. "என்ன, கட்டுரை அவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"ஆமாம், முதலில் ஆறுமாதக் குழந்தையாக வரும் தங்கள் அனு திடீரென்று கட்டுரையின் பின் பகுதியில் மாலா என்ற பெயருடன் எட்டு வயதுப் பெண்ணாக வருவது வெகு ஹாஸ்யமாக இருக்

கிறது" என்று அவர் பதில் அளித்தார். தாங்கள் என் மேஜையை அடிக்கடி ஒழித்து வைப்பதால் ஏற்படும் விபரீதங்களில் அது ஒன்று என்று அப்பொழுதுதான் உணர்ந்தேன்.

முதல் நாள் நான் இரண்டு கட்டுரைகள் எழுதி மேஜை மீது வைத்திருந்தேன். மேஜையைத் தாங்கள் ஒழித்து வைக்கையில் கட்டுரை எழுதப் பட்டிருந்த கடிதங்கள் கலந்து போய் முதற்கட்டுரையின் முதல் பகுதியும், இரண்டாம் கட்டுரையின் பின் பகுதியும் சேர்ந்து ஒரு கட்டுரையாக மாறி அச்சுக்குப் போய்விட்டது என்று அப்பொழுது தான் தெரிந்தது!

ஆனால் இதாவது பரவா யில்லையே! இதைவிட விபரீதமான சம்பவம் ஒன்று சமீபத்தில் நிகழ்ந்தது. கல்யாண மானதும் நான் தங்களுக்கு முதல் முதலில் சற்று அசட்டும் பிசட்டுமாக எழுதிய கடிதம் ஞாபகம் இருக்கிறதா? அதை என் மேஜை டிராயரிலேயே வைத்திருந்தேன். அன்று ஒரு நாள் தாங்கள் ஒழித்து வைக்கையில் அக்கடிதம் நான் அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யரிடமிருந்து இரவல் வாங்கிய புஸ்தகத்துக்குள் புகுந்து கொண்டு, புஸ்தகத்தோடு அண்ணுசாமி அய்யர் வீட்டுக்குப் போய் விட்டது. இரண்டு நாட்களாக நான் தெருவில் போகும் போதும், வருகிற போதும் அண்ணுசாமி அய்யரின் மனைவி என்னைப் பார்க்கிற பார்வையிலிருந்து அந்த அம்மாள் அக்கடிதத்தைப் படித்து விட்டாள் என்றே தோன்றுகிறது.

தங்களுக்குச் சந்தேகமாய் இருந்தால் இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். அன்றொரு நாள்......

[இத்துடன் இக் கட்டுரையை முடிப்பதைப் பற்றி நேயர்கள் மன்னிக்க! நேற்று ராத்திரி ஆத்திரம் தாங்காமல் கட்டுரை முழுவதும் எழுதி வைத்தேன். ஆனல் காலை நான் பல் தேய்த்து விட்டு வருவதற்குள் சரசு என் மேஜையை ஒழித்து வைத்து விட்டாள். கட்டுரையின் பிற்பகுதி போன இடம் தெரியவில்லை!]

○ ☆ ○

# "சமையல் அறையில் விடாதே"

அப்பா! இந்தப் பெண்களை நம்பவே கூடாது. என் மனைவி சரசு இருக்கிறாளே, பார்த்தால் பூனைபோல் இருக்கிறாள். என்னமோ என்னைக் கண்டு நடுங்குகிறவள்போல் நடிக்கிறாள். ஆனால் உண்மையிலேயே அவள் என்னைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயம் எனக்கு இப்பொழுதல்லவா தெரிகிறது?

சமீபத்தில்தான் கல்யாணம் ஆன தன் சிநேகிதி ஒருவளுக்குச் சரசு எழுதி வைத்திருந்த ஒரு கடிதத்தை நான் பார்க்க நேர்ந்தது........

"ஐயையோ! அநியாயம், அக்கிரமம்! பெண்கள் எழுதும் கடிதங்களைப் புருஷர்கள் பார்க்கவாவது? கடிதம் எழுதக்கூடப் பெண்களாகிய எங்களுக்குச் சுதந்திரம் கிடையாதா? குடி முழுகிப் போச்சு!" என்று படித்த பெண்கள் கதறுவது என் காதில் விழுகிறது.

"என்ன ஐயா! பெரிய காட்டு மிராண்டி மனுஷனாக இருக்கிறீரே? மனைவி எழுதும் கடிதங்களைப் புருஷன் பிரித்துப் பார்க்கவாவது! சட்! அநாகரிகம்!" என்று நவநாகரிக புருஷர்கள் முகத்தைச் சுளித்துக் கொள்வது என் மனக் கண் முன் தோன்றுகிறது!

மனைவி எழுதும் கடிதத்தைப் புருஷன் பிரித்துப் பார்க்கக் கூடாது என்னும் தற்கால சம்பிரதாயத்தை நான் அறிந்தவன்தான். இந்தச் சம்பிரதாயத்துக்கேற்ப சரசுவுக்கு வரும் கடிதங்களையோ, அல்லது அவள் எழுதும் கடிதங்களையோ நான் அவளுக் கெதிரில் பிரித்துப் பார்ப்பது கிடையாது. ஆனால் தபாலில் போடுவதற்காக அவள் கொடுக்கும் கடிதங்களை, அவளுக்குத் தெரியாமல் கூடப் பிரித்துப் பார்க்கக்கூடாது என்றால், பிறகு என்ன புருஷன், மனைவி வேண்டிக் கிடக்கிறது என்று கேட்கிறேன்? அப்படிப் பார்க்காத புருஷன் கையை மடக்கட்டும் பார்க்கிறேன்!

சரசு தன் சிநேகிதிக்கு எழுதியிருந்த கடிதத்தைக் கண்டதும் நான் திடுக்கிட்டே போய் விட்டேன். இதோ கடிதத்தைக் கீழே கொடுத்திருக்கிறேன். நீங்களே படித்துப் பாருங்கள் :

* * * *

என் பிரியமுள்ள ஹேமாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. நீ உன் புருஷனுடன் சந்தோஷகரமான வாழ்க்கை நடத்துகிறாய் என்று அறிய மிகவும் சந்தோஷம். ஆனால் என்னுடைய வாழ்க்கை அனுபவத்திலிருந்து நான் உனக்கு ஒரு நல்ல யோசனை சொல்லக் கூடும். இந்த யோசனையை நீ எவ்வளவுக் கெவ்வளவு பின்பற்றுகிறாயோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது. இல்லையோ, திண்டாட்டம்தான்.

பார்க்கப்போனால் நான் சொல்லப்போகும் யோசனை மிகவும் சின்ன யோசனைதான். எந்தப்

பெண்ணும் பின்பற்றி நடக்கக் கூடிய யோசனை தான். அது என்ன வென்றால் உன் புருஷனைச் **சமையல் அறையில் விடாதே!** எக்காரணம் பற்றியும் சமையல் அறையில் விடாதே!

கட்டின புருஷனுக்குச் சமையலறைக்கு வரக் கூடச் சுதந்திரம் கிடையாதா என்று நீ கேட்க லாம். உன்னைப்போல்தான் நானும் அசட்டுத்தன மாக நினைத்துக் கொண்டு என் புருஷனைச் சமையல் அறைக்குள் விட்டேன். அதன் காரணமாக வெகு அன்னியோன்யமாக வாழ்ந்த நாங்கள் எலியும், பூனையும் போல் சண்டை போட்டுக் கொள்ளத் தொடங்கி விட்டோம்.

கொஞ்ச நாட்களுக்கு முன்னல் வரையில் நான் அவாளைச் சமையல் அறைக்கு வரும்படி விட்டதே கிடையாது. எங்கே சமையல் அறைக்குள் நுழைந்து விடப் போகிருரோ என்று முன்கூட்டியே எல்லாக் காரியங்களையும் செய்து வைப்பேன். அவாள் காலை யில் எழுந்திருப்பதற்கு முன்னலேயே காப்பியைக கொண்டு போய் அவாள் அறையில் தயாராக வைத்து விடுவேன். "காப்பி எங்கே?" என்று கேட்டுக் கொண்டே சமையலறையைத் தேடி வரும் நிர்ப்பந்தம் அவாளுக்கு நான் வைப்பதே கிடை யாது.

என்னை ஏதாவது கேட்பதற்காக, "சரசு!" என்று அவர் கூப்பிட வேண்டியதுதான் தாமதம், எங்கே சமையலறையைத் தேடி வந்து விடப் போகிருரோ என்று நான் பயந்து கொண்டு விடு விடென்று கூடத்துக்கு ஓடி வந்து விடுவேன்.

சாப்பாட்டு வேளையிலும் அவரை நான் சமைய லறைக்குள் நுழைய விடுவதில்லை. எப்பொழுதும் அவரைக் கூடத்தில் வைத்துத்தான் சாப்பாடு போடுவேன்.

ஆனல் அனு பிறந்தாலும் பிறந்தாள், கூடவே சோம்பேறித்தனமும் பிறந்தது. ஒரு நாள் அனுவுக்காகப் பால் புட்டியில் பால் ஊற்றிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் பார்த்து, ''சாப்பாடு போடுகிருயா?'' என்று அவாள் கேட்க வும், சோம்பேறித்தனத்தால் ''இங்கே சமைய லறைக்குத் தான் வாங்களேன் சாப்பிட'' என்றேன்.

அப்படியே அன்று சமையலறைக்குச் சாப் பிட வந்தார். அன்றிலிருந்து எனக்கும் பிடித்தது அனர்த்தம்.

சமையல் அறைக்கும், கூடத்துக்கும் குழந் தையை இடுப்பில் வைத்துக்கொண்டு நடப்பதோடு, குனிந்தும் நிமிர்ந்தும் பறிமாறுவது சிரமம் என்று நான் சொல்லவேண்டியதில்லை. ஆகவே நான் சமையலறையிலேயே அவாளுக்குத் தட்டு வைத்துச் சாப்பாடு போட ஆரம்பித்தேன்.

சோம்பேறித்தனத்தால் நான் இந்த அனு கூலத்தைப் பார்க்கப் போக எனக்குப் பிடித்தது அனர்த்தம்! என்ன என்று இதோ சொல்லு கிறேன், கேள்.

முன்ஞெரு சமயம், நமக்குக் கல்யாணம் ஆவதற்கு முன்னல், என் தகப்பனர் நம் இருவரை யும் ஒரு நாடகத்துக்கு அழைத்துக் கொண்டு

போனரே, ஞாபகம் இருக்கிறதா? நாடகம் பார்ப்பதற்கு எத்தனை பிரமை யாயிருந்தது? ஆனல் நாடகம் முடிந்ததும் அவர் நம் இருவரையும் திரைக்குப் பின்னல் நடிகர்கள் வேஷம் போட்டுக் கொள்ளும் "கிரீன் ரூம்" அறையைக் காண்பித்தார் அல்லவா? அப்பொழுது நாடகத்தில் நாம் முதலில் பார்த்துப் பிரமித்த சில காட்சிகள் "பூ! இவ்வளவுதான?" என்று அலுப்புத் தட்டியது அல்லவா?

கிட்டத்தட்ட இதைப் போலத்தான் புருஷர்களைச் சமையல் அறைக்குள் விடுவதும். தாம்பத்ய நாடகத்தில் சமையல் அறைதான் நம்முடைய 'கிரீன் ரூம்'. அந்த கிரீன் ரூம் எத்தனை அலங்கோலமாகவேணும் இருக்கலாம். நாம் அங்கு பதார்த்தங்கள் தயாரிப்பதில் எத்தனையோ தந்திரங்கள் கையாளலாம்.

ஆனல் இந்த அலங்கோலமும், தந்திரமும் வெளியில் உள்ளவர்களுக்குத் தெரிந்ததோ, நம் பதார்த்தங்களுக்கு உள்ள மோகன சக்தி, வசீகரம் குறைந்து விடும்.

உனக்கு இத்தனை உபதேசம் பண்ணுகிறேனே ஒழிய, இது தெரியாமல் நான் அவாளை உள்ளே விட்டதனல் எப்படித் திண்டாடினேன் என்பதைச் சொல்லுகிறேன், கேள்!

அவாளை நான் சமையல் அறையில் விட ஆரம்பித்ததிலிருந்து அவாளுக்கு என் சமையலில் இருந்த ருசி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது.

முன்னெல்லாம் நான் உப்பாகப் போட்டாலும், புளியாகப் போட்டாலும், "பேஷ்! பேஷ்!" என்று தலையை ஆட்டிக் கொண்டும் சப்புக் கொட்டிக் கொண்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்த அவர், இப்பொழுது மெள்ள மெள்ள என் சமையலில் குற்றம் சொல்ல ஆரம்பித்து விட்டார். பாதிச் சமையல் ஆகிக் கொண்டிருக்கும் போதே சமையல் அறைக்கு வந்து, "இன்னுமா சமையல் ஆகவில்லை?" என்று கடிந்து கொள்ள ஆரம்பித்து விட்டார். இது போதாதென்று சமையலுக்குத் திட்டம் வேறு சொல்ல ஆரம்பித்து விட்டார்.

"ஏன் இத்தனை உப்பு போடுகிறாய்! அதனால் தான் நேற்று சமையல் உப்புக்கரித்தது. இந்தா, இத்தனை உப்புப் போட்டால் போதும்" என்று அவராகவே ஒரு நாள் சாம்பாருக்கு உப்புப் போட்டார். இதனால் அன்றைய சமையல் கோளாறானதுடன், அடுத்த வீட்டு ஜன்னலிலிருந்து எங்கள் வீட்டுக் காரியங்களை யெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கும் அம்மாளுக்கும், அவாள் எனக்குச் சமையல் வேலையில் கூடமாட ஒத்தாசை செய்வதாகத் தோன்றத் தொடங்கிவிட்டது!

இன்னொரு நாள் நான் காப்பி போட்டுக் கொண்டிருந்த சமயம் அவாள் உள்ளே வந்தார். அப்பொழுதுதான் நான் பில்டரில் காப்பிப் பொடி போட்டுக் கொண்டிருந்தேன். அதைப் பார்த்ததும், "காப்பிக் கொட்டை விலை தூக்கி விற்கும் இந்தக் காலத்தில் இத்தனை காப்பிப் பொடி போட்டால்

கட்டுமா?" என்று கொஞ்சமாகப் போடச் சொன்னார்.

பொடி கொஞ்சமாகப் போட்டதால் காப்பி நன்ருக இல்லை. உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "காப்பி ஏன் நன்ருயில்லை? நான் சொன்னல் நீ அப்படியே கேட்க வேண்டுமா! நீயாக எனக்குத் தெரியாமல் வழக்கம்போல் போடும் காப்பிப் பொடி போடக்கூடாதா?" என்று புலு'புலு என்று என்னுடன் சண்டைக்கு வந்து விட்டார்.

அவாள் சமையல் அறைக்கு வர ஆரம்பித்ததிலிருந்து அவாளை ஏதாவது சாமான் வாங்கிக் கொண்டுவரச் சொல்வதற்குக்கூடப் பயமாக இருக்கிறது. எது கேட்டாலும், "இப்பத்தானே வாங்கிக் கொடுத்தேன்? அதற்குள் ஆகிவிட்டதா? நேற்றுத்தானே டப்பா நிறைய இருந்தது, பார்த்தேன், அதற்குள் எப்படி ஆகும்! நான் தான் நீ சமையல் அறையில் சாமான்களை வைத்திருக்கும் அழகைப் பார்த்திருக்கிறேனே? இந்த மாதிரி டாம், டூம் என்று குடித்தனம் பண்ணினல் இந்தக் குடித்தனம் எப்படி உருப்படும்?" என்று கேட்க ஆரம்பித்து விடுகிருர்.

வெகு நாளாகச் சமையல் அறைக்குள் விடாத அவாளை ஏண்டா சமையல் அறைக்குள் விட்டோம் என்று இருக்கிறது. இத்தனைக்கும் இந்த அனுதானே காரணம் என்று அவள்மீதுகூடச் சில சமயங்களில் சீறி விழுகிறேன்.

ஆகவே என் பிரியமுள்ள ஹேமா! உன்னை இப்பொழுதே எச்சரித்து விட்டேன். ஜாக்கிரதை

யாக இரு. உன் கணவரை எக்காரணம் பற்றியும் **சமையல் அறையில் விடாதே !**

* * * *

சரசு எழுதியிருக்கும் கடிதத்தைப் பார்த்து ஹேமா முன்னெச்சரிக்கையாக நடந்துகொண்டாளோ, என்னமோ, நான் இனிமேல் சமையல் அறைக்குள் நுழைவதில்லை என்று சபதம் செய்து விட்டேன். நீங்களும் உங்கள் மனைவியிடம் நல்ல பெயர் வாங்க விரும்பினாலும், அல்லது உங்கள் மனைவி உங்களிடம் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்று விரும்பினாலும், சமையல் அறையில் மட்டும் நுழையாதீர்கள் !

# முன்னொரு காலத்தில்

முன்னொருகாலத்தில், அதாவது எத்தனையோ யுகங்களுக்கு முன்னால், மாமியாசுரன், மருமகாசுரன் என்று இரண்டு அசுரர்கள் இருந்தார்கள். இதில் மாமியாசுரன் வயதானவன். மருமகாசுரன் வயதில் இளையவன். இருந்தும் யுத்தத்தில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல.

வானுலக சரித்திரத்தை ஆராய்ச்சி செய்தவர்கள் வானுலகத்தில் முதலில் அசுரர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தார்களென்றும், பிறகு அந்த இடத்தைத் தேவர்கள் படையெடுத்தார்களென்றும் கூறுகிறார்கள். தேவர்கள் வானுலகத்தைப் படையெடுத்த சமயத்தில் அசுரர்கள் தங்களுக்குள் மிகவும் பிளவுபட்டிருந்தார்கள்—பிரிட்டிஷார் இந்தியா புகுந்த சமயத்தில் நமது சுதேச மன்னர்கள் பிளவுபட்டிருந்தது போல. இதைத் தேவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு, அசுரர்களைப் 'பிரித்தாண்டு' தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டத் தொடங்கினார்கள்.

வானுலகத்தில் மெள்ள, மெள்ள ஒவ்வொரு அசுரர்களாக ஒழிந்தார்கள். மெள்ள, மெள்ள ஒவ்வொரு அசுரனுடைய ராஜ்யத்தையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார்கள் தேவர்கள். இப்படியாகச் சில யுகங்களுக்குள் அசுர ராஜ்யமே கிட்டத் தட்ட அழிந்து விட்டது. மாமி

யாசுரன், மருமகாசுரன் என்னும் இந்த இரண்டு அசுரர்கள்தான் மீண்டார்கள்.

இந்த இரண்டு அசுரர்களையும் அழித்து, அவர்கள் ராஜ்யத்தையும் பிடுங்கிக் கொள்வதற்குத் தேவர்கள் எத்தனையோ யுக்திகள் கையாண்டு பார்த்தார்கள். இரண்டு பேருக்கும் இந்திரப் பதவி கொடுப்பதாகச் சொன்னார்கள். கந்தர்வ லோகத்து இளம் பெண்களைக் கல்யாணம் செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள்.

ஆனால் இந்த ஆசைக்கெல்லாம் இணங்கவில்லை இந்த இரண்டு அசுரர்களும். ஏனெனில் பட்டம், பதவி, முதலிய எல்லாவற்றையும் விட இவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது சண்டைதான்; ஒருவரோடு ஒருவர் சண்டை பிடிப்பதுதான்.

இந்த இரண்டு அசுரர்களுக்கும் ஒருவரைக் கண்டால் ஒருவருக்கு ஆகாது. மருமகாசுரனைக் கண்டால் வெட்டிக் கொன்றுவிட வேண்டும் போலிருக்கும் மாமியாசுரனுக்கு. மாமியாசுரனைக் கண்டால் கொன்று புதைத்துவிட வேண்டும் போலிருக்கும் மருமகாசுரனுக்கு. இருந்தும் ஒருவருக்கொருவர் பலத்தில் சளைத்தவர்களல்ல வாதலால் இரண்டு பேருக்கு மிடையில் எப்பொழுது பார்த்தாலும் யுத்தம் நடந்து கொண்டு இருக்கும். ஒருவரும் யுத்தத்தில் ஜயிக்கமாட்டார்கள். ஒருவரும் யுத்தத்தில் தோற்கமாட்டார்கள்.

இப்படியாகத்தானே எத்தனையோ யுகாந்திரமாக இந்த இரண்டு அசுரர்களுக்கு மிடையில், யுத்தம் நடந்து கொண்டே இருந்தது.

இதைக் கண்டு தேவர்களுக்குப் பயமாகப் போய் விட்டது. ஏனெனில் ஒருவருக்கொருவர் சமமாக உள்ள இரண்டு எதிரிகள், எதிரிகளாக உள்ள வரையில்தான் எதிரிகளாக இருப்பார்கள். திடீரென்று மூன்றாவது எதிரியைப் பார்த்து விட்டால் முதல் இரண்டு எதிரிகளும் ஒன்று சேர்ந்து விட்டாலும் சேர்ந்து விடுவார்கள்— இங்கிலாந்தும், ரஷ்யாவும் ஜெர்மனிக்கு எதிராகச் சேர்ந்தனவே, அதைப்போல.

ஆகவே இந்த இரண்டு அசுரர்களையும் ஒழிப்பதற்கு என்ன வழி என்று கண்டு பிடிப்பதற்காகத் தேவர்கள் எல்லோரும் சேர்ந்து மகாநாடு கூட்டினார்கள். தமிழ் எழுத்தாளர்கள் தங்கள் மகாநாட்டை ஒத்தி வைத்துக் கொண்டே போவது போல் போகாமல், குறிப்பிட்ட தேதியிலேயே, சண்டை சச்சரவின்றி மகாநாட்டைக் கூட்டினார்கள். கூடி, ஒரு யுக்தியும் கண்டு பிடித்தார்கள்.

தேவர்கள் இரண்டு கட்சியாகப் பிரிந்தார்கள். ஒரு கட்சி மாமியாசுரனைச் சேர்ந்து கொண்டது. இன்னொரு கட்சி மருமகாசுரனைச் சேர்ந்து கொண்டது. இரண்டு கட்சித் தேவர்களும் தங்கள் தங்கள் கட்சி அசுரனை எதிரி அசுரனுக்கு விரோதமாகத் தூண்டிக் கொண்டே வந்தார்கள்.

"எத்தனை நாளைக்குத்தான் மருமகாசுரனை இப்படியே விட்டு வைப்பாய்? உனக்கு வெட்கமில்லையா? மானமில்லையா? அவனை ஒழித்து விட்டு மறு காரியம் பார்க்க வேண்டாமா?" என்று

மாமியாசுரனைப் பார்த்து அவன் பக்கத்துத் தேவர்கள் சொன்னார்கள்.

"எத்தனை நாளைக்குத்தான் மாமியாசுரனை இப்படியே விட்டு வைப்பாய்? உனக்கு ரோஷம் இல்லையா? ஆணவம் இல்லையா? அவனை ஒழித்து விட்டு மறு காரியம் பார்க்க வேண்டாமா?" என்று மருமகாசுரனைப் பார்த்து அவன் பக்கத்துத் தேவர்கள் சொன்னார்கள்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் அல்லவா? ஆகவே அடுத்த சமயம் யுத்தம் நேர்ந்தால் மாமியாசுரனை ஒழித்து விட்டுத்தான் மறு காரியம் என்று மருமகாசுரன் சபதம் பூண்டான். அதே மாதிரி மருமகாசுரனை ஒழித்து விட்டுத்தான் மறு காரியம் என்று மாமியாசுரனும் சபதம் பூண்டான்.

கடைசியில் ஏதோ ஒரு சின்னக் காரணத்துக்காக இரண்டு பேருக்கு மிடையில் ஒரு பெருத்த போர் மூண்டது. இரண்டு அசுரர்களும் கைகலந்தார்கள். "இந்தப் போரில் எனக்காச்சு, உனக்காச்சு, பார்த்து விடுவது" என்று இரண்டு பேரும் சபதம் பூண்டு வெகு கடுமையாகப் போர் புரிந்தார்கள்.

இரண்டு பேரும் ஒரே பலம் பூண்டவர்களாதலால் யுத்தம் யுகக் கணக்காக நடந்தது. நாம் பந்து விளையாட்டு, கிரிக்கட்டு விளையாட்டு, குஸ்தி பந்தயம் முதலியவற்றை வேடிக்கை பார்ப்பதுபோல் தேவர்கள் இந்தச் சண்டையை வேடிக்கை பார்த்தார்கள்.

காலம் யாருக்காவது காத்திருக்கிறதா? ஆகவே யுகம், யுகமாகச் சென்று கொண்டிருந்தது. யுகம் செல்லச் செல்ல, இரண்டு அசுரர்களும் மெள்ள மெள்ள பலஹீன மாகிக்கொண்டே வந்தார்கள். இரண்டு பேர் பலமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது. இரண்டு பேர் பலமும் ஒரே அளவில் குறைந்து கொண்டே வந்ததால், வெற்றி தோல்வி யாருக்கு என்ற நிச்சயம் ஏற்படாமல் போர் தொடர்ந்து நடந்து கொண்டே வந்தது.

கடைசியில் தற்போதைய கலியுகம் ஆரம்பித்த சமயத்தில் இரண்டு அசுரர்களும் குத்துயிராய்க் கீழே விழுந்து விட்டார்கள். இன்னும் ஒரு கணமோ, இரண்டு கணமோ, இரண்டு பேரும் ஒரே சமயத்தில் உயிர் துறந்து விடுவார்கள் என்று பட்டது.

இந்தப் பரிதாபகரமான காட்சியைப் பார்த்ததும் தேவர்களுக்குக் கண்ணில் ஜலம் வந்து விட்டது. "இவர்களுக்கு இந்தக் கதி நேர்ந்ததற்கு நாம்தானே காரணம்?" என்று தேவர் தலைவன் தம்மைத் தாமே நொந்து கொண்டார். இதற்கு ஏதாவது பரிகாரம் பண்ண வேண்டும் என்று தீர் மானித்து குற்றுயிராய்க் கிடந்த அசுரர்களை அணுகி, "உங்களுக்கு ஏதாவது வரம் வேண்டு மானால் கேளுங்கள், கொடுக்கிறேன்" என்றார்.

இதற்கு அந்த இரண்டு அசுரர்களும் சேர்ந் தாற்போல் பதில் அளித்தார்கள்.

"தேவர் தலைவ! நாங்கள் இருவரும் எங்கள் வாழ்நாள் முழுவதும் ஒருவரோ டொருவர் யுத்தம் புரிவதைத் தவிர வேறு ஒரு விஷயத்தையும் அறிந்த தில்லை. ஆகவே நாங்கள் எத்தனை ஜன்மங் கள் எடுத்தாலும் சரி, இதே சம பலத்துடன் வெற்றி தோல்வி யின்றி யுத்தம் புரிய அருள் புரிய வேண்டும்" என்று வரம் கேட்டார்கள்.

இதைக் கேட்டுத் தேவர் தலைவன் புன்னகை பூத்தார். தலையைக் கொஞ்சம் சொறிந்தார். பிறகு பின்வருமாறு பதில் அளித்தார்.

"நீங்கள் வேண்டிய வரத்தை இதோ அளித் தேன். நீங்கள் இருவரும் இனிமேல் பூலோகத்தில் ஜன்மம் எடுப்பீர்கள். மாமியாசுரன் மாமியாராக வும், மருமகாசுரன் மருமகளாகவும் பிறப்பீர்கள். உங்கள் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண் டிருப்பீர்கள்."

இந்த வரத்தைத் தேவர் தலைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட அந்த அசுரர்கள் பூலோகத்தில் இப்பொழுது மாமியார், மருமகளாகப் பிறந்து தங்கள் யுத்தத்தை விடாது நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

○ ☆ ○

# பின்னொரு காலத்தில்!

[உலகத்தில் ஒவ்வொரு நாளும் புதுப் புது உத்தாரணர்கள் தோன்றி வருகிறார்கள். கிராமத்தைப் புனருத்தாரணம் செய்ய முயலுகிறார்கள் சிலர். நகரத்தைப் புனருத்தாரணம் செய்யப் பார்க்கிறார்கள் பலர். இந்த ரீதியில் உலகம் உத்தாரணம் ஆகிக் கொண்டு வந்தால், பின்னொரு காலத்தில் உத்தாரணர்களுக்கே அவசியம் இன்றி உலகம் உத்தாரணம் ஆகிவிடும். அந்த சத்ய யுகத்தில் உயர்வு தாழ்வே இருக்காது. எல்லாரும் இந் நாட்டு மன்னர்களாய் விளங்குவார்கள். புலியும், பசுவும் ஒரே துறையில் தண்ணீர் குடித்துக்கொண்டிருக்கும். பாம்பும் கீரியும் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கும். அந்தப் பின்னொரு காலத்தில் ஒரு புருஷனும், மனைவியும் பேசிக்கொள்ளப் போவதைத் தான் நாம் இங்கே குறிப்பிடுகிறோம்.]

**மனைவி:**—நாதா! ஏன் இப்படி வாட்ட முற்று விளங்குகிறீர்கள்?

**புருஷன்:**—கலி யுகத்தில் பிறக்காமல் இந்தப் பாழும் சத்ய யுகத்தில் வந்து பிறந்தேனே என்று தான் மனம் கலங்கி வாடி நிற்கிறேன்.

**மனைவி:**—இது என்ன, தாங்கள் கூறுவது ஆச்சரியமாக இருக்கிறதே! இந்த சத்ய யுகத்தில் பிறந்ததற்காகச் சந்தோஷப் படாமல் அந்தச் சனியன் பிடித்த கலியுகத்தில் பிறக்கவில்லையே என்று யாராவது கவலைப் படுவார்களா?

**புருஷன்:**—இந்தா! கலியுகத்தைப் பற்றித் தூஷணமாக இன்னொரு வார்த்தை சொன்னையோ—

**மனைவி:**—இந்தாருங்கள், எப்பொழுது பார்த்தாலும் காகிதத்தையும், பேனாவையும் கையில்

வைத்துக்கொண்டு தலையைச் சொறிந்து கொண் டிருப்பதால் தங்கள் புத்தி சற்று பேதலித் திருப்ப தாகத் தெரிகிறது. சற்று வேடிக்கையாக நந்த வனத்துக்குப் போய் விட்டு வரலாம், வாருங்க ளேன்! அதோ அந்த மரத்தடியில் எலியும் பூனை யும் கொஞ்சி விளையாடிக் கொண் டிருப்பதைப் பாருங்கள். அதோ, அந்த ஆட்டுக்குட்டி அந்தச் சிங்கக் குட்டியின் மீது சவாரி செய்து கொண்டிருப் பதைப் பாருங்கள்!

**புருஷன்** :—ஐயோ! உலகம் இப்படியா கெட்டுப் போகவேண்டும்? இந்தப் பாழும் உத்தாரணர்கள் உத்தாரணம் பண்ணுகிறேன், உத்தாரணம் பண் ணுகிறேன் என்று உலகத்தை இப்படியாக குட் டிச்சுவராக அடித்து விட்டுச் செல்ல வேண்டும்! பழைய கலியுகமாய் இருந்தால் அந்த ஆட்டுக்குட்டி இத்தனை நேரம் சிங்கக்குட்டி முதுகின்மேலா இருக்கும்!

**மனைவி** :—ஐயோ, எதற்காக இப்படி இந்த சத்ய யுகத்தை நொந்து கொண்டிருக்கிறீர்கள்? அப்படி இந்த சத்ய யுகத்தில் இல்லாத சுகங்கள் கலியுகத் தில் என்ன இருந்தன?

**புருஷன்** :—என்னவா! வேறு ஒன்றும் இல்லா விட்டாலும் கலியுகத்தில் ஹாஸ்ய ரஸம் நிறைய இருந்தது. ஹாஸ்ய எழுத்தாளர்களுக்கு எழுதுவ தற்கு நிறைய விஷயங்கள் கிடைத்துக் கொண் டிருந்தன. நானும் ஹாஸ்யமாக ஏதாவது எழுத வேண்டும் என்று பத்து வருஷங்களாக மண்டை யை உடைத்துக் கொண்டிருக்கிறேன், ஒரு விஷ

யம் கிடைக்க வேண்டுமே! ஆ! இருபதாம் நூற்ருண்டே! இருபதாம் நூற்ருண்டு எழுத்தாளர்களே! உங்கள் பாக்கியமே பாக்கியம்!

**மனைவி:**—எப்பொழுது பார்த்தாலும் இருபதாம் நூற்ருண்டைப் பற்றியே புலம்பிக் கொண்டிருக்கிறீர்களே, அப்படி அந்தக் காலத்தில் நடந்த ஹாஸ்ய விஷயங்கள்தான் என்ன?

**புருஷன்:**—ஒன்ரு, இரண்டா! லட்சோப லட்சம்! கோடியே கோடி!

**மனைவி:**—உதாரணத்துக்கு ஒன்று இரண்டு தான் சொல்லுங்களேன்!

**புருஷன்:**—சொன்னால் உனக்கு எங்கே புரியப் போகிறது? யுத்தம்னு கேள்விப் பட்டிருக்கிருயா?

**மனைவி:**—யுத்தமா! அப்படி யென்ருல்?

**புருஷன்:**—அதுதான் நான் முன்பே சந்தேகப் பட்டேனே! யுத்தம் என்ருல் என்ன என்று கேட்கும் நிலைமைக்கு இப்பொழும் உலகம் வந்து விட்டது. பள்ளிக்கூடத்தில் பழைய உலக சரித்திரம் சொல்லிக் கொடுத்தால்தானே உனக்கு இதெல்லாம் தெரியப் போகிறது? அதுதான் பழைய உலகம் எப்படி இருந்தது என்று யாருக்கும் தெரியாதபடி பழைய சரித்திரப் புஸ்தகங்களை யெல்லாம் கொளுத்தி விட்டார்களே! என்னிடம்தான் பழங்கால உலகத்தைப் பற்றிய ஒரு புஸ்தகம் மிஞ்சிற்று. அதைப் படி படி என்று உன்னிடம் எவ்வளவோ படித்துப் படித்துச் சொன்னேன், நீ எங்கே கேட்டாய்?

மனைவி :—சரி, அது இருக்கட்டும். என்னமோ யுத்தம்னு சொன்னேளே, அது என்ன வென்று சொல்லவில்லையே?

புருஷன் :—இரண்டு தேசத்து ஜனங்கள் ஒருவரை ஒருவர் கொன்று மடிப்பதற்குத்தான் யுத்தம் என்று பெயர்.

மனைவி :—ஐயோ! கொலையா? எதற்காக?

புருஷன் :—எல்லாம் ஒருவர் நாட்டை இன்னொருவர் கைப்பற்றத்தான்.

மனைவி :—ஆமாம், இதில் என்ன ஹாஸ்யம் இருக்கிறது. எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

புஷருன் :—என்ன ஹாஸ்யமா? ஒரு பக்கத்தில் யுத்தம் என்ற பெயரால் லட்சோப லட்சம் ஜனங்கள் மடிந்து கொண்டிருப்பார்கள். அதைப் பற்றிக் கேள்வியா, முறையா ஒன்றும் இருக்காது. ஆனால் அதே சமயத்தில் இன்னொரு பக்கத்தில் யாரோ ஒரு ஆளைக் கொன்று விட்டதாக ஒரு நூறு பேரைச் சிறையில் பிடித்து அடைத்து விசாரணை நடத்திக் கொண்டிருப்பார்கள்.

மனைவி :—(சிரிக்கிறாள்.)

புருஷன் :—ஆ! சிரிக்கிறாயா! அதுதான் அந்த இருபதாம் நூற்றாண்டில் இருந்த ஹாஸ்யம். யுத்தம் என்ற பெயரால் லட்சம் பேரைக் கொன்றவனை வணங்குவார்கள். ஆனால் அதே ஆள் ஏதாவது கோபத்தில் பக்கத்து வீட்டுக் காரனைக் கொன்று விட்டால் சரி, உடனே அவனைப் பிடித்து விசாரணை நடத்தி, அவனைத் தூக்கிலிட்டு விடுவார்கள்.

**மனைவி** :—(சிரித்துக் கொண்டே) இது என்ன வேடிக்கையாக அல்லவா இருக்கிறது!

**புருஷன்** :—இதைவிட அந்தக் காலத்தில் இன்னும் எத்தனையோ வேடிக்கைகள் இருந்தன. படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில் என்று கேள்விப் பட்டிருக்கிருயா?

**மனைவி** :—கேள்விப் பட்டிருக்கிறேன்.

**புருஷன்** :—அந்தக் காலத்தில் ஆங்கிலேயர் என்று ஒரு ஜாதியினர் இருந்தனர். அவர்கள் அந்தக் காலத்தில் அப்படித்தான் செய்து கொண்டிருந்தனர். ஜனநாயகத்துக்காக யுத்தம் பண்ணுகிறோம் என்று தினம் பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிடுவார்கள். ஆனல் அதே சமயம் ஜனநாயகத்துக்கு விரோதமாக என்னென்ன உண்டோ, அத்தனையும் செய்து கொண்டிருப்பார்கள்.

**மனைவி** :—(சிரிக்கிருள்.)

**புருஷன்** :—இன்னும் கேள். லட்சோப லட்சம் செலவு செய்து எத்தனையோ தர்ம சத்திரங்கள், சாவடிகள் கட்டுவார்கள் சிலர். ஆனல் இதே ஆசாமிகளிடம் எவனவது பிச்சைக்காரன்-

**மனைவி** :—என்ன பிச்சைக்காரன! அப்படி என்ருல்?

**புருஷன்** :—ஓ ஹோ! பிச்சைக்காரன் என்ருல் யார் என்று உனக்குத் தெரியாதா! எங்கே தெரியப் போகிறது? பழங்கால உலக சரித்திரத்தைப் படித்தால்தானே தெரியும்? பிச்சைக்காரன் என்ருல் சாப்பாட்டுக்கு இல்லாமல் பிறரிடம் போய்

காலணு, அரையணு கொடு என்று கெஞ்சிக் கேட்பவன்.

மனைவி :—ஐயோ ! மனிதனு அப்படிப் பிச்சை கேட்பான் ?

புருஷன் :—மனிதனேதான் ! ஒரு பக்கம் லட்சம் ரூபாய் செலவு செய்து பிச்சைக்கார விடுதிகள் கட்டுகிறவர்கள் இன்னொரு பக்கம் பிச்சைக்காரன் காலணு கேட்டால் கொடுக்கமாட்டார்கள். இன்னொரு வேடிக்கையைக் கேட்டாயா ! காலணு இல்லாத பிச்சைக்காரனைப் பற்றிக் கதைகள் எழுதி, கால்கோடி ரூபாய் சம்பாதித்தவர்கள் எத்தனையோ பேர் ! இப்பொழுது நான் எந்தப் பிச்சைக்காரனைப்பற்றிக் கதை எழுதுவது ? பழய காலம் போல் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்களா, அல்லது பணக்காரர்கள் தான் இருக்கிறார்களா ? இல்லை, வரதக்ஷிணைக் கொடுமைதான் இருக்கிறதா ?

மனைவி :—வரதக்ஷிணையா ? அப்படி என்றால் ?

புருஷன் —இந்தா ! இப்படி நீ ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் கேட்டுக் கொண்டிருந்தால் என்னால் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. இந்தா, இந்தப் பழங்கால சரித்திரப் புஸ்தகத்தைப் படித்துவிட்டு என்னோடு பேச வா !

மனைவி :—என்ன இப்படிக் கோபித்துக் கொள்கிறீர்களே ! இந்த ஒரு வார்த்தைக்கு மட்டும் அர்த்தம் சொல்லுங்கள், போதும்.

புருஷன் :—வரதக்ஷிணை என்றால் பழங்காலத்தில் ஸ்திரீகளைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்காகப் புருஷர்களுக்குக் கொடுக்கப்படும் லஞ்சம்.

**மனைவி** :—புருஷன் ஸ்திரீயைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு லஞ்சமா? ஆச்சரியமாய் இருக்கிறதே! ஆமாம் இதில் என்ன ஹாஸ்யம் இருக்கிறது?

**புருஷன்** :—என்ன ஹாஸ்யமா? சொல்லுகிறேன் கேள். பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கும்போது வரதக்ஷிணைக் கொடுமையை எதிர்த்துக் காரசாரமாய்ப் பேசும் தகப்பனார், தம் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணுகையில் தாம் முன்பு பேசியதையெல்லாம் மறந்து பிள்ளைக்கு வரதக்ஷிணை கேட்க ஆரம்பித்து விடுவார்.

**மனைவி**:—(சிரிக்கிறாள்.)

**புருஷன்** —பார், நீயே சிரிக்கிறாயே! இத்தனை ஹாஸ்ய ரஸங்கள் நிறைந்த அந்தக் கலியுகத்தில் பிறந்திருந்தால் நான் எத்தனை பெரிய ஹாஸ்ய எழுத்தாளனாக மாறியிருப்பேன்!

**மனைவி** :—அப்பொழுது என்னைக் கலியாணம் பண்ணிக் கொள்வதற்கு லஞ்சம் வேண்டுமென்று கேட்டிருப்பீர்கள் அல்லவா?

**புருஷன்**:—ஆம், கட்டாயம் கேட்டிருப்பேன். ஆனால் அதே சமயம் வரதக்ஷிணை வாங்கக்கூடாது என்று வரிந்து வரிந்து எழுதிப் பணம்சம்பாதித்துக் குவித்திருப்பேன்.

[இரண்டு பேரும் கொல்லென்று விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். பக்கத்து வாய்க்காலில் ஒரே துறையில் தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும் புலியும், பசுவும் இவர்களைப் பார்த்து ஆச்சரியத்தால் கண்களை அகல விரிக்கின்றன.]

# சமுத்திர லோகத்தில்

[சமுத்திர லோகத்தில் சமுத்திர ராஜன் தர்பார். சமுத்திர ராஜன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார். எதிரே சபையில் மந்திரிகள், பிரதானிகள் முதலியோர் வீற்றிருக்கின்றனர். சபையோர் முகங்களில் காணப்படும் ஆவலையும், துடி துடிப்பையும் காணும்போது அன்று ஏதோ ஒரு பெரிய விஷயத்தை விவாதிப்பதற்காகக் கூடியவர்கள் போல் தோன்றுகிறது.]

**ராஜன் :** அப்பா! என்ன வெய்யில் கொளுத்துகிறது? யார் அங்கே! நம் தாதியை விசிறியை எடுத்துக் கொண்டு வரச் சொல்.

[ஒரு தாதி விசிறி கொண்டு வந்து அரசனுக்கு விசிறுகிருள்.]

எங்கே நம் பிரதம மந்திரியைச் சபையிலே காணோம்?

**பொக்கிஷ மந்திரி :** அவர் ஜல தோஷத்தால் அவஸ்தைப் படுவதால் இன்று சபைக்கு வரவில்லை.

**ராஜன் :** அடிக்கடி ஜலத்தில் நனையாதேயும் என்று நாம் எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. மிகவும் முக்கியமான ஒரு விஷயத்தை விவாதிப்பதற்காகக் கூடியிருக்கும் இன்றைய தினம் அவர் ஆஜராகாதது எனக்கு மிகவும் வருத்தமாய் இருக்கிறது.

**மற்ற மந்திரிகள் :** பரவாயில்லை, அரசே! நாங்கள் இருக்கிறோம். தாங்கள் தர்பாரை ஆரம்பித்து வைக்கலாம்.

[சமுத்திர ராஜன் தமது மச்சாஸனத்தை விட்டு எழுந்து நிற்கிறார்.]

**ராஜன் :** என் மதியூக மந்திரிகளே! சபையோர்களே! நான் இன்று தர்பார் கூட்டியதன் காரணத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இப்பவும் பூலோகத்தில் யுத்தம் ஆரம்பித்தாலும் ஆரம்பித்தது, இப்பூலோக வாசிகள் தினம் நமக்குக் கப்பல் கப்பலாக உணவுப் பொருள்கள், இயந்திர சாமான்கள், காகிதம், கச்சா பிலிம் ஆக இப்படி எத்தனையோ சாமான்கள் அனுப்பி வருகிறார்கள். ஏதோ நாம் செய்த புண்ணியந்தான், இருபத்தைந்து வருஷ காலத்துக்குப் பிறகு இப்பூலோக வாசிகள் திரும்பவும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்; நமக்கும் கப்பல் கப்பலாகப் பொருள்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இப்பூலோக வாசிகள் இப்படியே இருப்பார்கள் என்று நாம் நம்பக் கூடாது. இருந்தாற் போலிருந்து அவர்களுக்குப் பைத்தியம் தெளிந்து விடலாம். அவர்கள் யுத்தத்தை நிறுத்திவிடலாம். அப்பொழுது கப்பல்கள் நம் உலகத்தைத் தேடி வந்து கொண்டிருப்பது நின்றுவிடக் கூடும். ஆகவே நம்மைத் தேடி வந்துள்ள சரக்குகளை யெல்லாம் நாம் சரிவர உபயோகிப்பதற்கு ஏதாவது முன் கூட்டியே திட்டம் வகுக்க வேண்டியது அவசியம். இது விஷயமாக

உங்கள் எல்லாரையும் கலந்து பேசுவதற்காகத் தான் சபை கூட்டி யிருக்கிறேன்.

**இரண்டாவது மந்திரி :** அரசே! தங்கள் கூற்றை நாங்கள் எல்லாரும் ஆமோதிக்கிறோம். ஏதாவது ஒழுங்கான ஏற்பாடு பண்ண வேண்டியது மிகவும் அவசியமே. ஏனெனில்—

[ஒரு சேவகன் வந்து தண்டனிட்டு நிற்கிறான்.]

என்ன?

**சேவகன் :** மகாப் பிரபு! ஒரு கப்பல் நிறைய உணவுப் பதார்த்தங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. அது விஷயமாகத் தங்கள் ஆக்ஞை!

[இன்னொரு சேவகன் வருகிறான்.]

**மந்திரி :** என்ன?

**இரண்டாவது சேவகன் :** மகாப் பிரபு! இரண்டு கப்பல்கள் நிறைய கச்சா பிலிம் வந்து சேர்ந்திருக்கிறது. அது விஷயமாகத் தங்கள் ஆக்ஞை!

[மூன்றாவது சேவகன் வருகிறான்.]

**மந்திரி :** என்ன?

**மூன்றாவது சேவகன் :** மகாப் பிரபு! மூன்று கப்பல்கள் நிறைய மோட்டார் வாகனங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. அது விஷயமாகத் தங்கள் ஆக்ஞை!

[நான்காவது சேவகன் வருகிறான்.]

**மந்திரி :** என்ன?

**நான்காவது சேவகன் :** மகாப் பிரபு! நான்கு கப்பல்கள் நிறையக் காகிதம் வந்து குவிந்திருக்கிறது. அது விஷயமாகத் தங்கள் ஆக்ஞை!

அரசன் : என்ன மந்திரியாரே! இப்படிச் சாமான்கள் வந்து குவிந்து கொண்டிருந்தால் அவற்றை யெல்லாம் எங்கே வைப்பது, என்ன பண்ணுவது? உணவு வகைகளை வேண்டுமானால் ஜனங்கள் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுக்கலாம். ஆனால் இந்தக் காகிதம், கச்சா பிலிம், மோட்டார் வாகனங்கள் இவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

[சேவகன் ஒருவன் வருகிறான்]

அரசன் : என்ன சமாசாரம்?

சேவகன் : அரசே! பூலோகவாசி யொருவர் தங்களைக் காண்பதற்காக வந்திருக்கிறார்.

அரசன் : பூலோக வாசியா? பூலோகவாசிக்கு இங்கு என்னவேலை? வரச் சொல், பார்க்கலாம்.

[சேவகன் பூலோகவாசி யொருவரை அழைத்து வருகிறான்]

பூ. வாசி : அரசே! நமஸ்காரம்.

அரசன் : தாங்கள் யார்? என்னை நாடி வந்த காரணம் என்ன?

பூ. வாசி : அரசே! பூலோகத்தில் தற்சமயம் கிடைப்பதற்கு அரிதா யிருக்கும் அநேக பொருள் கள் தங்களிடம் இருப்பதாகக் கேள்வியுற்று அவற்றை யாசித்துப் பெறலாம் என்று வந்தேன்.

அரசன் : என்ன பொருள்?

பூ. வாசி : அரசே! தானிய வகைகள் நிறையக் குவித்து வைத்திருக்கிறீர்களே, அதில் கொஞ்சம் கொடுத்தால்....

மந்திரி : அரசே! இவருக்கு ஒரு மணி தானியம் கூடக் கொடுக்கக்கூடாது. உணவுப் பொருள்களை இவரிடம் கொடுத்தால், அவற்றை ஒளித்து வைத்து, உயர்ந்த விலைக்கு விற்று ஊரைக் கொள்ளையடிக்கப் பார்ப்பார்.

பூ. வாசி : சரி, நிறைய மோட்டார் வாகனங்கள் சேமித்து வைத்திருக்கிறீர்களே, அவற்றிலாவது நாலைந்து கொடுங்கள்.

மந்திரி : அரசே! இதுவும் தர முடியாதென்றே நினைக்கிறேன். இந்த மோட்டார் வாகனங்கள் சில நம்மிடம் சிக்கிக் கொண்ட படியால்தான், பூலோகத்துப் பாதசாரிகளில் சிலர் இன்னும் உயிர் பிழைத்திருக்கின்றனர்!

பூ. வாசி : சரி, கச்சா பிலிம் கத்தை கத்தையாக வைத்திருக்கிறீர்களே, அதாவது ஒரு பத்து லட்சம் அடி கொடுக்கக் கூடாதா?

மந்திரி : அரசே! அதுவும் நம்மால் கொடுக்க முடியாது. இந்த கச்சா பிலிம்மை வைத்துக்கொண்டு நாம் நம் ஜனங்களின் அறிவை விருத்தி செய்யும் சினிமாப் படங்கள் பிடிக்கலாம். இவரிடம் கொடுத்தால் 11 ஆயிரம் அடி படம் பிடிப்பதற்கு 11 லட்சம் அடி பிலிம்மை வீணாக்கி விடுவார். அப்படித்தான் நல்ல படம் ஏதாவது பிடிப்பார் என்று நினைக்கிறீர்களா? மாட்டார். இப்பூலோக வாசிகள், அதிலும் சில சினிமாப் பட முதலாளிகள் கீழான ஜனங்களின் மிருக இச்சைகளைத் தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்வதில் பலே கெட்டிக்காரர்கள். இவர்கள்

பிடிக்கும் படங்களில் ஸ்திரீ நடிகர்களுக்கு ஆடைச் செலவே இருக்காதென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

**பூ. வாசி:** போகட்டும். இங்கே நிறையக் காகிதம் குவிந்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு ஐம்பதுடன் காகிதமாவது கொடுக்கலாமா?

**அரசன்:** காகிதத்தைக் கொண்டு என்ன செய்வீர்?

**பூ. வாசி:** பத்திரிகை போடலாமென்று உத்தேசம்.

**மந்திரி:** அரசே! கூடவே கூடாது. பூலோகத்திலே பத்திரிகை போடுகிற இலட்சணம் எனக்குத் தெரியும். யுத்தம் செய்வது போதாதென்று, பத்திரிகைகளை யுத்தச் செய்திகளைக் கொண்டே நிரப்பி விடுவார்கள். போதாததற்கு கொலை, களவு, விபசாரம், கோர்ட் வழக்கு முதலிய செய்திகள்! யுத்த விமரிசனங்கள் வேறே. அப்புறம் பொய் புனை சுருட்டு விளம்பரங்கள். இங்கேயே நாம் நல்ல இலக்கிய விஷயங்கள் கொண்ட பத்திரிகை நடத்தலாம். இவரிடம் காகிதத்தைக் கொடுத்தால் துர் விநியோகந்தான்.

**பூ. வாசி:** அரசே இப்படி நான் கேட்கும் ஒவ்வொரு பொருளையும் மறுத்தால் நான் என்ன செய்வது? கடைசியாக ஒரு பொருள் கேட்பேன். அதுவாவது கொடுப்பீர்களா?

**அரசன்:** என்ன அது?

**பூ. வாசி :** தங்களுடைய லோகத்தில் திமிங்கிலம் இருக்கிறதல்லவா ? அதன் வயிற்றுக்குள் ஸீல் போட்ட கவர் ஒன்று வைத்திருக்கிறது....

**அரசன் :** திமிங்கிலத்தின் வயிற்றில் ஸீலாவது, கவராவது! எனக்கு ஒன்றும் புரியவில்லையே, விவரமாகச் சொல்லும்.

**பூ. வாசி :** எங்கள் லோகத்தில் எவ்வளவோ பள்ளிக்கூடங்கள், காலேஜுகள் எல்லாம் இருந்த போதிலும், எங்களுக்குப் பகுத்தறிவு விருத்தி யாக வில்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் சிலர் தங்கள் சிரமத்தையும் பாராட்டாது பகுத்தறிவுப் போட்டிப் பந்தயங்கள் நடத்தி வருகிறார்கள். நாங்களும் அறிவை விருத்தி செய்து கொள்வதற்காக இன்ஸால்வெண்ட் ஆவதைக்கூட லட்சியஞ் செய்யாமல் அவற்றில் கலந்து கொள்கிறோம். அந்தப் போட்டிப் பந்த யத்தின் சரியான விடையைப் பத்திரமாக ஒரு ஸீல் போட்ட கவரில் வைத்து திமிங்கிலத்தின் வயிற்றில் வைத்து விடுகிறார்களாம். அந்த விடை தெரிந்தால் முதல் பரிசைத் தட்டிக் கொண்டு போய் விடலாமென்று பார்க்கிறேன். ஒரு தடவையாவது முதல் பரிசு பெற்றால்தான் நான் நிம்மதியாகச் சாகமுடியும்.

**அரசன் :** சரி, ஆனால் முதல் பரிசு உமக்குத் தான் கிடைக்கும் என்பது என்ன நிச்சயம் ?

**பூ. வாசி :** என்ன அப்படிக் கேட்கிறீர்கள் ? திமிங்கிலத்தின் வயிற்றில் வைக்கப்பட்டிருக்கும் அந்த விடை வேறு ஒரு பிராணிக்கும் தெரியாது....

**அரசன் :** அந்த விடையை வைத்தவருக்குக் கூடத் தெரியாதோ ?

**பூ. வாசி :** அட ஈஸ்வரா ! இத்தனை நாளாக இது விஷயம் என் மூளையில் படவில்லையே ! சரி, சரி. நான் சென்று வருகிறேன். அதற்கு முன்னர் ஒரு டம்ளர் தீர்த்தமாவது கொடுப்பீர்களா ? மிகவும் தாகமாய் இருக்கிறது.

**அரசன் :** யார் அங்கே ? இவருக்கு ஒரு டம்ளர் உப்பில்லாத சுத்த ஜலம் கொடுத்து அனுப்பு.

# யமலோகத்தில்

[யம லோகத்தில் ஒரு யம கிங்கரனின் வீடு. அவன் மனைவி—பெயர் என்ன வென்று தெரியவில்லை, யமகிங்கரி என்றுதான் வைத்துக் கொள்வோமே—வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறாள். யமகிங்கரன் மிக்க வருத்தத்துடன் உள்ளே நுழைகிறான்.]

**கிங்கரி:** என்னா! ஏன் இப்படி முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக் கிறீர்கள்! என்னமோ யமலோகமே அஸ்தமித்து விட்டது போலல்லவா முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

**கிங்கரன்:** பின் என்ன பண்ணச் சொல்லுகிறாய்? பல்லைக் காட்டிக் கொண்டு இளித்துக் கொண்டிருக்கச் சொல்லுகிறாயா?

**கிங்கரி:** ஏன் வழக்கம்போல் கல கல என்று சிரித்த முகத்துடன் சந்தோஷமாக இருந்தால் என்ன?

**கிங்கரன்:** என் காரியங்களும் வழக்கம்போல் நடந்தால், நானும் வழக்கம் போல்தான் இருப்பேன்.

**கிங்கரி:** ஏன், வழக்கத்துக்கு விரோதமாக என்ன நடந்து விட்டது!

**கிங்கரன்:** நாளைக் காலையிலிருந்து உத்தியோகத்துக்கு வர வேண்டாம் என்று யமதர்மராஜன் சொல்லி விட்டார்.

**கிங்கரி:** ஐயையோ! உத்தியோகம் போய்விட்டதா? எனக்கு அப்பவே தெரியும். இந்தப் பக்

கத்து வீட்டுக்காரனேடு விரோதம் பண்ணிக் கொள்ளாதேங்கோ என்று படித்துப் படித்துச் சொன்னேன். நீங்கள் கேட்க வில்லை. அவன் என்ன இல்லாததையும், பொல்லாததையும் யமதர்ம ராஜனிடம் சொல்லிக் கொடுத்தானே?

**கிங்கரன்:** *ஏதாவது பயித்தியம் மாதிரி உளருதே. பக்கத்து வீட்டுக்காரன் ஒன்றும் சொல்லிக் கொடுக்க வில்லை. அவனுக்கும் தான் இன்றையிலிருந்து உத்தியோகம் போய்விட்டது. யம கிங்கரர்கள் எல்லாரையுமே யமதர்ம ராஜன் வேலையை விட்டுத் தள்ளிவிட்டார்!*

**கிங்கரி:** *எல்லாரையுமா? இதை முன்னமேயே சொல்லக் கூடாதோ! உங்கள் காரியமே இப்படித் தான். இருக்கட்டும். யமதர்ம ராஜன் எதற்காக எல்லாரையும் வேலையை விட்டுப் போகச் சொல்லி விட்டார்?*

**கிங்கரன்:** *எல்லாம் இந்தப் பூலோக ஜனங்களைப் பார்த்துப் பார்த்து, அவருக்கும் கொள்ளை லாபம் அடிக்க வேண்டும் என்று ஆசை விழுந்து விட்டது.*

**கிங்கரி:** *கொள்ளை லாபமா? எப்படி?*

**கிங்கரன்:** *எங்கள் சம்பளம் எல்லாம் மிச்சமானல் அவருக்கு லாபம் தானே?*

**கிங்கரி:** *சம்பளம் எப்படி மிச்சம் ஆகும்? உங்களுக்குப் பதிலாக வேலை ஒப்புக் கொள்ளுகிறவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டாமோ?*

**கிங்கரன் :** அடி அசடே! எங்களுக்குப் பதிலாக இப்பொழுது வந்திருக்கிறவர்கள் சம்பளம் இல்லாமலே வேலை செய்ய முன் வந்திருக்கிறார்கள்.

**கிங்கரி :** இது என்ன ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது! சம்பளம் இல்லாமல் வேலை செய்கிறார்களா? யார் அந்தப் பயித்தியக்காரர்கள்? யமலோகத்தில் உள்ள ஜனங்களுக்கா இப்படிப் பயித்தியம் பிடித்து விட்டது?

**கிங்கரன் :** யமலோகத்து ஜனங்களுக்கு ஒன்றும் மூளை கெட்டுப் போக வில்லை. பூலோக வாசிகள்தான் இப்படிச் சம்பளம் இல்லாமலே எங்கள் வேலையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

**கிங்கரி :** ஏன்? திடீரென்று அவர்களுக்கு உங்கள் வேலையில் அத்தனை மோகம் விழக் காரணம் என்ன?

**கிங்கரன் :** அந்த வயிற்றெரிச்சலை யார் கண்டார்கள்? பூலோகத்தில் யுத்தம் ஆரம்பித்தாலும் ஆரம்பித்தது, இந்தப் பூலோக வாசிகள் ஒருவரையொருவர் கொல்ல ஆரம்பித்து எங்களுக்கு வேலை இல்லாமல் பண்ணி விட்டார்கள்.

**கிங்கரி :** என்னமோ, போங்கள்! தாங்கள் சொல்வதைப் பார்த்தால் பூலோக வாசிகளுக்குப் பயித்தியம்தான் பிடித்து விட்டது என்று தோன்றுகிறது. ஆமாம், சித்திரகுப்தன் இருக்கிறாரே, அவரையாவது வேலையில் வைத்திருக்கிறார்களா, இல்லை, அவரையும் வேலையை விட்டு நீக்கி விட்டார்களா?

**கிங்கரன்:** அவரை ஏன் வேலையை விட்டு நீக்குகிறார்கள்? பூலோக வாசிகள் ஒருவரை யொருவர் கொல்ல ஆரம்பித்தாலும் ஆரம்பித்தார்கள், சித்ர குப்தனுக்கு வேலை சொல்லி முடியாது.

**கிங்கரி:** அப்படியானால் அவருக்கு உதவியாகவாவது உங்களை அமர்த்தக் கூடாதோ?

**கிங்கரன்:** அமர்த்தலாம். ஆனால் அந்தச் சித்திரகுப்தன் யாரையாவது கிட்ட நெருங்க விட்டால் தானே? அவரை ரொம்பவும் நெருங்கவும் பயமாய் இருக்கிறது. கோபத்தில் நம் சீட்டைக் கிழித்து விட்டால் என்ன பண்ணுவது என்று யோசனையாய் இருக்கிறது!

**கிங்கரி:** என்னமோ போங்கள்! இத்தனை நாளாக இத்தனை விசுவாசத்துடன் உழைத்ததற்குக் கடைசியில் இதுதானா பலன்?

**கிங்கரன்:** என்ன பண்ணலாம்? முன்னெல்லாம் ஒவ்வொரு உயிரைக் கொண்டு வருவதற்கு நான் எவ்வளவு சிரமப்பட்டிருப்பேன்! எத்தனை யுக்திகள் கையாண்டிருப்பேன்? முன்பு சோழ ராஜன் காலத்தில் ஒரு பார்ப்பனியின் உயிரைக் கவருவதற்காக எவ்வளவு சிரமப்பட்டு, ஒரு வேடன் எய்த அம்பை ஒரு கிளையில் சிக்க வைத்து, பிறகு கிளையைக் காற்றில் ஆட வைத்துப் பார்ப்பனியின் மேல் விழச் செய்தேன்! அதே தினம் அந்த மாப்பிள்ளையின் உயிரைக் கவருவதற்காக, கொட்டு மேளத்தைப் பலமாக ஒலிக்கச் செய்து மாட்டைக் கயிற்றை அறுத்துக் கொண்டு மணமகனை முட்டச் செய்தேன்! அதை யெல்லாம் நினைத்துப் பார்க்

கும்போது இந்த நன்றி கெட்ட யமதர்ம ராஜன் மீது எனக்கு எவ்வளவு கோபம் வருகிறது, தெரியுமா ?

**கிங்கரி :** ஆனல் அவரைக் கோபித்துக் கொண்டு என்ன பிரயோசனம் ?

**கிங்கரன் :** ஆம், நீ சொல்வது நியாயந்தான். இத்தனை நாள் அவர் நம்மீது விசுவாசமாய் இருக்கவில்லையா ? இப்பவும் பூலோக வாசிகள் இங்கு ஏகமாக வந்து கொண்டிருக்கிருர்களோ இல்லையோ அவர்களுடைய சகவாசத்தினுல்தான் யமதர்மராஜனுக்கும் இப்படிக் கொள்ளை லாபம் அடிக்க வேண்டும், காரியம் ஆகிற மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும், பிறகு கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட வேண்டும் என்ற துர்ப் புத்தி தோன்றி விட்டது எனக்கு வருகிற கோபத்தில் இந்த பூலோக வாசிகளைக் கொன்று விடலாமா என்றுகூடத் தோன்றுகிறது.

**கிங்கரி :** அந்த உத்தியோகம்தான் போய் விட்டதே !

**கிங்கரன் :** என்னமோ, போ ! எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை.

[சோர்ந்து போய்க் கீழே சாய்கிருன்.]

திரை

☆

# வைகுண்டத்தில்

[வைகுண்டத்தில் லக்ஷ்மி தன் அந்தப் புரத்தில் இருக்கிறாள். மகாவிஷ்ணு வெகு அலங்கோலமாக அங்கு வந்து சேர்கிறார்.]

**லக்ஷ்மி** (திடுக்கிட்டவளாய்): ஐயோ! இது என்ன கோலம்!

**விஷ்ணு**: என்ன கோலமா! அலங்கோலம் தான்.

**லக்ஷ்மி**: ஏன் இப்படி அலங்கோலம்?

**விஷ்ணு**: எல்லாம் பெண்புத்தி கேட்டுப் பெரு மோசம் போன கதை தான். ராமாவதாரத்தில் உன் பேச்சைக் கேட்டு மாய மானைப் பிடிக்கப் போய், நான் பட்ட அவஸ்தை ஈரேழு அவதாரங்களுக்கும் போதும். இருந்தும், புத்தியில்லாமல், திரும்பவும் உன் பேச்சைக் கேட்டு நடந்தேன். இப்பொழுது இந்தக் கதிக்கு ஆளானேன்.

[பாட ஆரம்பிக்கிறார்.]

**“பெண்புத்தியாலே பெருமோசம் போனேன்”**

**லக்ஷ்மி**: இந்தாருங்கள், இந்த வேடிக்கையெல்லாம் அப்புறம் வைத்துக் கொள்ளலாம். என்ன விசேஷம்! என்ன நடந்தது சொல்லுங்கள்! என் பேச்சை நீங்கள் என்ன கேட்டீர்கள்?

**விஷ்ணு**: “பூலோகத்துக்குப் போ! பூலோகத்துக்குப் போ” என்று என்னை விரட்டிக் கொண்டேயிருந்தாயே, அதைக் கேட்டுப் பூலோகத்துக்குப் போய் நேர்ந்த விபரீதம் தான் இது.

**லக்ஷ்மி :** ஆமாம். நான் உங்களைப் பூலோகத்துக்குப் போய்விட்டு வரச் சொன்னதில் என்ன தப்பு ? பூலோகத்தில் உள்ள ஜனங்கள் எல்லாம், பாவம், வெகு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி உங்களை நோக்கி, "பகவானே ! காப்பாற்ற மாட்டாயா ?" என்று கதறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஜனங்களைப் போய்க் காப்பாற்றி விட்டு வாருங்கள் என்று தானே கேட்டுக் கொண்டேன் !

**விஷ்ணு :** ஆமாம். கேட்டுக் கொண்டாய் ! நீ சொன்னபடி நான் கேட்கப் போய்தான் பூலோக வாசிகளிடம் அவமானப் பட்டுத் திரும்பி யிருக்கிறேன். பெண் புத்தியைக் கேட்காதே என்று சொன்ன மகான் வாயில் சர்க்கரை தான் போட வேண்டும்.

[திரும்பவும் பாட ஆரம்பிக்கிறார்.]

"பெண்புத்தியாலே பெருமோசம் போனேன்"

**லக்ஷ்மி :** இந்தாருங்கள். இந்த வேடிக்கையை யெல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம். பூலோக வாசிகள் உங்களை அவமானப் படுத்தினதற்குக் காரணம் என்ன ? எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்.

**விஷ்ணு :** இந்த லட்சணத்தை விவரமாக வேறு சொல்ல வேண்டுமா ? சரி சொல்லுகிறேன் கேள். "பூலோகத்துக்குப் போ, பூலோகத்துக்குப் போ" என்று நீ என்னை நச்சரித்துக் கொண்டே யிருந்தாயா, சரி, போய்விட்டுத்தான் வருவோமே என்று

புறப்பட்டேன். புறப்பட்டதுதான் தாமதம், அந்த ஒற்றைப் பிராமணர் எதிரே வந்தார்.

**லக்ஷ்மி :** யார், நாரதரா ?

**விஷ்ணு :** வேறு யார் ? எல்லாம் அந்த ஆசாமி தான். "ஐயோ, சகுனம் ஆக வில்லையே" என்று நான் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில், "எங்கே போகிறீர் ?" என்று வேறு கேட்டு வைத்தார்.

**லக்ஷ்மி :** அந்த மனுஷனுக்குத்தான் சமயா சமயம் தெரியாது, வேறு வேலையும் கிடையாது. எப்பொழுது பார்த்தாலும் இப்படி எதிரே வந்து சகுனத்தடை ஏற்படுத்த வேண்டியது தானே அவர் வேலை ! சரி, மேலே என்ன நடந்தது ?

**விஷ்ணு :** புறப்படுகிற போதே சகுனம் சரியாக இல்லையே என்று பயந்து கொண்டுதான் போனேன். நேரே பாரத நாட்டுக்குத்தான் போனேன். ஒரு வீட்டுக்குள் நுழைந்தேன். பாவம், ஏழைக் குடும்பம் போலிருக்கிறது. ஐந்தாறு குழந்தைகள் எலும்புந் தோலுமாக பசிக்கிறது என்று அழுதுகொண்டிருந்தன. அதைப் பார்த்த போது எனக்குக் குசேலரும், அவர் குழந்தைகளும் ஞாபகத்துக்கு வந்தன. வீட்டுக்காரர் என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டார். 'யாரய்யா நீர் ?" என்று சற்று அதிகார தோரணையிலேயே கேட்டார்.

**லக்ஷ்மி :** நீங்கள், "நான் தான் மகா விஷ்ணு. உன்னைக் காப்பாற்ற வந்திருக்கிறேன்" என்று உண்மையைச் சொல்லாமல் ஏதாவது பொய்யைச் சொன்னீர்களாக்கும் ? வீட்டுக்காரர்

தங்களை யாரோ திருடன் என்று நினைத்துக் கொண்டு தடியை எடுத்து விரட்டினராக்கும்?

**விஷ்ணு :** நான் சொல்லி முடிப்பதற்குள் ஏன் இப்படி அவசரப்படுகிறாய்? மகாவிஷ்ணுவின் மனைவியா யிருந்தும் பெண்மைக் குணம் உன்னை விட வில்லையே!

**லக்ஷ்மி :** என்னைப் பழிப்பது இருக்கட்டும். மேலே என்ன நடந்தது, சொல்லுங்கள்.

**விஷ்ணு :** அதுதான் சொல்லிக் கொண்டு வந்தேனே. நீதானே நடுவில் இடை மறித்தாய்! "யாரய்யா நீர்" என்று அந்த வீட்டுக்காரர் என்னைச் சற்று அதிகாரமாகவே கேட்டதற்கு, நான் "உண்மையைச் சொல்லட்டுமா, பொய்யைச் சொல்லட்டுமா" என்று அவரைப் பார்த்துக் கேட்டேன். "உண்மையைச் சொல்லும். பொய் சொல்லி என்னை ஏமாற்ற முடியாது" என்றார் அவர். "அப்படியானல் உண்மையையே சொல்லுகிறேன். நான்தான் மகாவிஷ்ணு. பூலோகத்து ஜனங்கள் கஷ்டப் படுகிறார்களே என்று காப்பாற்றுவதற்காக வந்துளேன்" என்றேன்.

**லக்ஷ்மி :** உண்மையைச் சொல்லியுமா, உங்களுக்கு அவமானம் ஏற்பட்டது?

**விஷ்ணு :** உண்மையைச் சொன்னதனல்தான் அவமானம் ஏற்பட்டது. நான் இப்படிச் சொன்னதும் அந்த ஆள் என்னைப் பயித்தியக்காரன் என்று நினைத்துக் கொண்டு விட்டார். என்மீது கல்லை விட்டெறிய ஆரம்பித்து விட்டார்!

**லக்ஷ்மி :** ஐயையோ! அப்படியா செய்தார்? இதை அங்குள்ள போலீஸ்காரர்களிடம் தெரிவிப்பது தானே?

**விஷ்ணு :** எல்லாம் தெரிவிக்காமலா இருப்பேன்! எல்லாம் தெரிவிக்கத்தான் செய்தேன்.

**லக்ஷ்மி :** அவர்கள் என்ன சொன்னார்கள்?

**விஷ்ணு :** என்ன சொல்லுவார்கள்? கல்லை விட்டெறிந்த ஆசாமி தேவலை என்று பண்ணிவிட்டார்கள் "நான் மகாவிஷ்ணு, உங்களைக் காப்பாற்ற வந்திருக்கிறேன்" என்று எவ்வளவோ சொல்லியும் கேட்க வில்லை. நான் யாரோ எதிரி ஏஜண்ட், உளவு அறிவதற்காகப் பயித்தியக்கார வேஷம் போடுகிறேன் என்று நினைத்து என்னைச் சிறையிலடைத்து விட்டார்கள்!

**லஷ்மி :** நான் எதிரி ஏஜண்ட் இல்லை என்று தாங்கள் சொல்வதுதானே?

**விஷ்ணு :** சொல்லாமலா இருப்பேன்? எல்லாம் சொன்னேன். எதிரி ஏஜண்ட் இல்லை என்றால் உன் அரிசி ரேஷன் கார்ட் எங்கே, விறகு ரேஷன் கார்ட் எங்கே என்றெல்லாம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

**லஷ்மி :** சரி, அப்புறம்?

**விஷ்ணு :** போலீஸ் லாக்காப்பிலிருந்து எப்படியோ தப்பித்துக் கொண்டு வெளிக் கிளம்பினேன் என்று வைத்துக் கொள்ளேன்.

**லஷ்மி :** சரி, யாராவது நல்ல பக்தர்களாய் போய்ப் பார்க்கிறதுதானே!

**விஷ்ணு :** பக்தர்களையும் போய்ப் பார்த்தேன். அவர்களுக்கும் என்மீது நம்பிக்கை விழவில்லை. சினிமாவில் விஷ்ணு வேஷம் தரித்துக் கொண்டு வருகிறவர்களைப் போல் நான் இல்லையே என்று என்மீது அவர்களுக்கு நம்பிக்கை விழவில்லை.

**லக்ஷ்மி :** கடைசியில் என்னதான் பண்ணி னீர்கள் ?

**விஷ்ணு :** என்ன பண்ணுகிறது ! யாராவது ஒருவர் என்னை விஷ்ணு என்று நம்ப வேண்டுமே ? கிடையாது. எல்லாரும் சேர்ந்து என்னை பயித்தியக் கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுவார்கள் போல் பட்டது. ஆகவே செத்தேன், பிழைத்தேன் என்று ஓடிவந்து விட்டேன்.

**லக்ஷ்மி :** அப்படியானால் இந்தப் பூலோக வாசி களைக் காப்பாற்றச் செல்வதில் பயன் இல்லை என்று சொல்லும் !

**விஷ்ணு :** யார் பயன் இருக்கிறது என்று சொன்னார்கள் ? வர, வர, பூலோக வாசிகளுக்கு இருக்கிற நம்பிக்கைக் குறைவு சொல்லி முடியாது. கடவுளே பிரத்தியட்சமானால் கூட நம்பமாட்டார் கள் என்பது எனக்குந் தெரிந்த விஷயம்தான். இருந்தும் பெண் புத்தியைக் கேட்டேன் !

[பாடுகிறார்]

**பெண் புத்தியாலே பெரு மோசம் போனேன்.**

# அபாயம் நெருங்கிவிட்டது!

சீக்கிரமே நான் தற்சமயம் குடியிருக்கும் வீட்டைக் காலி பண்ணி விட்டு வேறு வீடு பார்க்க வேண்டியதுதான். வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. அந்த மனிதரோ, இப்போதைக்குக் காலி பண்ணப் போவதாகத் தெரியவில்லை. நான் தான் காலி பண்ண வேண்டும்.

நான் இருக்கும் வீட்டில் உள்ள பக்கத்துப் "போர்ஷ" னுக்கு அவர் குடிவந்த அன்றே எனக்குச் சந்தேகம் தான். சரி, இத்தனை நாளாக நானும் சரசுவும் நடத்தி வந்த தாம்பத்ய வாழ்க்கைக்கு ஏதோ ஆபத்து நேரிடப் போகிறது என்றே பயந்தேன். அவருடைய சகதர்மிணியின் ஆட்டல், குலுக்கல், மினுக்கல் இவற்றிலிருந்தும், அந்த மனிதர் அந்த அம்மாளிடம் அசடு வழிய நடந்து கொண்டதிலிருந்தும் இது விஷயம் எனக்குப் பளிச்சென்று பட்டது.

அப்பொழுதே இதற்காக ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கக் கூடாதா? வீட்டுக்காரரிடம் சொல்லி, அந்த மனிதர் பக்கத்துப் "போர்ஷ" னுக்குக் குடியேற வொட்டாமல் செய்திருக்கக் கூடாதா?

இதெல்லாம் ஒன்றும் செய்யாமல் பேசாமல் இருந்து விட்டேன். இப்பொழுது நான் எதிர் பார்த்ததே போல் நேர்ந்து விட்டது! பிறர்

பார்த்து "கண் போடும்" படியாக அவ்வளவு அழகாக நடந்து வந்த எங்கள் தாம்பத்ய வாழ்க்கையின் அமைதி குலைந்து விட்டது! மூன்று நாளாக சரசு என்னோடு பேசுவதில்லை. அடுப்பில் பூனைக் குட்டிகள் வாசம் செய்கின்றன. எனக்கு "மைசூர் கபே" யி லிருந்து சாப்பாடு வருகிறது. சரசுவுக்குப் "பங்களூர் கபே" யி லிருந்து சாப்பாடு வருகிறது!

நான் சற்றுப் பழைய காலத்து ஆசாமி தான். அதாவது இந்தக் காலத்துப் புருஷர்களைப் போல "நானும் நீயுமடி, எதிரும் புதிருமடி" என்று எப்பொழுது பார்த்தாலும் சமைய லறையில் உட்கார்ந்து கொண்டு மனைவிக்குக் கூடமாட "சித்துக் காரியம்" செய்து கொடுக்க எனக்குத் தெரியாது.

காலையில் எழுந்து ஸ்நான அறைக்குள் சென்றால் பல் தேய்க்க 'பிரஷ்' ஷும், செம்பில் ஜலமும் தயாராக இருக்கும். பல்லைத் தேய்த்து விட்டு வாசல் அறைக்கு வந்தால் வெள்ளி டம்ளரில் காப்பி தயாராகக் காத்துக் கொண்டிருக்கும். பிறகு பத்திரிகைப் படிப்பு, அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யருடன் வம்பளப்பு முதலியன நடத்தி விட்டு, சரியாக ஒன்பது மணிக்கு ஸ்நான அறைக்குள் நுழைந்தால் ஸ்நானம் செய்யத் தயாராக அண்டாவில் ஜலம் நிரப்பி வைக்கப் பட்டிருக்கும். ஸ்நானம் செய்து விட்டு கூடத்துக்குப் போனால் இலையும், மணையும் போடப் பட்டு, பக்கத்தில் வெள்ளிக்

கூஜாவிலும், டம்ளரிலும் குடிக்கத் தண்ணீர் வைக்கப் பட்டிருக்கும்.

ஒவ்வொன்ருக விஸ்தரித்துச் சொல்வானேன்? ஒரு காரியத்துக்கும் நான், சரசுவைக் கூப்பிட்டு, "இந்தா! இன்ன காரியத்தை ஏன் செய்ய வில்லை?" என்று கேட்கும்படியாக இருக்காது. எள் என்பதற்கு முன் எண்ணெயாக எல்லாக் காரியங்களையும் என் மனது அறிந்து செய்து வைத்திருப்பாள். இதனுல் நாங்கள் ஒருவருக் கொருவர் பேசிக் கொள்ள வேண்டிய பிரமேயம் கூட ஏற்பட வில்லையென்ருல், பார்த்துக்கொள்ளுங்களேன் !

நாங்கள் இப்படிப் பேசிக் கொள்ளாமல் இருந்ததைப் பார்த்து விட்டு, பக்கத்து வீட்டுக் காரர்களும் எதிர்த்த வீட்டுக் காரர்களும், அண்டை வீட்டுக் காரர்களும் எங்களுக்கிடையில் ஏதோ மனஸ்தாபம் என்று கூட நினைத்து வந்தனர் !

அவர்கள் என்ன நினைத்துக் கொண்டு போகட்டும், என் வரையில் இந்த வாழ்க்கை எனக்குப் பிடித்துத்தான் இருந்தது. ஏன், சரசுவுக்கும் பிடித்துத்தான் இருந்தது என்று நினைக்கிறேன்.

ஆனுல் எங்கள் தாம்பத்ய வாழ்க்கையைக் குலைப்பதற்கென்றே ஏற்பட்டது போல் பக்கத்துப் "போர்ஷ"னில் இருந்த மனிதருக்கு மாற்றலாகி விட்டது! அவர் காலி செய்து, "டு லெட் எ போர்ஷன்" என்னும் பலகை தொங்க விட்டதும், விடாததுமாக இந்த மனிதர் குடி வந்து விட்டார்.

ஸ்திரீகள் இடுப்பில் தூக்கிக்கொண்டு வருவார் களே, அதைப் போல ஒருமூன்று வயதுப் பையனை அவர் இடுப்பில் தூக்கிக்கொண்டு பின்னால் வர, முன்னால் குலுக்கிக்கொண்டும், மினிக்கிக் கொண் டும் வந்து சேர்ந்தாள் அவர் மனைவி. சரி, ஆசாமி தற்காலத்திய நவநாகரிக ஆசாமி போல் இருக் கிறது என்று நான் நினைத்தேன். நான் நினைத் தது சரியாகப் போய் விட்டது.

தினம் காலையில் எழுந்து ஆபீஸ் போகிற வரைக்கும்,சாயந்திரம் ஆபீஸிலிருந்து திரும்பி வந்து படுக்கப் போகிற வரைக்கும் ஆசாமி சமையலறையி லேயே இருப்பார். மனைவிக்கு வேண்டிய "சித் துக் காரியங்கள்" முழுவதையும் இவர் செய்து கொடுத்துக் கொண்டிருப்பார்.

"இந்தாருங்கள்! உங்களைத்தானே! அந்த வெங்கலப் பானையைச் சற்று எடுத்துக்கொண்டு வாருங்கள்....அந்த வெங்கலப் பானையில்லை. அதோ அந்தக் கற்சட்டிக்குப் பக்கத்தில் வைத்திருக்கி றேனே, அது!....எனக்குக் குளிக்கிறதற்கு நாழி யாகிறது, இன்னும் பேசாமல் இருக்கிறீர்களே! எப்பொழுது ஜலம் நிரப்புவதாக உத்தேசம்?.... இந்தாருங்கள், உங்களைத்தானே! குழந்தைக்குத் தலையில் ஒரு கை எண்ணெய் வைத்துச் சற்றுக் குளிப்பாட்டி விடுங்களேன்! அப்படியே, 'தாயி' பாத்திரங்களைத் தேய்த்துக் கிணற்றண்டை வைத் திருப்பாள், அவற்றை எடுத்துக் கொண்டு வாருங்க ளேன்!" என்று அந்த அம்மாள் தன் புருஷனை இடைவிடாது அதிகாரம் பண்ணிக் கொண்டிருக்

கும் சப்தம் அடுத்த 'போர்ஷன்' சமைய லறையி லிருந்து வந்து கொண்டே யிருக்கும்.

எனக்கு என்னமோ அந்த அம்மாள் தன் புருஷனை இப்படி "ஆட்டி வைத்துக் கூத்துக் காண்பதை"ப் பார்க்க மிகவும் பரிதாபகரமாக யிருக்கும். ஆனல் அவர் என்னமோ கன குஷி யாகத்தான் எப்பொழுது பார்த்தாலும் சிரித்த முகத்துடன் வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொண் டிருப்பார்.

குழந்தை சட்டையைத் துவைத்துப் போடு வார். குழந்தைக்குத் தலைவாரிப் பின்னி விடுவார். 'தாயி'யை வேலை வாங்குவார். எல்லா ரும் குளிப்பதற்கு ஜலம் நிரப்பி வைப்பார். பிறகு கட்டைகளை வெயிலில் உலரப் போடுவார். பாதி வேளை அடுப்பை மூட்டித் தாமே காப்பி போட்டு வைப்பார். சாப்பிடுவதற்கு இலை போட்டு, தீர்த்தம் எடுத்து வைப்பார். வளர்த்தி வளர்த்திக் கூறு வானேன் ? பழைய கால மோஸ்தர் ஆசாமிகளாகிய நாங்கள், ஸ்திரீகள்தான் செய்ய வேண்டும், புருஷர் கள் செய்யக் கூடாது என்று எதிர்பார்க்கும் எல்லா வேலைகளையும் அவர் செய்வார்.

ஒவ்வொரு சமயம் அவரைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குக் கோபம் கோபமாக வரும். குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு போல இப்படி புருஷ சமூகத்துக்கே அவமானம் தேடி வைக்கிருரே என்று ஆத்திரம் ஆத்திரமாக இருக் கும். ஆனல் அடுத்த கணமே, "எப்படியாவது போய்விட்டுப் போகிருர், பாவம்! அவர் பாடு, அவர்

பெண்டாட்டி பாடு!" என்று பச்சாத்தாபப்படத் தோன்றும்.

ஆனால் இந்தக் காரியம் வெகு நாள் அவர் பாடு, அவர் பெண்டாட்டி பாடு என்று இருக்கவில்லை.

ஒரு நாள் காலையில் படுக்கையை விட்டு எழுந்ததும் ஸ்நான அறைக்குள் சென்றேன். வழக்கமாக அங்கு காணப்படும் பிரஷ்ஷையும் செம்பு ஜலத்தையும் காணவில்லை.

"ஏன் பிரஷ்ஷும் செம்பு ஜலமும் வைக்கவில்லை?" என்று சரசுவைக் கேட்டேன். "நீங்கள் தான் கொஞ்சம் எடுத்துக் கொள்ளக் கூடாதா!" என்றாள் சரசு.

அடுத்த நாள் பல் தேய்க்கப் பிரஷ்ஷும், செம்பு ஜலமும் நானே எடுத்துக் கொண்டேன். ஆனால் மேஜையில் வழக்கமாகக் காணப்படும் காப்பியைக் காணவில்லை. "ஏன் மேஜையில் காப்பி வைக்கவில்லை?" என்று சரசுவைக் கேட்டதற்கு, "ஏன் நீங்கள்தான் கொஞ்சம் உள்ளே வந்து வாங்கிக் குடித்தால் என்ன? ஒவ்வொருத்தரைப் போல் கூடமாட ஒத்தாசை பண்ணவிட்டாலும் இது கூடச் செய்யக் கூடாதா?" என்று சற்றுக் கடுமையாகச் சொன்னாள்.

அடுத்த நாள் பல் தேய்ப்பதற்கு வேண்டிய உபகரணங்களை நானே எடுத்துக் கொண்டேன். சமையலறைக்குப் போயே காப்பி வாங்கிக் குடித்தேன். ஆனால் பத்திரிகைப் படிப்பு, வம்பளப்பு

முதலியன முடித்து விட்டுச் சாப்பிடுவதற்காக உள்ளே சென்றபோது இலையையும் காணோம், மணையையும் காணோம்! ஏன் என்று கேட்டதற்கு சரசு என்மீது சீறி விழுந்தாள். "ஒரு நாள்தான் நீங்கள் இலையை எடுத்துப் போட்டுக்கொண்டால் என்ன வந்துவிட்டதாம்? எல்லா வீட்டுப் புருஷர்களும் இப்படியா எல்லாவற்றுக்கும் பெண்டாட்டியையே அதிகாரம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்?" என்றாள்.

எனக்குக் கோபம் தாங்கவில்லை. இருந்தாலும் மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன். "சரசுவைக் குற்றம் சொல்லிப் பிரயோசனமில்லை. இந்தப் பக்கத்துப் 'போர்ஷன்' பிராமணன் தன் பெண்டாட்டிக்குக் காரியம் செய்து கொடுப்பதைப் பார்த்துவிட்டுத் தான் இப்படிச் சொல்கிறாள். சீக்கிரமே இந்த வீட்டை விட்டு ஒன்று நாம் காலிபண்ண வேண்டும், அல்லது அவர் பண்ண வேண்டும்" என்று நினைத்துக் கொண்டேன்.

ஆனால் அடுத்த நாளே சரசு இப்படி என் தலையில் கல்லைத் தூக்கிப் போடுவாள் என்று நான் நினைக்கவில்லை. மூன்றும் நாளும் வழக்கம்போல் பிரஷ்ஷையும், செம்பு ஜலத்தையும் நானே தேடி எடுத்துக்கொண்டு பல் தேய்த்து விட்டு, சமயலறைக்குள் நுழைந்து காப்பி சாப்பிட்டு விட்டு, இதற்குள் வாசலில் வம்பளப்பதற்காகத் தயாராகக் காத்துக் கொண்டிருந்த அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்ய

ரைப் பார்ப்பதற்காகத் திரும்பினேன். சரசு கூப்பிட்டாள்.

"இந்தாங்கோ ! உங்களைத்தானே ! நான் கொஞ்சம் கைக் காரியமாக இருக்கிறேன். சற்றுக் குழந்தை தலையிலே ஒரு கை எண்ணெய் வைத்துக் குளிப்பாட்டி விடுங்களேன் !" என்றாள் !

இதைக் கேட்டதும் என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை. அந்தப் பாழும் மனிதர் தம் பெண்டாட்டிக்கு வேலை செய்யப் போக சரசு நம்மைப் பார்த்து அதிகாரம் பண்ண ஆரம்பித்து விட்டாள், பார்த்தாயா என்று ஆத்திரம் வந்தது. எனக்கு வந்த கோபத்தில் சரசுவின் கன்னத்தில் பளார் என்று ஒரு அறை கொடுத்து விட்டேன்.

அவ்வளவுதான். மூன்று நாட்கள் ஆகி விட்டன, நாங்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டு. சீக்கிரமே நான் தற்சமயம் இருக்கும் வீட்டைக் காலி பண்ணி விட்டு வேறு வீடு பார்க்க வேண்டியதுதான். யாராவது வீடு இருந்தால், சொல்லுங்கள் !

○☆○

# பையன் இருந்தால் சொல்லுங்கள்!

இதனுல் நான் என்னுடன் சிநேகம், உறவு, பரிச்சயம், பாத்தியதை முதலியன கொண்டாடும் சகல கன தனவான்களுக்கும், குறிப்பாக இந்த அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யருக்கும், அவர் மூலமாக என்னுடன் பாத்தியதை கொண்டாடுகிற வர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது யாதெனில்:—

ஐயா, தயவுசெய்து என்னை விட்டுவிடுங்கள்! வீணுக என் உயிரை வாங்காதீர்கள். நீங்கள் எக்கேடு கெட்டுப் போங்கள். என்னை மாத்திரம் பயித்தியமாக அடித்து விடாதீர்கள். இப்பொழுதே நான் பாதிப்பயித்தியமா யிருப்பதாக என் மனைவி சொல்லுகிருள்.

ஓய்! அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யரே! எந்த வேளையில் நீர் என்னைப்பார்த்து, "பையன் இருந்தால் சொல்லுங்கள்" என்று கேட்க ஆரம்பித்தீரோ, அதுமுதல் பிடித்தது எனக்குச் சனியன்! உலகமே, "பையன் இருந்தால் சொல்லுங்கள்" என்று என்னைக் கேட்க ஆரம்பித்துவிட்டது!

முதல் முதல் நீர் என்னைப் பார்த்து அப்படிக் கேட்டபோது, வீட்டில் வேலை செய்யத்தான் பையன் கேட்கிறீர் என்று நினைத்துக் கொண்டு,

"ஆஹா ! அதற்கென்ன ? எங்கள் வீட்டில் வேலை செய்யும் பையனுக்கு உறவுப் பையன் ஒருவன் இருக்கிறான். சம்பளம் ஏழு ரூபாய் கொடுத்தால் போதும்" என்று சொன்னேன். ஞாபகம் இருக்கிறதா ! இதைக் கேட்டுவிட்டு, நீர் சிரித்தீர். "வேலை செய்கிற பையன் இல்லை, ஸ்வாமி ! எனக்கு வேண்டியது மாப்பிள்ளைப் பையன்" என்றீர்.

நாளைக்கு மாப்பிள்ளையாக வரப்போகிறவனை இம்மாதிரி பையன் என்று அழைக்கிறார்கள் என்று தெரிந்ததும், எங்கள் வீட்டில் வேலை செய்யும் பையனை, "பையா !" என்று கூப்பிடுவதற்குக் கூட எனக்குப் பயமாகப் போய்விட்டது. எங்கே நீங்கள் நான் 'பையனைக்" கண்டு பிடித்துவிட்டதாக நினைத்துக் கொண்டு இங்கே ஓடி வந்துவிடப் போகிறீர்களோ என்று எனக்கு நடுக்கம் !

ஓய் ! கிருஷ்ணஸ்வாமி அய்யர்வாள் ! நான் கறி காய்க் கடைக்குப் போக வேண்டுமானாலும், மளிகைக் கடைக்குப் போக வேண்டுமானாலும், தங்கை வீட்டுக்குப் போக வேண்டுமானாலும், தமக்கை வீட்டுக்குப் போக வேண்டுமானாலும், காப்பி ஹோட்டலுக்குப் போக வேண்டுமானாலும், ஆபீசுக்குப் போக வேண்டுமானாலும், ஆபீசிலிருந்து திரும்ப வேண்டுமானாலும் தங்கள் வீட்டு வழியாகத்தான் போக வேண்டியிருக்கிறது. அதற்காக என் தலையைக் கண்ட போதெல்லாம், "பையன் இருந்தால் சொல்லுங்கள் !" "பையன் இருந்தால் சொல்லுங்கள் !" என்று என்னைப் பிடித்து வாட்டுகிறீர்களே. நியாயமா ? நான்

பையன் யாரையோ சட்டைப் பைக்குள்ளோ அல்லது வேஷ்டித் தலைப்புக்குள்ளோ ஒளித்து வைத்திருப்பது போலல்லவோ என்னைப் பிடித்துக் குலுக்கு, குலுக்கு என்று குலுக்குகிறீர்?

ஐயா, ராம சாஸ்திரிகளே! தங்கள் பெண் இன்டர்மீடியட் பாஸ் பண்ணியிருக்கிறாள் என்றும், அவளுக்கு ஆர்மோனியம் நன்கு வாசிக்கத் தெரியும் என்றும், அவள் பாடினால் இன்றைக்கெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம் என்றும், அவள் சமையலை இன்றைக்கெல்லாம் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம் என்றும் இதுவரை என்னிடம் ஒரு ஆயிரம் தடவையாவது சொல்லியிருப்பீர். தங்கள் பெண் சங்கீதத்தைக் கேட்டுவிட்டுப் போகும்படி நூறு தடவைக்குக் குறையாமல் வற்புறுத்தியிருப்பீர். இருந்தும் எதற்காக என்னைப் பிடித்துத் திரும்பவும், திரும்பவும் தங்களுடைய பெண் சங்கீதத்தைக் கேட்குப்படி ஹிம்சிக்கிறீர்? நீர் என்னை எவ்வளவு ஹிம்சித்தாலும், யாராவது பையன் இருந்தால் தானே சொல்லுவதற்கு?

ஐயா, நாராயணய்யரே! தங்கள் பெண் ஜாதகத்தில் என்னென்ன கிரகங்கள் எந்தெந்த இடத்தில், யார் யாரைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்னும் விஷயம், தாங்கள் சொல்லிச் சொல்லி எனக்கு அப்படியே நெட்டுரு ஆகிவிட்டது. பார்ப்பதற்கு ஒரு மாதிரி 'மாநிறமாக' இருந்தாலும் பெண் பலே அதிர்ஷ்டக்காரி, குருவும், சனியும் கைகோத்துக் கொண்டு புதனைப் பார்க்கப் போவதால் இவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறவனை

அதிர்ஷ்டம் பளார் பளார் என்று கன்னத்தில் அடிக்கும் என்றெல்லாம் எனக்குத் தெரியும். இருந்தும் "பையன் இருந்தால் சொல்லுங்கள்" "பையன் இருந்தால் சொல்லுங்கள்" என்று ஆரம்பித்துக் கொண்டு, பெண் ஜாதகத்தில் கிரகங்கள் யார் யாரைப் பார்க்கின்றன என்று சொல்லி என்னைப் பயித்தியம் அடிக்கிறீர்களே, நியாயமா ?

ஸார், மிஸ்டர் ஏ. ஆர். அய்யர் அவர்களே! "பயலுக்கு ஒரு தம்படி வரதட்சிணை கொடுக்க முடியாது. தாலியைக் கையில் கொடுப்பேன். அதைப் பெண் கழுத்தில் கட்டிவிட்டு அவன் போய் விட வேண்டியது (பெண்ணையும் அழைத்துக் கொண்டு தான்.) அப்படிப் பட்ட பயல் எவனாவது இருந்தால் சொல்லும்" என்று தினம் தாங்கள் என் கழுத்தை அறுக்கிறீர்களே! அப்படிப்பட்ட பயல் இருந்தால் அவன் கழுத்தைப் பிடித்து உங்கள் காலடியில் கொண்டுவந்து தள்ள மாட்டேனா! எதற்காக என்னைக் கண்ட போதெல்லாம் இந்தக் கேள்வியைக் கேட்டு என் மூளை குழம்பச் செய்கிறீர் ?

ஐயா, கனதனவான்களே! நீங்களும் இன்னும் உங்களைப் போன்றவர்களும் தயவு செய்து என்னைப் "பையன் இருந்தால் சொல்லுங்கள்" என்று வதைக்காதீர்கள். இதனால் எனக்குப் பாதிப் பயித்தியமே பிடித்து விட்டது போலாகி விட்டது. வாசலில் தயிர்க்காரன் 'கூ' என்று கூவினால் "பையன் இருந்தால் சொல்லுங்கள்" என்று கெஞ்சுவது போலிருக்கிறது. பால்காரன், அம்மா!"

என்று கூப்பிட்டால், "பையன் இருந்தால் சொல் லுங்கள்" என்று பதறுவது போலிருக்கிறது. தபால்காரன், "ஸார், போஸ்ட்" என்று கூப்பிடும் போது கூட யாரோ "பையன் இருந்தால் சொல் லுங்கள்" என்று பெருமூச்செறிவது போலிருக் கிறது.

உங்கள் மேல் எல்லாம் எனக்கு இரக்கம் இல் லாமல் இல்லை. உங்களை யெல்லாம் பார்க்கும் போது திருதராஷ்டிரனைப் போல் நமக்கு நூறு பிள்ளைகள் இருக்கக்கூடாதா, இருந்தால் ஆளுக் கொரு பையன் கொடுத்து உதவலாமே என்று கூடத் தோன்றுகிறது.

ஆகவே, தயவுசெய்து என் மீது இரக்கம் வைத்து என் உயிரை வாங்காதீர்கள். தொந்திரவு செய்தீர்களோ, அப்புறம் நிஜமாகவே பையன் இருந்தாலும் சொல்லமாட்டேன்!

○☆○

# டில்லி முண்டு

மேலே இருக்கும் தலைப்பை டில்லி "மண்டு" என்று தவறுதலாகப் படித்து விட்டு, யாரடா அந்த டில்லி மண்டு என்று மூளையைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். நான் எழுதப் போவது மண்டுவைப் பற்றி யல்ல, முண்டுவைப் பற்றி. மண்டுவைப் பற்றி எழுதினால் வீண் தாம்பத்ய கலகம்தான் நேரிடும். யான் யாரை மண்டு என்று சொல்லாமல் சொல்லுகிறேன் என்பதை நீங்கள் தெரிந்து கொண் டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

டில்லி முண்டு என்றதும் எங்கள் ஆபீஸ் நாயருக்குக் கோபம் வந்து விட்டது. அவன் ஊர் முண்டாகிய மலையாள முண்டைப் பழிக்கலாச்சா என்று அவனுக்குக் கோபம்!

"டில்லி முண்டுனெ எந்தானே விசேஷம்! ஈ ராஜ்யத்தே முண்டுனெ எந்தானே குறைச்சலு?" என்று கைகளை ஆட்டிக்கொண்டு சண்டைக்கு வந்து விட்டான்!

ஆனால் எங்கள் நாயர் என்னதான் கைகளை ஆட்டினாலும், டில்லி முண்டு உசத்தி, உசத்திதான்; மலையாள முண்டு, தாழ்த்தி, தாழ்த்திதான். ஏனெனில் மலையாள முண்டுவுக்கு இல்லாத சில விசேஷ குணங்கள் டில்லி முண்டுவுக்கு உண்டு. டில்லி முண்டுவுக்குக் கைகள் உண்டு, கால்கள் உண்டு.

கிராப்பும் உண்டு, குடுமியும் உண்டு. வீட்டில் வேலை செய்ய வரும் அந்தப் பக்கத்துப் பையன்களை முண்டு என்றுதான் டில்லியில் அழைக்கிறார்கள்.

நானும் சரசுவும் டில்லிக்குச் சென்றதும், எல்லாரையும்போல் நாங்களும் எங்கள் வீட்டில் ஒரு முண்டுவை வேலைக்கு அமர்த்திக் கொண்டோம், ஆனால் முண்டுவிடம் வேலை வாங்க வேண்டுமே. அதற்கு வேண்டிய ஹிந்தி எனக்கும் தெரியாது, சரசுவுக்கும் தெரியாது. அத்தனைக்கும் நான் ஹிந்தி ராஷ்டிர பாஷா பரீட்சை கொடுத்திருக்கிறேன் என்று பெயர்!

இந்த மாதிரி ஒரு முண்டுவிடம் பேசவேண்டிய சாதாரண நிலைமை எனக்கு ஏற்படும் என்று இந்த தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபையார் எதிர் பார்க்க வில்லை என்றே தோன்றுகிறது. தேசபக்தி, சுயராஜ்யத்தின் அவசியம், மாதர் சுதந்திரம், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஆகிய இது போன்ற பெரிய விஷயங்களைப் பற்றிப் பேசு என்றால் ஹிந்தியில் விளாசித் தள்ளி விடுவேன். அதற்கு வேண்டிய சொற்றொடர்களும், பெரிய, பெரிய வார்த்தைகளும் எனக்கு இந்த ஹிந்தி பிரசார சபையார் சொல்லிக் கொடுத் திருந்தார்கள்.

ஆனால் ஒரு முண்டுவைப் பார்த்து, "அடுப்பை மூட்டு", "கரியைக் குமுட்டியில் போடு" "பால் பொங்குகிறது. கீழே இறக்கி வை" ஆகிய இது போன்ற சாதாரண விஷயங்களைச் சொல்வதற்கு வேண்டிய வார்த்தைகளை எனக்குச் சொல்லித் தர வில்லை.

சரசுவுக்கோ எனக்குத் தெரிந்த ஹிந்தி கூடத் தெரியாது. ஆனல் இதற்காக அவள் பயந்ததாகத் தெரியவில்லை. ''ஹிந்தி ஸ்வபோதினி மாத்திரம் ஒன்று வாங்கிக் கொடுத்து விடுங்கள். நான் இந்த முண்டுவைத் திணற அடிக்கிறேனு, இல்லையா, பாருங்கள்'' என்ருள்.

அப்படியே அவளுக்கு ஒரு ஹிந்தி ஸ்வ போதினி வாங்கிக் கொடுத்தேன். அதில் இந்த மாதிரி முண்டுகளை வேலை வாங்குவதற்கு வேண்டிய வீட்டு சம்பந்தமான வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனல் அந்த வாக்கியங்களை ஹிந்தியில் மாத்திரம் கொடுத்துத் தொலைத்திருக்கக் கூடாதா ? அப்படி யின்றிப் பக்கத்தில் தமிழிலும் உச்சரிப்பு போட்டிருந்தார்கள்.

இப்படிப் பக்கத்தில் தமிழில் உச்சரிப்பு கொடுக்கப்பட்டிருந்தது அனர்த்தமாகப் போய்விட்டது !

ஏனெனில் சிரமப்பட்டு ஹிந்தி எழுத்துக்களைக் கற்றுக்கொண்டு பிறகு ஹிந்தியும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சரசுவுக்கு இருந்த ஆசை போய் விட்டது ! அந்த தமிழ் உச்சரிப்பு வார்த்தைகளை வைத்துக்கொண்டே ஜமாய்த்து விடலாம் என்று தீர்மானித்து விட்டாள் !

தினம் காலையில் எழுந்ததும் சரசு அந்தப் புஸ்தகத்தைப் புரட்டிப் பார்த்து முண்டுவிடம் ஏதேதோ சொல்வாள். ஆனல் இவள் பேசுகிற பாஷை முண்டுவுக்கு ஒன்றும் புரியாது. இருந்தா

னும் ரொம்ப கவனித்துக் கேட்டுவிட்டு, தனக்கு எந்தெந்தக் காரியங்கள் உசிதம் என்று படுகிறதோ அவற்றைச் செய்து கொண்டிருப்பான்.

எனவே வீட்டில் கொஞ்ச நாளைக்குக் காரியங்கள் சுமுகமாக நடந்து கொண்டிருந்தன. ஆனால் சரசுவின் "ஹிந்தி அறிவு" விசாலப்பட, விசாலப்பட நிலைமை விபரீத மாகிக்கொண்டு வந்தது. சரசுவின் ஹிந்தி உச்சரிப்பு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக மாற ஆரம்பித்து விட்டது. "குமுட்டியில் கரியைப் போடு" என்று சரசு சொல்வது "குமுட்டியில் பாலைக் கொட்டு" என்று சொல்வது போலிருக்கும். "அடுப்பை மூட்டு" என்று சொல்வது "அடுப்பை உடைத்துப் போடு" என்று சொல்வது போலிருக்கும். "குளிக்க வெந்நீர் எடுத்து வை" என்று சொல்வது வெந்நீரை எடுத்து அடுப்பில் கொட்டு" என்று சொல்வது போலிருக்கும்.

ஆனால் நல்ல வேளையாக முண்டு அப்படி யெல்லாம் ஒன்றும் செய்து விடவில்லை. சரசு சொன்ன ஹிந்தியைச் சரியானபடி அர்த்தம் பண்ணிக் கொண்டு, காரியங்களை நடத்திக் கொண்டு வந்தான். நாளடைவில் இவனுக்கும், சரசுவுக்கு மிடையே ஒரு புது பாஷை உற்பத்தி யாகிவிட்டது. சரசுவும் தான் என்னமோ ஹிந்தி வெகு நன்கு கற்றுக் கொண்டு விட்டதுபோல் கர்வப் படத் தொடங்கி விட்டாள்.

ஆனால் எனக்கு என்னமோ இது பெரிய தர்ம சங்கடமாகி விட்டது. ஏனெனில் இவர்கள் இரு

வருக்குமிடையே இப் புது பாஷை வளர, வளர இம் முண்டுவை வேலையை விட்டு நீக்குவது முடியாத காரியம் என்று ஆகிவிட்டது.

முண்டுவை வேலையை விட்டு நீக்குவானேன் என்று நீங்கள் கேட்கலாம். பின் நீங்களே சொல் லுங்கள், முண்டு தினம் ஒரு சாமான் உடைத்துக் கொண்டு வந்தால் அவனை வேலையை விட்டு நீக்கா மல் வேறு என்ன பண்ணுவது? ஆனால் சரசு கற்று வைத்துக் கொண்டிருந்த "புது ஹிந்தி"யை வைத் துக்கொண்டு எப்படிப் புது முண்டுவை வேலைக்கு வைத்துக் கொள்வது? ஆகவே என்ன பண்ணு வது என்று தெரியாமல் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் வெகுநாள் பல்லைக் கடித்துக் கொண் டிருக்க வேண்டிய சிரமம் எனக்கு முண்டு வைக்க வில்லை.

ஒரு நாள் என் நண்பர் ஒருவரைச் சாப்பிட அழைத்திருந்தேன். அன்றைக்கு என்று சரசு போட்ட உத்தரவுகளை முண்டு வழக்கப்படி புது ஹிந்தியில் அர்த்தம் பண்ணிக் கொள்ளாமல் சரி யான ஹிந்தியில் அர்த்தம் பண்ணிக் கொள்ளவே, அனர்த்தம் விளைந்து விட்டது! வளைத்து வளைத்துச் சொல்வானேன்? அன்றைக்கு முண்டு எங்கள் எல்லார் சாப்பாட்டு வாயிலும் மண்ணைப் போட்டு விட்டான்.

தான் ஞாபக மறதியால் அப்படிச் செய்து விட்டதாக முண்டு எவ்வளவோ சொல்லியும் சரசு

கேட்காமல் முண்டுவை 'உட்கார்த்தி வைத்து விட்டாள்.' (சரசுவின் 'புது ஹிந்தி'யில் 'உட்கார்த்தி வைத்தல்' என்றால் வேலையை விட்டு நிறுத்தி வைத்தல் என்று அர்த்தம்!)

சரசுவின் பாஷையைப் புரிந்து கொள்ளக் கூடிய இந்த ஒரே முண்டு வேலையை விட்டு "உட்கார்ந்து விடவே" வேறு முண்டுவை வேலைக்கு வைத்துக் கொள்ளப் பயந்து நானும் டில்லி வேலையை விட்டு 'உட்கார்ந்து விட்டேன்!'

# ஐயா கணக்கு வாத்தியாரே!

ஐயா, கணக்கு வாத்தியாரே,

நானும் என் நாற்பத்தெட்டு வருஷ அனுபவத்தில் பார்த்தாலும் பார்த்தேன், தங்களைப் போன்ற விடாக்கண்டரைப் பார்த்ததே இல்லை.

"யார் ஐயா நீர், என்னைப்பார்த்து விடாக் கண்டர் என்று சொல்வதற்கு?" என்று அந்த பிளாக் போர்டில் மாட்டப் பட்டிருக்கும் தலைப்பாகையைத் தலையில் அணிந்து கொண்டு, மேஜையில் இருக்கும் பிரம்பைக் கையில் எடுத்துக் கொண்டு சண்டைக்கு வருகிறீரோ?.... அப்படியானால் இதோ, நான் யார் என்று தங்களுக்குத் தெரிவித்து விடுகிறேன். நீர் மாட்டில் உம் பள்ளிக்கூட ஞாபகத்தில் என் முதுகில் இரண்டு போட்டு வைக்கப் போகிறீர்!

உம் பள்ளிக்கூடத்தில், நீர் கணக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் மூன்றாவது வகுப்பில் சுப்பிரமணியன் என்று ஒரு பையன் இருக்கிறானே தெரியுமா, சாக்ஷாத் அவன் தாத்தாதான் நான்.

....ஊம், நீர் என்னை யார் என்று புரிந்துகொள்ளவேயில்லை. சரி, இருபது வருஷத்துக்கு முந்தி ராமசாமி என்று ஒரு பையன் தங்கள் வகுப்பில் வாசித்தானே, நெட்டையா, சிகப்பா, குடுமி வைத்துக் கொண்டு. ஞாபகம் இருக்கிறதா? அவன் தகப்பனார்தான் நான்.

ஊஹூம், உமக்கு என்னை இன்னும் யார் என்று அடையாளம் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்தக் காலத்தில் எல்லாப் பையன்களும்தான் குடுமி வைத்துக் கொண்டிருந்தார்கள், அப்படியிருக்க, திருப்பதியில் மொட்டைத் தலையனைக் கண்டாயா என்பதுபோல் எப்படிக் கண்டுபிடிப்பது என்று கேட்கிறீர், இல்லையா?

ரொம்ப நியாயம். அப்படியானால் இன்னும் இருபது வருஷத்துக்கு முந்திச் செல்லும். தாங்கள் புதிதாக இந்தப் பள்ளிக்கூடத்தில் கணக்கு வாத்தியாராக வந்து சேர்ந்தீரே, அந்த வருஷத்தைத்தான் சொல்கிறேன். அப்பொழுது பால கிருஷ்ணன் என்ற எட்டு வயதுப் பையன் ஒருவன் மூன்றாவது வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தானே, ஞாபகம் இருக்கிறதா?

....என்ன, ஞாபகம் இல்லையா?........சரி, என்ன பண்ணுகிறது? உம்மைக் குற்றம் சொல்லி என்ன பிரயோஜனம்? அந்தக் காலத்திலேயே பாலகிருஷ்ணன் என்று சொன்னால் ஒரு வாத்தியாருக்கும் தெரியாது. அந்தப் பாழாய்ப் போன "ஷோக் மாப்பிள்ளை" தான், என் பெற்றோர்கள் அழகாக வைத்த பெயரை எல்லாரும் மறக்கும்படி செய்து விட்டாரே?

நான் யாரை ஷோக்கு மாப்பிள்ளை என்று குறிப்பிடுகிறேன் என்றாவது தெரிகிறதோ? வேறு யார், எல்லாம் அந்த மூன்றாவது வகுப்பு வாத்தியார் கணபதி சுப்ரமண்ய அய்யரைத்தான். நூறும், இருநூறும் செலவழித்து எங்கள் பெற்றோர்கள்

எங்களுக்கு அழகாகப் பெயர்கள் இட வேண்டியது, இந்த மனுஷன் உடனே அதை மாற்றிவிட வேண்டியது ! இதைத்தான் அவர் தன் தொழிலாகக் கொண்டிருந்தார் !

இதனால் என்ன ஆகிவிட்டது என்றால் தங்கள் பிள்ளைகளைத் தேடிக் கொண்டு பெற்றோர்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்து பெயரைச் சொல்லி விசாரித்தால் யாருக்கும் புரிவதில்லை.

ஏன், ஒரு தடவை நீங்களே ஆடு திருடின கள்ளனைப்போல விழிக்க வில்லையா ?

என்னோடு வாசித்துக் கொண்டிருந்தானே, 'வழுக்கைத் தலை'', அவன் தகப்பனார் வந்து, உங்களைப் பார்த்து, "மகாதேவன் எப்படிப் படிக்கிறான் ?'' என்று கேட்டபோது தாங்கள் மகாதேவன் யார் என்று புரிந்து கொள்ளாமல், திருதிரு என்று விழிக்க வில்லையா ? பிறகு, அவர் தன் பிள்ளையைச் சுட்டிக் காட்டிக் கேட்டபோது, "ஓ ! வழுக்கைத் தலையின் தகப்பனாரா நீங்கள் !'' என்று உங்களையறியாமலேயே சொல்லவில்லையா ? வழுக்கைத் தலையின் தகப்பனார் இதைக் கேட்டுக் கோபம் கொண்டு உம்மை அடிக்க வர, ஹெட் மாஸ்டர் வந்து மத்தியஸ்தம் செய்யவில்லையா ?

ஆக, இத்தனை ரகளைக்குக் காரணமான அந்த கணபதி சுப்ரமண்ய அய்யருக்கு நாங்களும் ஒரு பெயர் வைத்திருந்தோம். அவர் தினம் ஷோக்காக மாமனார் வீட்டுக்குச் செல்லும் மாப்பிள்ளையைப் போல் உடை உடுத்திக்கொண்டு வருவதைப் பார்

த்து விட்டு, "ஷோக்கு மாப்பிள்ளை" என்று பெயர் வைத்து விட்டோம்.

ஆனால் நாங்கள் அவருக்கு என்ன பெயர் வைத்து என்ன ? அவர் எங்களுக்கு வைத்த பெயர் தான் நிலைத்துவிட்டது. அதைச் சொன்னால்தான் உங்களுக்கு என்னை யார் என்று புரிந்துகொள்ள முடியும்போல் தோன்றுகிறது....சொல்லுவதற்குச் சற்று வெட்கமாகத் தான் இருக்கிறது. இருந்தாலும் என்ன பண்ணுகிறது? சொல்லுகிறேன் ........**தலை விரிச்சான் !**

....ஆ ! இப்பொழுது ஞாபகம் வந்ததா ? "அடபாவி ! நீயா ? நீயா என்னைப் பார்த்து விடாக்கண்டர் என்று சொல்லுகிறாய் !" என்றுதானே கேட்கிறீர்கள் ?

பின் நீர் செய்கிற காரியத்துக்கு உம்மை விடாக்கண்டர் என்று சொல்லி அழைக்காமல் வேறு என்ன சொல்லி அழைக்கிறது என்று கேட்கிறேன்!

நாற்பது வருஷத்துக்கு முந்தி, நான் மூன்றாவது வகுப்பில் உம்மிடம் கணக்குப் பாடம் கற்றுக் கொண்டிருந்தபொழுது, எனக்கு ஒரு கணக்குப் போட்டீரே, ஞாபகம் இருக்கிறதா? **காலே அரைக் கால் காசுக்கு நாலே யரைக்கால் வாழைக்காய் என்றால் காசுக்கு எத்தனை வாழைக்காய் ?**....இதுதான் நீர் எனக்குப் போட்ட கணக்கு. இந்தக் கணக்குப் போடத் தெரியவில்லை என்பதற்காக என்னை எத்தனை அடி அடித்திருப்பீர் ? எத்தனை மணி நேரம் பெஞ்சு மீது நிறுத்தி வைத்திருப்பீர் ! இருந்தும் உமக்குத் திருப்தி ஏற்படவில்லை என்றே தோன்றுகிறது.

இந்தக் கணக்குக்கு விடை என்னிடமிருந்து எப்படியாவது கிரகித்து விடுவது என்று தீர்மானித்து விட்டீர் என்றே படுகிறது. வயது ஏற, ஏற வாவது எனக்கு இந்தக் கணக்குப் போடத் தெரிகிறதா என்று பார்த்து விடக் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டீர் என்றே தெரிகிறது.

நான் மூன்ருவது வகுப்பை விட்ட ஐந்து வருஷம் கழித்து, அதே மூன்ருவது வகுப்பில் என் தம்பி உங்களிடம் கணக்குப் பாடம் கற்றுக்கொண்டான். அவனுக்கும் இதே கணக்கைப் போட்டு, அவன் போடத் தெரியாமல் விழிக்க, ''வீட்டில் கேட்டுப் போட்டுக்கொண்டு வா'' என்று சொலலி அனுப்பி விட்டீர்.

அவன் உடனே என்னைத்தான் வந்து கேட்டான். கணக்கைப் பார்த்ததுமே இது தங்கள் சூட்சிதான் என்று தெரிந்து கொண்டு விட்டேன். அதற்காகவே எப்படியாவது கணக்கைச் சரியாகப் போட்டுத் தங்களிடம் நல்ல பெயர் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று பார்த்தேன். ஆனல் கணக்குப் போடத் தெரிந்தால் தானே! தெரியவில்லை.

அதுதான் தெரியவில்லை என்று சொல்கிருனே என்று நீர் என்னைச் சும்மா விட்டுவிடக் கூடாதோ? இல்லை. இன்னும் இரண்டு வருஷம் கழித்துத் தங்களிடம் கணக்குப் பாடம் வாசித்த என் தங்கை மூலம் இதே கணக்கைக் கேட்டு அனுப்பினீர். இந்தக் கணக்கைப் போடத் தெரியாது என்று நான் என் தங்கை முன்னிலையிலும் அவமானப் பட வேண்டி வந்தது.

என் தம்பி, என் தங்கை இவர்கள் இருவர் முன்னிலையிலும் நான் அவமானப் பட்டது போதாது என்று இன்னும் மூன்று வருஷங்கள் கழித்து என் மருமாள் முன்னிலையிலும் இதே கணக்குக்காக நான் அவமானப்பட நேர்ந்தது. ''தன் மாமா எவ்வளவோ கெட்டிக்காரர்'' என்று நினைத்துக் கொண்டிருந்த என் மருமாள் சுலோசனுவுக்கு, "பூ! மாமா இவ்வளவுதானு?'' என்று ஆகி விட்டது.

ஐயா, போனல் போகிறது, தம்பி, தங்கை, மருமாள் இவர்கள் என்ன வேண்டுமானுலும் நினைத்துக்கொண்டு போகட்டும். ஆனல் எதற்காக ஐயா என் பிள்ளை யிடமும் இதே கணக்கைக் கேட்டு அனுப்பினீர்? உமக்கு என்ன ஐயா, என் மீது அத்தனை வர்மம்? அப்படியாவது ஒரு பிள்ளை யுடன் விட்டீரா, ஒவ்வொரு பிள்ளை மூலமும், இதே கணக்கைக் கேட்டு அனுப்பிக்கொண்டே இருந்தீர். நானும் ஒவ்வொரு பிள்ளையிடமும் இந்தக் கணக்குப் போடத் தெரியாது என்று சொல்லி அவமானப் பட்டுக்கொண்டே யிருந்தேன்.

இதனல் அவர்கள் என் மீது கொண்டிருந்த நல்லபிப் பிராயத்தையும் இழக்க வேண்டி வந்தது. இந்தக் கணக்கை நீர் என் பிள்ளையிடம் கேட்டு அனுப்ப வேண்டியதுதான் தாமதம், அவன் மீது எனக்கு இருக்கும் 'ஹத்து'ப் போய்விடும். அன்றிலிருந்து அவனைப் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு படிடா, நோட்டை எடுத்துக் கணக்குப் போடுடா என்று சொல்லக் கூட எனக்குத் தைரியம் வராது.

இப்படி என் பிள்ளைகள் என்னை மதிக்காமல் செய்தது போதாது என்று என் பெண்களையும் என்னை மதிக்காமல் செய்தீர்.

இப்பொழுது என்னடா என்றால், என்னை இத்தனை தூரம் அவமானப் படுத்தினது போதாது என்று என் மூத்த பேரனிடமும் இதே கணக்கைக் கேட்டு, என்னைக் கேட்டுத் தெரிந்துகொண்டு வரும்படி மறுபடியும் சொல்லி யிருக்கிறீர்.

நாற்பது வருஷ காலமாக எதற்காக என்னை இப்படி இந்தக் கணக்கைக் கேட்டு நச்சரிக்கிறீர் என்று தெரிய வில்லை. இந்தக் காலத்தில் கடன் கொடுத்தவன் கூட ஆளை இப்படி ஹிம்சிக்கிற தில்லை.

தாங்கள் இப்படி என்னை விடாப்பிடியாகக் கழுத்தறுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து எனக்கு ஒரு சந்தேகம் தட்டுகிறது. ஒருவேளை உங்களுக்கே இந்தக் கணக்குத் தெரியாமல்தான் என்னை நச்சரித்துத் தெரிந்து கொண்டு விடலாம் என்று பார்க்கிறீரோ, என்னமோ !

ஆனால் இனி மேலும் என்னால் இந்த அக்கிரமத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. இந்தப் பேரனுடனாவது தாங்கள் இந்தக் கணக்குக்கு விடைகேட்டு அனுப்பும் வழக்கத்தை நிறுத்திக்கொள்ளும். இல்லையோ, உம் பள்ளிக்கூடத்துக்கு வந்து, ஹெட்மாஸ்டருக்கு முன்னிலையில் உம்மை நிறுத்தி வைத்து, உம்மையே இந்தக் கணக்குக்கு விடை சொல்லச் சொல்லி விடுவேன். ஜாக்கிரதை !

# என்ஜின் விட்ட கண்ணீர்

[எஸ். ஐ. ஆர். ரயில்வே என்ஜின் கொட்டகை. கிழ என்ஜின் ஒன்று வெகு சாவகாசமாகப் புகை விட்டுக் கொண்டிருக்கிறது. அப்பொழுது இந்த என்ஜினின் பிள்ளையான குட்டி என்ஜின் கண்ணீரும், கம்பலையுமாக அழுதுகொண்டே உள்ளே நுழைகிறது. பிள்ளையாண்டானைப் பார்த்ததும் கிழ என்ஜின் திடுக்கிட்டுப் புகை விடுவதை நிறுத்துகிறது.]

**கிழ என்ஜின் :** ஏண்டாப்பா, குழந்தே! ஏன் இப்படி வீட்டுக்குள் காலடி வைக்கிறபோதே அழுது கொண்டே நுழைகிறாய்! யார் உன்னை என்ன சொன்னார்கள் ?

**குட்டி என்ஜின் :** யார் என்னை என்ன சொல்லணும் ? எல்லாம் என் தலை விதியை நினைத்துக் கொண்டுதான் கண்ணீர் விடுகிறேன்.

**கிழஎன்ஜின்:** அப்படிநீஅழும்படி உனக்கு என்னடாப்பா வந்து விட்டது ? உன்னைச் சீரும், சிறப்புமாக நான் வளர்க்கவில்லையா ? காலாகாலத்தில் வண்டி வண்டியாக நிலக்கரியும், குடம் குடமாகத் தண்ணீரும் கொடுத்துக்காப்பாற்ற வில்லையா ? கடைசியில் உன்னை இந்த எஸ். ஐ. ஆர் கம்பெனியில் வேலைக்குச் சேர்த்தபோது, 'ஐயோ ! போயும் போயும் நம் பிள்ளைக்குக் கம்பெனி வேலைதானா கிடைத்தது ?' என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுதோ அக்குறையும் நீங்கிவிட்டது. இந்தக் கம்பெனியை சர்க்காரில் எடுத்துக் கொண்டுவிட்டபடியால் நீ சர்க்கார் உத்தி

யோகஸ்தனுகி விட்டாய். எதற்காக வீணுக வருத்தப் படுகிருய் ?

**குட்டி என்ஜின் :** ஆமாம், இந்த சர்க்கார உத்தியோகத்தைப் பற்றி நீதான் பெருமை அடித்துக் கொள்ள வேண்டும் ! 'எங்காத்துக்காரருக்கு அரண்மனையில் உத்தியோகம்' என்று இந்த மானிடர்கள் சொல்லுவார்களே, அதைப்போல இருக்கிறது நீ பேசுவது ! சர்க்கார் உத்தியோகம் என்று பெருமையாகச் சொல்லுகிருய். அப்படி இந்த சர்க்கார் தங்கள் ஊழியர்களாகிய நம்மை என்ன கவனித்து விட்டார்கள். கேட்கிறேன் !

**கிழ என்ஜின் :** ஏன், கவனிக்காமல் என்ன ?

**குட்டி என்ஜின் :** ஆமாம், ரொம்ப கவனிக்கிருர்கள் ! நீ பத்திரிகை வாசித்தால்தானே உனக்கு விஷயம் தெரியப் போகிறது ?

**கிழ என்ஜின் :** என்ன விஷயம், நீதான் சொல்லேன் !

**குட்டி என்ஜின் :** பென்தால் என்று கேள்விப் பட்டிருக்கிருயா ?

**கிழ என்ஜின் :** என்ன, மென்தாலா ? தலை வலி வந்தால் இந்த மானிடர்கள் உபயோகப் படுத்துவார்களே ஒரு மருந்து, அதுவா ?

**குட்டி என்ஜின் :** அட ஈச்வரா ! நான் அந்த மென்தாலைப் பற்றிச் சொல்லவில்லை, நான் சொல்வது இந்திய ரயில்வே மந்திரி பென்தாலைப்பற்றி. ஆனல் பென்தாலைப்பற்றி நினைத்தாலே எனக்கு மென்தால் வேண்டியிருக்கும் போலிருக்கு.

**கிழ என்ஜின் :** ஏன், என்ன சமாச்சாரம் !

**குட்டி என்ஜின்:** என்ன சமாச்சாரமா? இது வரையில் இந்திய சர்க்கார் சரித்திரத்திலேயே நடக்காத ஒரு காரியத்தைச் செய்து நம் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறாரே அவர்! அது தெரியாதா, உனக்கு? எல்லா ரயில் என்ஜின்களும் இதைச் சொல்லித்தான் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றன. ரயில்வே கட்டணங்களை 25 சதவிகிதம் உயர்த்தப் போகிறேன் என்று சொல்லி விட்டு, கடைசியில் பொதுஜன அபிப்பிராயத்துக்காக உயர்த்தாமல் விட்டு விட்டாரே?

பொது ஜனங்கள் கோரிக்கைக்கு இணங்கும் அநியாயம் இந்திய சரித்திரத்திலேயே இதுவரை நடந்ததுண்டா? நீதான் கேட்டதுண்டா? ரயில்வே கட்டணங்களை உயர்த்தினால் கூட்டம் சற்றுக் குறையும், நாமும் மூச்சுப் பிடிக்க இழுக்க வேண்டாம் என்று பார்த்தால் இப்படி அநியாயம் செய்து விட்டாரே? அப்படியாவது வேளா வேளைக்கு நல்ல ஆகாரமாவது கொடுக்கிறார்களா? அதுவும் கிடையாது. முன்பெல்லாம் சாப்பிடுவதற்கு நிலக்கரி கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் இப்பொழுது சவுக்குக் கட்டைதான் கொடுக்கிறார்கள்.

**கிழ என்ஜின்:** ஆமாம், நீ உன் சௌகரியத்தைப் பற்றியே நினைக்கிறாயே ஒழிய, பொது ஜனங்கள் கோரிக்கைக்கு இது ஒன்றிலாவது சர்க்கார் இணங்கினார்களே என்று அவர்களை மெச்சினாயோ?

**குட்டி என்ஜின்:** ஆமாம், நீதான் அவர்களை மெச்சணும். காந்திஜி முதலிய தலைவர்களை விடுதலை செய்யும்படி எல்லாரும் ஒரு முகமாகக் கேட்டுக்

கொண்டிருக்கிறார்களே, அந்தக் கோரிக்கைக்கு இணங்கினார்களா? தேசிய சர்க்கார் அமைக்க வேண்டும் என்று நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினரும், கட்சி யில்லாதவர்களும் அடித்துக் கொள்கிறார்களே, அந்தக் கோரிக்கைக்கு இணங்கினார்களா? மூடின கள்ளுக் கடைகளைத் திறக்க வேண்டாம் என்று தலைவர்களும் பொது ஜனங்களும் கேட்டுக் கொண்டார்களே, அந்தக் கோரிக்கைக்கு இணங்கினார்களா? இந்தப் பென்தால் மென்தால் முதலியவர்களுக்கு ஒரு ரூபாய்தான் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சட்ட சபையில் சொன்னார்களே, அதை ஒப்புக் கொண்டார்களா?

என்னமோ, போ! ஏண்டா இந்தப் பாழும் என்ஜின் ஜென்மம் எடுத்தோம் என்றிருக்கிறது எனக்கு. யுத்தம் வந்தாலும் வந்தது, ராணுவஸ்தர்களை இழுத்து, இழுத்து எனக்குத் தாவு தீர்ந்துவிட்டது. இந்த ராணுவஸ்தர்கள் எப்பொழுது பார்த்தாலும் கிழக்கும் மேற்கும், குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள். "உங்கள் பிரயாணம் அவசியம்தானா?" என்று பொது ஜனங்களைக் கேட்கிறார்களே யொழிய இவர்களை யாரும் கேட்பதாகத் தெரியவில்லை. எங்கேயாவது மலைப் பள்ளத்தில் விழுந்து தற்கொலை செய்துகொண்டு விடலாமா என்றிருக்கிறது எனக்கு.

[குட்டி என்ஜின் பெருமூச்சு விடுகிறது. கொட்டகை முழுவதும் புகை சூழுகிறது,]

○ ☆ ○

# அந்த நாலு பேர்

"இது என்ன புடவை என்று வாங்கிக் கொண்டு வந்திருக்கேள்? இதைக் கட்டிக் கொண்டால் **நான்கு பேர்** பார்த்து 'நாப்பைக் காட்ட' மாட்டாளோ!" என்கிருள் என் மனைவி.

"எந்தக் காரியம் பண்ணிறைலும் சரி, **நான்கு பேர்** பார்த்து மெச்சும்படியாக இருக்கவேண்டும். தெரிந்ததா?" என்று எனக்கு அடிக்கடி புத்தி கூறுகிருர் என் தகப்பஞர்.

"அந்தப் பயலுக்கு இத்தனை ஆணவமா? **நான்கு பேரிடம்** சொல்லி அவன் மானத்தை வாங்கா விட்டால், பாரும்" என்று அடிக்கடி 'அந்தப் பய' லைப் பற்றிப் பொருமுகிருர் அடுத்த வீட்டு அண்ணு சாமி அய்யர்.

இப்படி எல்லாரும் கண்டு நடுங்கும் அந்த நான்கு பேர் யார்? இவர்களைக் கண்டு ஏன் எல்லாரும் நடுங்குகிருர்கள்? இவர்கள் ஏன் நான் என் மனைவிக்குப் புடவை வாங்கிக்கொண்டு வரும்போதெல்லாம் என்னைப் பார்த்து நாப்பைக் காட்டுகிருர்கள்? இவர்கள் மெச்சும்படி நான் எதற்காகக் காரியங்கள் செய்ய வேண்டும்? இவர்கள் யார் என் காரியங்களைப் பார்த்து மெச்சுவதற்கு? அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் 'அந்தப் பய'லின் மானத்தை வாங்க விரும்பும்போதெல்லாம் இவர்கள் எதற்காக அவருக்கு உடந்தையாகப் பக்கத்தில் நிற்கிருர்கள்?........என்று இப்படியெல்லாம் எனக்கு அடிக்கடி தோன்றுவது உண்டு.

வெகு நாளாகவே இந்த நான்கு பேர் யார் என்று தெரிந்துகொள்ள எனக்கு மிகவும் ஆவல்.

பிறர் காரியங்களைப் பார்த்து மெச்சுவதையோ அல்லது இகழுவதையோ தவிர இவர்களுக்கு உலகில் வேறு ஒரு காரியமும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நான்கு பேர் ஆணு, பெண்ணு என்று கூடத் தெரியவில்லை. எனக்கு என்னமோ, இவர்கள் பெண்ணுய்த்தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆண்களாயிருந்தால் இப்படி அநுவசியமாகப் பிறர் காரியங்களில் தலையிடுவார்களா ?

நான் சிறுவயதில் பாடம் படிக்காமல், பள்ளிக்கூடமும் போகாமல் தத்தாரியாய் அலைந்து கொண்டிருந்தேன். இது விஷயத்தைப் பற்றி என் பெற்றோர்கள் கூட அதிகம் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. ஆனல் நான் இப்படி அலைந்தது இந்த நான்கு பேருக்குப் பிடிக்கவில்லை. உடனே குடுகுடுவென்று என் தாயாரிடம் போனர்கள். "உங்கள் பிள்ளை இப்படித் தத்தாரியாகத் திரிகிறனே! நான்கு பேர் பார்த்து சிரிக்கிறர்களே! அவனைச் சற்றுக் கண்டித்து வைக்கக் கூடாதா?" என்றர்கள்.

அவர்கள் நான்கு பேர் என்று குறிப்பிட்டது தங்களைத்தான். ஆனல், "நாங்கள்தான் உங்கள் பிள்ளையைப் பார்த்துச் சிரித்தோம்" என்று சொன்னல், என் தாயார் தடியை எடுத்துக்கொண்டு அவர்கள் முதுகில் வாங்கி விடுவாள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவேதான் வெகு சாதுரிய

மாக, வேறு யாரோ நான்கு பேர் பார்த்துச் சிரித்ததுபோல் சொல்லி வைத்தார்கள். அவர்கள் அத்தனை சாதுரியமாக நடந்து கொள்ளவே, அவர்கள் முதுகில் விழவேண்டிய அடி என் முதுகில் விழுந்து விட்டது!

பள்ளிக்கூட நாட்களில் அவர்கள் அடிக்கடி என்னைப் பற்றி என் பெற்றோர்களிடம் சொல்லி, அடி வாங்கி வைத்ததைப் பற்றிக்கூட நான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. ஆனால் நான் பெரியவனாகிக் காலேஜுக்குப் போன பிறகு கூட என்னைப் பின் தொடர்ந்து நான் என்ன செய்கிறேன், என்ன பண்ணுகிறேன் என்று கவனித்துக் கொண்டே வந்தார்களே, அது தான் மிகவும் வருத்தமா யிருந்தது.

நான் பி. ஏ. பரீட்சையை எத்தனை தடவை முற்றுகை யிட்டால் இவர்களுக் கென்ன, கேட்கிறேன்! அப்படித்தான் முதல் வருஷத்திலேயே பரீட்சையில் தேறியிருந்தேன், எனக்கு யாராவது வேலை வைத்துக் கொண்டிருந்தார்களா, என்ன? பரீட்சையில் தேறினால் உடனே வேலை தேடவேண்டிய சிரமம் இருக்கிறது. அதற்கு, பரீட்சைக்குப் படிக்கும் சிரமம் மேல் என்பது எனக்கும் தெரியும், அந்த நான்கு பேருக்கும் தெரியும்.

அப்படி யிருந்தும் அந்த நான்குபேர் சும்மா இருந்தார்களா என்ன? கிடையாது. எனக்குப் பெண் கொடுக்க முன் வந்த ஒவ்வொருவர் வீட்டுக்கும் சென்று, நான் அப்பொழுது எத்தனாவது தடவையாக பி. ஏ. பரீட்சைக்குச் சென்று கொண்

டிருக்கிறேன் என்று வெகு அக்கரையாகத் தெரி வித்து விட்டுத் திரும்பினார்கள்.

இதனால் அந்த இடங்கள் எனக்குக் கிடைக்கா மல் போய்விட்டனவே என்ற வருத்தம் கூட எனக் குக் கிடையாது. ஆனால் அப்படி அந்த நான்கு பேர் போய்ச் சொன்ன எல்லா இடங்களிலும் உள்ள பெண்கள் கிட்டத்தட்ட சரசுவின் சிநேகி திகள். இன்றைக்கும், நாளைக்கும் நான் சரசுவை அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்குச் செல் லும் போதெல்லாம் அந்தப் பெண்கள் என்னைப் பார்த்துக் கேலி செய்கிறார்கள். அவர்கள் பிள்ளை யைப் பார்த்து நான் ஏதாவது வேடிக்கையாக, "என்னடா, மூன்றும் கிளாஸா? இது எத்தனும் தடவை?" என்று கேட்டால், "அவர் பி. ஏ.க்கு எத் தனை தடவை போனார் என்று கேளுடா" என்று பையனுக்குத் தாயார் சொல்லிக் கொடுக்கிறாள்!

என் கல்யாணத்தோடேயாவது இந்த நான்கு பேர் என்னைக் கைவிட்டுப் போய் விடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் என்னை விடுவதாயில்லை. நான் எப்படி குடித்தனம் பண்ணு கிறேன், எவ்வளவு பணம் சேர்த்துவைக்கிறேன், சரசுவுடன் என்றைக்குச் சண்டை போடுகிறேன் என்று இதை யெல்லாம் கூர்ந்து கவனித்து, அந் தந்தக் காரியத்துக்கு ஏற்றாற்போல் இகழவோ, புகழவோ செய்துகொண்டு தானிருக்கிறார்கள்.

இப்படி என் குடித்தனக் காரியங்களை ஒன்று விடாமல் கவனித்துக் கொண்டு வருகிற இவர்க ளுக்கு என் கட்டுரைகளையும் படிப்பதற்கு எப்

பொழுது தான் சமயம் கிடைக்கிறதோ, தெரிய வில்லை.

நான் எழுதுகிற கட்டுரைகள் எனக்குக்கூட மறந்து போய் விடுகின்றன. ஆனால் இந்த நான்கு பேர் வேறு வேலையின்றி அவற்றை யெல்லாம் நெட்டுருப் பண்ணி வைத்திருக்கிறார்கள். தங்களுக்கு நல்லது என்று பட்ட கட்டுரைகளை இன்றும் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குப் பிடிக்காத கட்டுரைகளை இன்றும் பழித்துக் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள், ''சபாஷ்! பேஷ்!'' என்று சொல்லும் போதெல்லாம் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ஆனால் திரேதா யுகத்தில் எழுதின கட்டுரைகளைப் பற்றி இன்றும் நன்றா யில்லை யென்று இகழும்போது, இவர்கள் இகழவும் வேண்டாம், புகழவும் வேண்டாம் என்று தோன்று கிறது.

அத்தனைக்கும் நான் கட்டுரைகள் எழுத உட் காரும்போதெல்லாம் இந்த நான்கு பேரை நான் மறந்து விட்டாலும் என் நண்பர் ஞாபகப்படுத்திக் கொண்டே யிருக்கிறார். "நன்றாக எழுதுங்கள். நான்கு பேர் பார்த்து மெச்சும்படி எழுதுங்கள்" என்று நச்சரித்துக்கொண்டே யிருக்கிறார்.

ஆனால் இந்தக் கட்டுரையைப் பற்றி அந்த நான்கு பேர் என்ன சொல்லப் போகிறார்கள் என்று நான் கவலைப்படப் போவதில்லை. சரக்கு பார்த்து நன்றாயிருக்கிறது என்று சொல்லிவிட்ட பிறகு, யார் என்ன சொன்னால் என்ன?

○ ☆ ○

# பரீக்ஷைக்கு முதல் நாள்

[பி. ஏ. பரீக்ஷைக்கு முடிவுகள் வந்து விட்டன. நம்ப பையன் திரும்பவும் 'கோட்'தான். இதைப்பற்றி நான் ஒன்றும் ஆச்சரியப் படவில்லை. ஆனால் அப்படி ஆச்சரியப்படுபவர்கள் யாராவது உண்டென்றால் அவர்கள் தயவு செய்து கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அவன் டயரியைச் சற்று வாசித்துப் பாருங்கள்.]

## ஞாயிற்றுக்கிழமை

காலை 3-30 மணி சனியன் பிடித்த அலாரம் அடிக்க ஆரம்பித்துவிட்டது. மணி நாலுக்குத் தான் அலாரம் வைத்திருந்தேன். அது அரை மணி முன்னதாகவே அடிக்கும் வழக்க முடையதென்று எனக்கு எப்படித் தெரியும்? அலாரம் என்னுடையது அல்ல. பரீக்ஷைக்குப் போகாத பக்கத்து ரூம் பையனிடமிருந்து நேற்றுத்தான் இரவல் வாங்கினேன்.

3-32. இருட்டில் அலாரத்தைத் தடவி நிறுத்தித் தொலைத்தேன்.

3-35. அலாரம் திரும்பவும் அடிக்க ஆரம்பித்து விட்டது. என்ன பெரிய சனியனா யிருக்கிறது! அலாரத்தை நிறுத்துவதற்குப் பதிலாக 'ஸ்டெடி'யிலிருந்த விசையை 'ரிப்பீட்'டுக்குத் தள்ளி விட்டேன் போலும்!

*6-15*. பக்கத்து ரூம் கேசவன் படார் படார் என்று ரூம் கதவை இடிக்க விழித்துக் கொண்டேன். "என்னடா, நாளைக்குப் பரீக்ஷை! அலாரத்தை ஜம்பமாய் வாங்கிக்கொண்டு வந்து விட்டு இப்படித் தூங்குகிறாயே!" என்றான்.

*6-30—6-45*. பல் தேய்த்து, குளித்து பக்கத்திலிருந்த ஹோட்டலுக்கு ஓடிப் போய் ஒரு கப் காப்பி வாங்கி உள்ளே கொட்டிவிட்டுத் திரும்பினேன்.

*6-45—7-30*. சனியன் பிடித்த கிராப்பு! என்ன வாரினாலும் ஒழுங்காக வரமாட்டேன் என்கிறதே!

*7-30*. அப்பாடா! கடைசியாகப் படிக்க உட்கார முடிந்தது! சரி, எத்தனை பக்கம் வாசிக்க வேண்டுமென்று எண்ணிப் பார்ப்போம்.

*8-30*. ஐயையோ! பக்கம் வளர்ந்து கொண்டே போகிறதே! எல்லாவற்றையும் வாசிக்க ஏது டயம்? ..சரி, கோபாலனைப் பார்த்து முக்கியமான கேள்வி என்னென்ன என்று 'டிஸ்கஸ்' பண்ணி விட்டு வருவோம்.

*9-10*. 'டிஸ்கஷன்'. ஏது, சண்டை பிரமாதமாக வளர்ந்து விடும் போல் தோன்றுகிறதே! நான் ஒரு கேள்வி வரும் என்றால் அவன் வராது என்கிறான். பேசாமல் ரூமுக்குத் திரும்புவோம். போதும், போதும்!

*10*. சாப்பாட்டை முடித்துத் தொலைத்து விட்டால் ஒரே யடியாய் வாசிக்க உட்காரலாம்.

10-30. கொஞ்சம் குறைத்துச் சாப்பிட்டிருக்கலாம். இன்றைக்கு என்று வெங்காய சாம்பார் பண்ணித் தொலைத்து விட்டான். பரவாயில்லை. அரை மணி நேரம் கொஞ்சம் 'ரெஸ்டு' எடுத்துக் கொண்டுதான், பிறகு வாசிக்க உட்காருவோமே! என்ன குடி முழுகிப் போய் விடப் போகிறது!........சரி. தூங்கிப் போய் விடப் போகிறோம். அலாரத்தைப் பதினோரு மணிக்கு வைக்க வேண்டும்.

மாலை 4. "காப்பி சாப்பிட வருகிறாயா?" என்று கேசவன் எழுப்ப விழித்துக் கொண்டேன். ஐயையோ, இப்படித் தூங்கிப் போய் விட்டேனே! பதினோரு மணிக்கு அலாரம் வைத்திருந்தேனே! அடடே! அலாரத்துக்குச் சாவி கொடுக்க மறந்து விட்டேன்!

4—5. காப்பி, அரட்டை. விடுகிறார்களா மற்றப் பையன்கள்?

5. 'பாட்மிண்டன், விளையாடலாமா, வேண்டாமா?..........ஒருமணி நேரந்தான் விளையாடுவோமே! இந்த ஒரு மணி நேரத்தில்தானா வந்து விட்டது?

7. இதற்குத்தான் விளையாடவே போகக் கூடாது என்கிறது! ஒரு மணி என்கிறது இரண்டு மணியாகிவிட்டதே!

7-5. என்ன, சாப்பாட்டு மணி அடித்து விட்டானா! என்ன தொல்லை! சரி. இப்பப் போகாவிட்டால் பிறகு சோறு கிடைக்காது.

7-30, கோபாலன் தான் என்ன வாசிக்கிறுன் என்று பார்த்து விட்டு வருவோமே?

8. மணி எட்டாகி விட்டது. இன்றைய ராத்திரி முழுவதும் துளிக்கூடத் தூங்காமல் வாசிக்க வேண்டும். ஒரு கப் டீ குடித்தால் தேவலே. பக்கத்து ஹோட்டலுக்குப் போய் ஒரு கப் 'டீ' குடித்து விட்டு, பிளாஸ்க்கிலும் இரண்டு கப் வாங்கி ஊற்றிக் கொண்டு வருவோம்.

8-50. 'டீ' வாங்கிக்கொண்டு வந்தாச்சு- இனிமேல் நிம்மதியாய் வாசிக்க வேண்டியதுதான்.

9. "யார் அது, கேசவனு?......சினிமாவுக்குப் போவதற்கு ஒரு ரூபாய் வேண்டுமா?........இந்தா!"

9-10. யார் அது ராமனு?........"நோட்ஸ் வேண்டுமா?........இப்பத்தானே நானும் வாசிக்கிறேன்?"

9-20. இப்பதான் 'டீ' குடித்தேன், அதற்குள் 'டீ' கண்ணைச் சொருகுகிறதே!....சீ, என்ன தூக்கக் கலக்கம்! தூக்க மல்லலா கண்ணைச் சொருகுகிறது? சரி, இன்னொரு கப் 'டீ' குடிப்போம்.

9-30. என்ன டீ குடித்து என்ன பிரயோசனம்? கீழே போய்க் கொஞ்சம் முகத்தைக் கழுவிக்கொண்டு வருவோம்.

9-40. மிச்சம் ஒரு கப் டீயையும் குடித்து விட்டு ஒரே யடியாய்த்தான் வாசிக்க ஆரம்பிப்போமே.

9-50. மணி பத்து அடிக்கப் போகிறது. எத்தனை பக்கம் வாசிக்க வேண்டுமென்று கணக்குப் பார்க்கலாம்.

9-55. என்ன, தூக்கம் இப்படிக் கண்ணை மூடு கிறது! ஐந்து நிமிஷ நேரம் சற்றுக் கண்ணை மூடி விட்டு. சரியாகப் பத்து மணியி லிருந்து வாசிக்க ஆரம்பிக்க வேண்டியது.

## திங்கட்கிழமை

காலை 7-5 மணி ஐயையோ! இப்படித் தூங்கி விட்டேனே! இந்தக் கேசவன்தான் நான் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறேன் என்று சற்றுப் பார்க்கக் கூடாதா?

7-5—7-30. பல் தேய்த்துக் காப்பி.

7-30—9. ஐயையோ! 'ஷேவ்' பண்ணிக் கொள்ள வில்லையே! 'பிளேட்' கூட வாங்கி வைத் துக் கொள்ளவில்லை. சரி, சலூனுக்குத்தான் போய் விட்டு வர வேண்டும். சரி, இந்தத் தடவை பரீக்ஷை யில் உருப்பட்டாற் போலத்தான்!

# இடம் கொடுத்தல்

ஏது எதற்கோ சட்டம் போடுகிறவர்கள், இந்த ஸ்திரீகளுக்கு இடம் கொடுக்கும் விஷயமாக ஒரு சட்டம் போடமாட்டேன் என்கிறார்களே, அது தான் பெரிய வயிற்றெரிச்சலாய் இருக்கிறது.

இந்த ஸ்திரீகளுக்கு நாம் வீட்டில் கொடுக்கும் இடம் போதாது என்று வெளியிலும் இடம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

பஸ்ஸில் ஏறினாலும் சரி, டிராமில் ஏறினாலும் சரி, மின்சார ரயிலில் ஏறினாலும் சரி, இந்த ஸ்திரீகளுக்கு இடம் கொடுப்பது என்று ஒரு துர்வழக்கம் ஏற்பட்டு வருகிறது.

கண் முன்னே நடந்து வரும் அந்த அநீதியை, அக்கிரமத்தை, ஆயிரக் கணக்கான புருஷர்கள் தினம் தங்கள் கண்களால் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தும் இது விஷயமாக யாராவது ஒருவர் தம் ஆட்சேபத்தைத் தெரிவிக்க வேண்டுமே, கிடையாது. யாராவது ஒருவர் இதைப் பற்றிப் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுத வேண்டுமே, கிடையாது. யாராவது நான்கு பேர் சேர்ந்து, ஒரு கூட்டம் போட்டு, ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமே, கிடையாது.

எத்தனையோ நூற்றாண்டுகளாகப் புருஷர்களாகிய நமக்கு இருந்து வரும் ஆதிக்கத்தை இந்த வழக்கம் எப்படி மெள்ள, மெள்ள வேரறுக்கப் பார்க்கிறது என்பதை நாம் உணரவேயில்லை. உணர்ந்திருந்தால் இப்படி பஸ்களிலும் டிராம்களிலும், ஸ்திரீகளுக்கு இடம் கொடுக்கமாட்டோம்.

நம் நாட்டில் வெகு காலமாகவே சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை என்று ஒரு வசனம் இருந்து வருகிறது. நம் நாட்டில் ஆண் பிள்ளைகளைக் கண்டு தான் பெண்கள் எழுந்து நிற்பார்கள். எத்தனையோ சமயங்களில் எனக்குப் பாட்டி என்று மதிக்கக் கூடிய ஸ்திரீகள் என்னைக் கண்டு எழுந்து நின்று மரியாதை செய்வதைக் கவனித்திருக்கிறேன். "வேண்டாம், பாட்டி! நீங்கள் எதற்காக என்னைக் கண்டு எழுந்து நிற்கிறீர்கள்!" என்று நான் சொன்னதை அவர்கள் ஆட்சேபித்ததையும் கவனித்திருக்கிறேன்.

(நான் அவர்களைப் பாட்டி என்று கூப்பிட்டதைத்தான் அவர்கள் பலமாக ஆட்சேபித்தார்கள் என்று பின்னால்தான் தெரிந்தது.)

இப்பொழுது என்னடா என்றால் அந்தப் பழைய நாகரிகம் அடியோடு மறைந்து போய் விடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. சின்னஞ் சிறு பெண்களைக் கண்டு, கிழவர்கள் பஸ்களில் எழுந்து நிற்கவேண்டியிருக்கிறது.

ஆகவேதான் இது விஷயமாக ஏதாவது சட்டம் ஏற்பட வேண்டும் என்கிறேன்.

முதலில், ஸ்திரீயைக் கண்டதும் யார் எழுந்து நிற்பது என்று இன்னும் பஸ்களிலும், டிராம்களிலும் ஒரு தீர்மானம் ஏற்படவே இல்லை.

இப்பொழுதெல்லாம் ஒரு ஸ்திரீ பஸ்ஸில் ஏறினதும் பஸ்ஸில் இருக்கிறவர்கள் என்ன பண்ணுகிறார்கள்? முன் சீட்டில் உட்கார்ந்திருப்பவர்கள், பின் சீட்டில் இருப்பவர்களைப் பார்க்கிறார்கள். பின் சீட்டில் உள்ளவர்கள் முன் சீட்டில் உள்ளவர்களைப் பார்க்கிறார்கள். இரண்டு சீட்டிலும் இல்லாமல் வளையத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறவர்கள் உட்கார்ந்திருக்கிறவர்களைப் பார்க்கிறார்கள். யார் இடம் கொடுக்கப்போகிறார்கள் என்று தெரியாமல் தவிக்கும் ஸ்திரீயோ அல்லது பெண்ணோ பஸ்ஸின் அடிப்பாகத்தை வெறிக்கப் பார்க்கிறாள்.

யார் எழுந்து இடம் கொடுப்பது என்று ஒரு சட்டம் ஏற்படாததால்தான் இந்தத் தொல்லையெல்லாம் எழுகிறது.

என்னைக் கேட்டால், ஆண் குலத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகவாவது, வந்து நிற்கும் ஸ்திரீயை விட வயது குறைந்தவர்கள்தான் எழுந்து நிற்கவேண்டும் என்று ஒரு சட்டம் போடலாம்.

ஆனால் இதில் ஒரு சங்கடம் இருக்கிறது. நிற்கும் ஸ்திரீகள் தங்கள் வயது என்ன என்று தெரிவிக்க மாட்டார்கள். அப்படித் தெரிவித்தாலும்,

தங்களுக்கு இயற்கையாக உள்ள சுபாவத்தினுல் மிகவும் குறைத்துத்தான் சொல்வார்களாதலால் அவர்களுக்கும் குறைந்த வயது உள்ளவர்களைக் கண்டு பிடிக்கவேண்டுமானுல், ஐந்தாறு வயதுக் குழந்தைகளைத்தான் கண்டு பிடிக்கவேண்டும்.

ஆகவே இது விஷயத்தில் நாம் ஆண் குலத்தின் கௌரவத்தை விட்டுக் கொடுத்து, இடம் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

இதைவிட பஸ்ஸில் உள்ள சீட்டுகளுக்கு, ஒன்று, இரண்டு என்று எண்ணிக்கை யிட்டு, முதலிலிருந்து ஜனங்கள் எழுந்து நின்று இடம் கொடுக்க வேண்டும் என்று சட்டம் போடலாம்.

அப்பொழுது கடைசி எண்ணிக்கையுள்ள சீட்டுகளுக்கு, நான் நீ என்று புருஷர்களுக்குள் போட்டி ஏற்படும். அப்படிப் போட்டி ஏற்பட்டால்தான், புருஷர்கள் ஸ்திரீகளைக் கண்டு, நடுங்கி எழுந்து நிற்க விரும்பவில்லை, அவர்களுக்குள்ள சுயநலமும் குறைய வில்லை என்பது தெரியும்.

ஸ்திரீகள் என்றுல் யார் என்ற விஷயமாகவும் ஒரு சட்டம் வரவேண்டும். பஸ் பிரயாணிகளிடையில் இது விஷயமாகப் பெருத்த குழப்பம் இருப்பதாகத் தெரிகிறது.

ஒரு காலேஜ் பெண்ணைக் கண்டு எழுந்து நின்று இடம் கொடுக்கும் அதே ஆசாமி, ஒரு கூடைக்கார ஸ்திரீயைக் கண்டு எழுந்து நிற்க மாட்டார்.

பதினெட்டு வயதுப் பெண்ணைக் கண்டு நடுங்கி, எழுந்து நிற்கும் அதே ஆசாமி, எண்பது வயதுக் கிழவியைக் கண்டு எழுந்து நிக்க மாட்டார்.

ஆகவே ஸ்திரீ என்றால் யார் என்பதை நிர்ணயிக்க வேண்டியது மிகவும் அவசியம். நாகரீக மற்றுக் காணப்பட்டாலும், அல்லது வயது அதிகமாகக் காணப்பட்டாலும், ஸ்திரீ வர்க்கத்தைச் சேர்ந்தவர் தான் என்று வைத்துக்கொண்டு அவர்களுக்குப் புருஷர்கள் இடம் கொடுக்க வேண்டியது தானா என்பதை உடனேயே ஒரு கமிட்டி ஏற்படுத்தித் தீர்மானம் செய்யவேண்டும்.

அடுத்த படியாக, குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு வந்து நிற்கும் ஸ்திரீகளுக்கு இடம் கொடுக்கும் விஷயத்தைப் பற்றியும் நாம் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும்.

குழந்தைகளை இடுப்பில் தூக்கிக்கொண்டுவந்து நின்றாலேயே தங்களுக்கு ஒரு இடம் நிச்சயமாகக் கொடுக்கவேண்டும் என்பதுபோல் இந்த ஸ்திரீகள் நினைக்கிறார்கள். குழந்தைகள் இல்லாத ஸ்திரீகள் கூட, இதை உத்தேசித்தே அடுத்த வீட்டுக் குழந்தைகளை இரவல் வாங்கிக்கொண்டு வந்து விடுகிறார்களோ என்று கூடச் சந்தேகமாய் இருக்கிறது. இதைப்போலத் தவறான அபிப்பிராயம் கிடையாது என்பதைக் காட்டுவதற்காக வேணும், குழந்தைகளை நாம் வாங்கி மடியில் வைத்துக்கொள்ள வேண்டுமே யன்றி, அவர்களுக்கு இடம் கொடுக்கவே கூடாது.

ஆனால் அந்தப் பொல்லாத குழந்தைகள் இது விஷயத்தில் நம்முடன் ஒத்துழைக்குமா என்பது சந்தேகந்தான். அந்தப் பொல்லாத வாண்டுகள் தாயார் மடியில் உட்காருமே யொழிய நம் மடியில் உட்காருமா? பலாத்காரத்தினால் உட்கார்த்தி வைத்தாலும், வீல், வீல் என்று அழாதா?

தம்பதி சமேதராக வருபவர்களைப் பற்றிய பிரச்னையைப் பற்றியும் இங்கு இரண்டு வார்த்தை சொல்லத்தான் வேண்டும். இவர்களைக் கண்டதும் ஒருவர் எழுந்து நின்றால் போதாது. இருவர் எழுந்து நிற்க வேண்டும்.

ஆக, பஸ்களிலும், டிராம்களிலும் ஸ்திரீகளுக்கு இடம் கொடுப்பதில் இத்தனை தொல்லை இருக்கிறது.

இவை யெல்லாவற்றையும் உத்தேசித்து, ஸ்திரீகளுக்குப் பஸ்களில் இடம் கொடுப்பதில்லை யென்று ஒரு சட்டம் போடட்டும். இல்லையேல் பஸ்களிலும், டிராம்களிலும், புருஷர்களுக்கென்று சில இடங்கள் ஒதுக்கி வைக்கட்டும்!

Printed at the Commercial Printing and Publishing House, 46, Armeuian Street, Madras 1, MS. 120A–for M/S Nadodi, T'Nagar, MS. 120B.